

# அமுது

தமிழுக்கும் அமுதென்று பேர்

AMUDHU


ஊற்று 4
துளி 05
FEBRUARY 2002

இலங்கையின் மாதாந்த குடும்ப சஞ்சிகை பெப்ரவரி 2002 -30/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










ஆடைகளைக் குறைத்தே
அழகு காட்டுகிறார்கள்
என்று யார் சொன்னது?







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமுதக் கடலில்


அமுத வாசல் ..... 2
ஆற்றில் வாழும் பீவர்கள் ..... 4
பேட்டி:
வன்னி எம்.பி றிசாத் பதுர்தீன் ..... 5
நெற்றிக்கண் ..... 6
சிறுகதை
நாளெனும் (ந)இல்லாள் ..... 7
அதிகாரப்பகிர்வே ..... 8
ஆப்கானிஸ்தானின் மீட்சியும் ..... 10
சிறுகதை
ஒரு மணமான விசயம் ..... 12
இந்நாளில் ..... 14
யுத்தத்தைவிட புகைத்தலால் ..... 16
பரிசுக்கவிதை ..... 19
பரிசுக்கதை ..... 22
பூக்குருவி ..... 25
சிறுகதை
வாக்குமூலம் ..... 26
நீங்கள் தூவிய மலர்கள் ..... 28
உதுவன்கந்த சரதியல் ..... 32
ஒரு பிஞ்சு ..... 34
ஆலிஸின் அற்புத உலகம் ..... 37
கல்வியின் குறிக்கோள் ..... 40
பங்குச்சந்தை
சினிமா:
எம். ஜி. ஆர். கோபப்பட்டார் ..... 42
மருத்துவம்:
மெல்லக்கொல்லும் மென்பானங்கள் ..... 47
நூல் அறிமுகம் ..... 48



பொது நூலகம்
26 FEB 2002
யாழ்ப்பாணம்


உங்கள் ஆக்கங்கள் அபிப்பிராயங்களை
அமுது வரவேற்கிறது.


ஆசிரியர், 'அமுது'
இல: 35, டி.ஆர். விஜேவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10.
தொலைபேசி: 429496,
ஃபக்ஸ்: 429270
E-Mail: webmgr@sri.lanka.net





அரசியல் சாக்கடை அல்ல




யுத்தத்தைவிட புகைத்தலால் சாம்பலாவோரே அதிகம்!




தமிழ்ப்படங்கள் மொத்தம் 5419


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மாத அமுதுவில் பயனுள்ள ஆக்கங்கள் அடங்கியிருந்தன. நெஞ்சை நெகிழவைக்கும் மடவலை தேர்தல் வன்முறைகளை நேரடியாக பார்த்தது போன்ற உணர்வால் கண்கலங்கினேன்.

திக்வெல்லை கமால் எழுதிய 'நல்லபிள்ளை' என்ற சிறுகதை எமது மனங்களை புண்படுத்தியது. பள்ளிவாசல்கள் மூலம்தான் முஸ்லிம்களின் சகல பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டன. குற்றவியல் தடுப்பு 'தண்டனை' பாரபட்சமின்றி நடைமுறைப் படுத்தப்பட்டன. வீட்டுப்பிரச்சினை, காணிப்பிரச்சினை மற்றும் சகாத் சேகரிப்பு பள்ளிவாசல்கள் மூலமே நடைபெற்றன. ஆனால் இக்கதையில் பள்ளிவாசல் உண்மையை பேசமுடியாத, காணமுடியாத இடமாக சித்திரிக்கப்பட்டுள்ளது.




தொடர்ந்தும் இது மாதிரியான கதைகளோ கவிதைகளோ இடம்பெறாமல் தவிர்க்க நடவடிக்கை எடுப்பீர்கள் என்று நம்புகிறோம்.

**எம். இஹ்ஷான்**
**கொழும்பு-06.**

அமுதின் எல்லா அம்சங்களும் பயனுள்ளவையாக இருக்கின்றன. பிரபலமான ஆண்கள் மட்டுமே இதுவரை காதலை சொன்னார்கள். இனி பெண்களும் சொல்வார்களா? பிரபலங்களோடு சாமான்யர்களான எங்கள் காதலையும் அமுது ஏற்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு. என் கவிதைகள் மூலம் அமுதுக்கு நான் ஓரளவு அறிமுகமானவள்.

**றஸீனா புஹார்**
**லுணுகல.**



ஜனவரி இதழில் 'மடவலை இன்னும் கடலலை சோகத்தில்' என்ற கட்டுரையை வாசித்தேன். சிறுபான்மை யோருக்கு எந்தவிதமான உரிமையோ பாதுகாப்போ இல்லை என்பதை உணர்ந்தேன்.

**ஏ.எல்.வி. ரமீஷா**
**அவிசாவளை.**

நான் அமுது சஞ்சிகையின் வாசக பிரியன். அத்துடன் வளர்ந்துவரும் எழுத்தாளன். யாழ்ப்பாணத்தில் வெளிவரும் சஞ்சிகைகள், பத்திரிகைகளுக்கு அவ்வப்போது எழுதியுள்ளேன். வெளிமாவட்டத்தில் உள்ள சஞ்சிகைகளுக்கு இதுவரை எழுதவில்லை. எனது நீண்டநாள் ஆசை அமுது மூலமாக நிறைவேறட்டும்!

**வி.பி. தனேந்திரா**
**யாழ்ப்பாணம்.**

அமுதுக்கு என் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும். பிறந்த இந்த புதுவருடத்தில் நாட்டில் சமாதானமும் சுபீட்சமும் மேம்பட அதற்கு தன்னாலான சேவைகளை அமுது செய்ய எனது வாழ்த்துக்கள்.

**இ. விஜிதரன்**
**கரவெட்டி கிழக்கு.**

அமுதைக் கையிலெடுத்தால் கிடைத்தற்கரிய முத்துக் கையில் கிடைத்ததைப் போல ஓர் பரவசம் எம் உள்ளங்களிலே இழையோடுவதைத் தவிர்க்க முடிவதில்லை.

தொடர்ந்தும் இதே காத்திரத்துடன் வெளிவர ''வர'' என்ன வரவே வேண்டுமென்பதே அமுது அபிமானிகளின் அவா!

**தாராபுரம் நிலாம்**
**கரம்பை - பாலாவி.**

'கடலலை சோகத்தில் மடவலை' என்ற கட்டுரையை வாசித்த எல்லோரும் உலகத்தில் எங்குமே நடக்காத முறையில் கீழ்த்தரமான தேர்தல் கலாசாரத்தை சென்ற அரசு நடத்தியுள்ளதை தெட்டத்தெளிவாக உணர்ந்துகொள்வார்கள்.

**M.J.M.Rafiya**
**Kannattota.**

ஜனவரி மாத இதழ் மிகவும் கனதியாக இருந்தது. சிறுகதை, கவிதை, கட்டுரை-கவிதைகள் பல பரிமாணங்களை தொட்டு, பரந்த தேடலுக்கு எம்மை உட்படுத்தியது.

சினிமா விமர்சனம் நவீன யதார்த்தத்தின் தன்மைகளை முன்நிறுத்தி வரையப்பட்டிருந்தது. காலத்தின் தேவையாகவும் உரத்த சிந்தனைக் களத்தை வேண்டி நிற்பதாகவும் அமையப்பட்டிருந்தது சிறப்பாக இருந்தது.

மடவலை படுகொலை சம்பவத்தை வேறு பத்திரிகை, சஞ்சிகைகளைவிட அமுதே சிறப்பாகவும், உண்மையின் தன்மை கெடாமல் தந்திருந்தது மனநிறைவைத் தருகிறது.

**நட்புடன்**
**உக்குவளை அக்ரம்.**

எல்லாத் தரப்பின் தவறுகளையும் பாரபட்சமின்றி வெளிக் கொணரும் அமுதின் துணிச்சலை அது கைவிட்டுவிடக் கூடாது என்பதே எங்கள் பிரார்த்தனை. புதிய மாற்றங்களோடு சென்றமாத இதழ் வந்திருந்தது. குறை சொல்வதற்கில்லை. ஆனால், முதல் எட்டுப் பக்கங்களிலும் ஜனவரி 2002 என்று போடப்பட்டும், உள் பக்கங்களில் ஜனவரி 2001 என்று போடப்பட்டும் இருந்தது. பழைய நினைப்பு போலும்! காரசாரமான விவாதக்களம் ஒன்றை அமுதில் தொடங்கலாமே? அத்தோடு போட்டி அம்சங்களும் இருந்தால் வாசக எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்ளலாம் என்பதை நான் உங்களுக்குச் சொல்லித்தர வேண்டியதில்லை.

**இரா. மூர்த்தி**
**வவுனியா.**

சென்ற தேர்தல் காலத்தில் நடத்தப்பட்ட அராஜகச் செயல்களினால் உயிரிழந்த முஸ்லிம் வாலிபர்களின் குடும்பங்களுக்கு நிதி உதவி ஒன்றை ஆரம்பித்து அமுது, தினகரன் மூலம் உதவி அளிப்போரின் பெயர்களைப் பிரசுரிக்கலாமே!

**இம்தியாஸ் ஹுசைன்**
**தெரணியகலை.**

சென்ற இதழில் இந்திய-பாகிஸ்தான் யுத்தம் பற்றி எழுதப்பட்டிருப்பதைப் போல ஒவ்வொரு இதழிலும் வெளிநாட்டு நடப்புகளை பற்றிய கண்ணோட்டம் ஒன்றைத் தருவது மிகுந்த பயனுடையது. காந்தியைக் கொன்ற கோட்சேயின் நண்பனது வாக்குமூலத்தைப் புத்தகத்திலிருந்து தந்திருந்ததும் சிறப்பு.

**எம். வானதி**
**கொழும்பு 13.**

'மடவலை கடலலை சோகத்தில்' வாசித்து மிகவும் வேதனைப்பட்டேன். நாட்டையும் முஸ்லிம்களையும் காப்பாற்ற உயிரையே தியாகம் செய்த 12 முஸ்லிம்களுக்கும் ஜன்னதுல் 'பிர்தௌஸ்' சுவர்க்கம் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்திப்பதுடன் நல்லெண்ணம் படைத்த முஸ்லிம் பெரியார்கள் அவர்கள் குடும்பங்களுக்கு உதவி செய்ய முன்வருவார்களென எதிர்பார்க்கின்றேன்.

**M.S.M. Razeek haji**
**Avissawella.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின்
முதலாவது
தேசிய தமிழ் சஞ்சிகை

# நல்லதோர் வீணை செய்தே....





## சுதந்திரம்

எமது தாய்த் திருநாட்டுக்கு சுதந்திரம் கிடைத்து 54 ஆண்டுகளாகின்றன. 5 தசாப்தங்கள் கழிந்தும் நாட்டு மக்களுக்கு உண்மையான சுதந்திரம் இன்னும் கிட்டவில்லை என்பதற்கு சிறந்த சான்றுதான் நாடு இன்று எதிர் நோக்கியுள்ள அவல நிலை.

நாட்டின் 54வது சுதந்திர தினத்தை நினைவுகூரும் இவ்வேளையில் எமது நாட்டில் சமத்துவம் என்பது பேச்சளவிலானதாக இருப்பதாகவே நாம் உணருகின்றோம். இலங்கையில் வாழும் ஒவ்வொரு பிரஜையும் பாரபட்ச மின்றி நடத்தப்படுவதை உறுதிப்படுத்துவதன் மூலமே தான் சுதந்திரப் பிரஜையாக வாழ்கின்றேன் என்ற உணர்வு ஒவ்வொரு மகனுக்கும் ஏற்படும். பொருளாதார ரீதியில் சமத்துவமின்மை, உண்மையான சுதந்திரத்துக்கு தடையாக அமைந்துள்ளது. பொருளாதார சுபீட்சத்தை காண்பதற்கு நாட்டின் சகல பிரஜைகளும் உழைக்க வேண்டும். அதற்கான சூழலை உருவாக்குவது மிக முக்கியமானது.

'நாம் இலங்கையர்' என்ற உணர்வு கட்டியெழுப்பப்பட வேண்டும் என அடிக்கடி வலியுறுத்தப்படுகிறது. அந்த உணர்வினை வளர்ப்பதற்குரிய சூழலை உருவாக்குவது முக்கியமாகும்.

கடந்த பல வருடங்களாக இந்நாட்டில் ஒரு பகுதியான வன்னிப் பிரதேசம் கவனிப்பாரற்று கிடந்தது. அன்றாட உணவுப் பொருட்கள் மருந்து வகைகள் கூட பல கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் அளந்துதான் அனுப்பப்பட்டன. அரசாங்கம் நாட்டின் பிரஜைகளுக்கு வழங்கும் அடிப்படை வசதிகளை வழங்கத் தவறினால் அங்கு வாழும் பிரஜைகளுக்கு சுதந்திரம் உண்டு என்று கூறமுடியுமா?

இந்நாட்டில் அரசாங்கத் தொழில் வாய்ப்புகளில் 5 சதவீத தமிழர்களும் 2.5% முஸ்லிம்களும், 1% மலையகத் தமிழர்களும் இருக்கின்றார்கள் என்றால் சுதந்திரத்தின் ஓர் உண்மையான சமத்துவம் இந்த மக்களுக்கில்லையா என்ற கேள்வி எழுகின்றதல்லவா?

புதிதாகப் பதவியேற்றுள்ள அரசாங்கம் இவற்றைச் சீர்செய்வதற்கு தயாராகுவதனை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. பல வருடங்களாக அரசு வழங்கும் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டிருந்த வன்னிப் பிரதேச மக்களுக்கு அடிப்படை வசதிகளை வழங்குவதற்கான கதவுகளை திறந்து விட்டுள்ளது. 54வது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் இவ்வேளையில் பல வருடம் அடிமைகள் போன்று வாழ்ந்த மக்களுக்கு சுதந்திரக்காற்று வீச முற்பட்டுள்ளதனை அவதானிக்கின்றோம்.

சகலரும் நாம் இலங்கையர் என்ற உணர்வுடன் வாழ்வதற்கான சூழலை உருவாக்கும் ஆரம்ப நடவடிக்கையாக இவை அமைந்துள்ளன. சகல இனத்தவர்களையும் அணைத்துச் செல்லும் சூழ்நிலை சகல துறைகளிலும் உருவாக்கப்படுதல் வேண்டும். இந்த நாடு பெரும்பான்மை இனத்தவர்களுக்கு மட்டும் உரித்தானது என்ற உணர்வு சிறுபான்மை மக்கள் மனதில் உருவாகாத வகையில் நாட்டு விவகாரங்கள் அமைதல் வேண்டும். எமக்குப் பின் சுதந்திரம் கிடைத்து முன்னேற்றம் கண்டுள்ள பல நாடுகளின் வளர்ச்சிக்கு காரணம், பிரஜைகளுக்கு உள்நாட்டில் பாரபட்சமின்றி வாய்ப்புக்கள் வழங்கப்பட்டதாகும்.

சுதந்திரம் கிடைத்து ஐந்தரை தசாப்தத்தை அடையவுள்ள நாம் வந்த வழியைத் திரும்பி ஒருமுறை பார்த்து, விட்ட தவறுகளைத் திருத்தி சகல இனத்தவர்களும் ஒன்றுசேர்ந்து இலங்கையர் என்ற உணர்வுடன் இயங்கும் சூழலை உருவாக்குவதே, 1948ல் நாம் பெற்ற சுதந்திரத்தின் உண்மையான அர்த்தமாக அமையும்.

ஆ-ர்.

நிர்வாக ஆசிரியர், தமிழ் பிரசுரங்கள்
என். எம். அமீன்

பக்க வடிவமைப்பு (கணனி):
ஜெரால்ட் எஸ். நடேசன்
எழுத்தமைப்பு (கணனி):
எஸ். எம். பிரேம்குமார்

அச்சிட்டு வெளியிடுவோர்:
அசோஸியேடட் நியூஸ் பேப்பர்ஸ் ஒஃப் சிலோன் லிமிடெட்
இல. 35, டி.ஆர். விஜேவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10.
Phone: 429496, Fax: 429270
E-Mail: webmgr@sri.lanka.net

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆறுகளில் ஹோட்டல்கள், உல்லாசவிடுதிகள் கட்டப்பட்டிருப்பதைக் கண்டும் கேட்டும் இருக்கின்றோம்.

சில வீடுகள் கோயில்கள் கூட ஆறு, குளம், சமுத்திரங்களில் கட்டியெழுப்பப்பட்டிருக்கின்றன என்பதும் புதிய விஷயமல்ல.

ஆனால் ஆற்றை மறைத்து அணைகட்டி, அதற்குள் வீடுகட்டி வாழுகின்ற விலங்கு பற்றி கேள்விப்பட்டிருக்கின்றீர்களா?

ஆம்! அதுதான் பீவர். அது அமெரிக்காவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் வாழ்கின்ற ஒரு பிராணி. வெள்ளைக்கார எலி என்று வைத்துக்கொள்வோமே!

ஆனால் முற்றிலும் எலியை ஒத்தது அல்ல. எலியைப் போலவே இதுவும் கொறி விலங்கு Rodent இனத்தைச் சேர்ந்ததே.

எலி, சுண்டெலி, அணில், கிளியோபன்றி எல்லாமே பீவர் போன்று கொறி விலங்கு இனத்தைச் சேர்ந்ததுதான்.

மீனைப்போல நன்றாக வேகமாக நீந்தக் கூடியது. இதன் கால்கள் வாத்தின் விரல்களைப் போல சவ்வுடன் இணைக்கப்பட்டிருக்கும். இதன் தட்டையான வாலும் வேகமாக நீந்த இதற்கு உதவுகின்றது.

15 நிமிடங்கள் வரை தண்ணீருக்கடியில் மூச்சு விடாமல் இருக்கக்கூடியது.

பீவர்கள் குட்டிபோட்டு பால் கொடுக்கும். தாய்பீவர் ஆண்டுதோறும் குட்டிகளை ஈனும். ஒருமுறைக்கு இரண்டிலிருந்து எட்டு குட்டிகள் வரை பிறக்கும்.

பகல் நேரங்களில் விளையாடும். ஓடியாடித்திரியும். ஓய்வு எடுக்கும். இரவானதும் உணவு தேடுவதற்காகவும், அணை கட்டும் பணிகளுக்காக மரத்தை வெட்டி கொண்டு வந்து சேர்க்க அரும்பாடுபட்டு உழைக்கின்றன.

மரத்தை பல்லால்தான் வெட்டும். எவ்வளவு பெரிய அடிப்பாகமுள்ள மரத்தையும் 15 நிமிடங்களில் வெட்டிச் சாய்த்துவிடும் வல்லமை கொண்டது.

இவ்வாறு மரத்தை வெட்டி துண்டு துண்டாக்கி அவற்றைக் கொண்டு அணையைக் கட்டுகின்றன.

பற்கள் ஆரஞ்சு நிறத்தில் காணப்படும்.

பீவர்கள் தமது அணைக்கட்டுகளைக் கட்டுவதற்கு மரக்கட்டைகள் மட்டுமல்ல கல், மண் என்பவற்றையும் பயன்படுத்தி உறுதியாக நீர் புகாவண்ணம் கைதேர்ந்த சிவில் என்ஜினியர்களைப் போல நேர்த்தியாக கட்டுகின்றன.

அணைக்குள் தேங்கும் தண்ணீருக்குள் தமது குளுகுளு வீடுகளை அமைத்துக் கொள்கின்றன. ஏசியே தேவையில்லை.

இந்த வீடுகள் ஒரே அறையைக் கொண்டதாகவே பெரும்பாலும் காணப்படும்.

கைதேர்ந்த பொறியியலாளர்கள் கட்டியது போலிருக்கும். ஆற்றில் வெள்ளமே அடித்தாலும் வீடு ஆடாமல் அசையாமல் அப்படியே இருக்கும். நீர் கூடாது. மறுபுறம் வறட்சியினால் நீர் வற்றிப்போனாலும் கூட அணைக்குள் நீர் தேவையான அளவு குறையாமலேயே இருக்கும் என்பதுதான்.

கொறி விலங்குகள் பாலூட்டி வகையை சேர்ந்தவை. நீண்டகூர்மையான பற்களையும் கொண்டவை.

வலிமைமிக்க மரத்தைக்கூட பற்களால் கொறித்து வெட்டிச் சாய்த்து விடுகின்றன.

இவற்றின் உணவு இலைகள், மரப்பட்டைகள், வேர்த்தண்டு போன்றவை. எனவே மரத்தை அணைக்கட்டுக்காக மட்டுமல்ல வயிற்றுப்பாட்டுக்காகவும் வெட்டுகின்றன.

சில பீவர்கள் 30 ஆண்டுகளுக்கும் மேல் உயிர்வாழ்கின்றன.

இவை வாழும் அணைக்குச் செல்லும் வழி நீருக்கு அடியில் இருப்பதால் தமது எதிரிகளிடமிருந்தும் தப்பி விடுகின்றன.

சாதாரணமாக பீவர்களின் அணைக்கட்டு 23 மீட்டர் நீளம் இருக்கும்.

எதிரிகளைக் கண்டவுடன் தமது வாலால் தண்ணீரில் ஆட்டி தமது குடும்பத்தாருக்கு அபாய அறிவிப்பைச் செய்துவிடும்.

தேவையான உணவுகளை தமது வீட்டிலும் சேகரித்து வைத்துக்கொள்ளும்.

பீவர்கள் வட அமெரிக்காவில் ஓரளவு காணப்பட்டாலும் ஐரோப்பிய நாடுகளில் மிகவும் அரிதாகவே காணப்படுகின்றன.

இதன் மென்மையான, பளபளப்பான முடிக்காகவும் தோலுக்காகவும் மனிதர்கள் வேட்டையாடி வருவதால் இதன் தொகை வேகமாக குறைந்து பீவர்களின் இனமே அழிந்துவிடும் அபாயத்தை எதிர் நோக்கியுள்ளன.

இதைக்கேட்டால் எமக்கும் பீடிக்கும் பீவர். ●



# ஆற்றில் அணைகட்டி வாழும் பீவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் சாக்கடை அல்ல அது சொர்க்கமும் அல்ல

**- நிசாத் எம்.பி**

**புதிய பாராளுமன்றத்தில் வயதில் ஆகக்குறைந்த முஸ்லிம் உறுப்பினர் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் வன்னி எம்.பி நிசாத் பதூர்தீன் ஆவார். தமிழ், சிங்கள உறுப்பினர்களையும் சேர்த்தால் இவருக்கு இரண்டாம் இடம். துடிப்பும் வேகமும் கொண்ட இளைஞரான அவர் அமுதுவின் ஐந்து கேள்விகளுக்கு தந்த நெருப்பு பதில்கள்.**

**அமுது:** தங்களின் அரசியல் பிரவேசம் பற்றி...?

**நிசாத்:** நான் எனது பாடசாலை வாழ்க்கையிலேயே சமூக சேவையில் மிகவும் ஆர்வமாக ஈடுபட்டு வந்தவன். இந்த நாட்டுக்கு குறிப்பாக முஸ்லிம் சமூகத்திற்கு என்ன செய்யலாம் என்று நான் எப்போதுமே சிந்தித்தவனாக இருந்திருக்கின்றேன்.

வடமாகாணத்திலிருந்து முஸ்லிம்கள் பலாத்காரமாக விரட்டியடிக்கப்பட்டது என் மனதில் மாறாத கவலையை ஏற்படுத்தியது. மாட மாளிகைகளில் செல்வமும் செல்வாக்கோடும் வாழ்ந்த எமது மக்கள் அகதிகளாகி முகாம்களில் முடங்கி அல்லலுறும் கொடுமையைக் கண்டு கண்ணீர்விட்டு அழுதிருக்கின்றேன். இந்த மக்களுக்கு ஒரு விடிவு கிடைக்காதா என்ற கவலை என்னை ஆட்டிப்படைத்தது.

இந்த மக்களுக்கு ஒரு விடிவு ஏற்பட வேண்டுமானால், இந்த மக்கள் தமது பூர்வீகமான சொந்த மண்ணில் மீண்டும் குடியமர்த்தப்பட வேண்டுமானால் அது அரசியல் தீர்வொன்றின் மூலமே ஏற்பட முடியும் என்பதில் நான் தெளிவான நம்பிக்கை கொண்டிருந்தேன்.
இதற்காக நான் முன்னெடுத்துச் சென்ற பணிகளுக்கு மக்கள் எனக்குத் தந்த அங்கீகாரம்தான் எனது அரசியல் பிரவேசம்.

**அமுது:** தங்களின் எதிர்காலத்திட்டங்கள்?

**நிசாத்:** எந்த நோக்கத்திற்காக, எந்த நம்பிக்கையில் என்னை மக்கள் தமது பிரதிநிதியாக பாராளுமன்றம் அனுப்பினார்களோ அதனை என்னுடைய சகல சக்தியையும் பாவித்து இறைவனின் அருளால் பூர்த்தி செய்து கொடுப்பதுதான் எனது கடந்தகால, நிகழ்கால, எதிர்கால திட்டம். இதுதான் இந்த வேட்கைதான் - நீங்கள் அதனை வெறி என்று கூட எழுதிக் கொள்ளலாம் - அல்லும் பகலும் என் மனதைக் குடைந்து கொண்டிருக்கின்றது. இதுதான் என் முன்னுள்ள பொறுப்பு, கடமை. எதிர்காலத்திட்டம்.



**அமுது:** அரசியலை சாக்கடை என்கிறார்களே! இளம் தலைமுறை அரசியல்வாதி என்ற வகையில் இதனை எப்படி உணர்கின்றீர்கள்?

**நிசாத்:** அது அவரவர் எண்ணம், சிந்தனை, நோக்கத்தைப் பொறுத்தது. தெளிவான சிந்தனையின் அடிப்படையில் அரசியல் மதிக்கப்பட வேண்டும். நீதி, நேர்மை, வாய்மை, இறைவனுக்கு பதில் சொல்ல வேண்டுமே என்ற அச்சம் உள்ளத்தில் நிறைந்திருந்தால் அரசியல் சாக்கடையாகிவிடாது.

பதவி என்பது ஒரு 'அமானத்' - அடகுப் பொருள் அதனை நாம் இறைவனிடம் திருப்பி ஒப்படைக்க வேண்டும் என்ற உணர்வு இருந்தால் மந்திரிப் பதவியை நாம் ஒரு போதும் சொர்க்கமாக கருதிவிடமுடியாது.

**அமுது:** இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் தொடர்பான. தங்களின் நிலைப்பாடு என்ன?

**நிசாத்:** இனங்களுக்கு இடையில் சகோதரத்துவமும் ஒற்றுமையும் நிலவ வேண்டும். அதேபோல, சிங்கள, முஸ்லிம் தமிழ் மக்கள் மத்தியிலும் சமாதான சூழல் நல்லுறவு மலர வேண்டும். அதைவிட வடமாகாணத்தில் முஸ்லிம்கள் மீண்டும் குடியமர்த்தப்பட வேண்டும், அதுவரை அவர்களுக்கான நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டும்.

**அமுது:** இளம் தலைமுறை அரசியல்வாதி என்ற முறையில் மக்களுக்கு தங்களின் செய்தி என்ன?

**நிசாத்:** இனத்துவேசம், பொறாமை உணர்வுகள் நீங்கி மனிதாபிமானம்மிக்க சமுதாயம் ஒன்று மலரவேண்டும்.
நாம் அனைவரும் இலங்கையர் என்ற எண்ணம் மேலோங்க வேண்டும்.
இந்த சமாதான உணர்வுகளோடுதான் எதிர்கால சந்ததியினர் உருவாக்கப்பட வேண்டும்.

இன்றைய அரசியல்வாதிகளை மக்கள் தெளிவான இந்த சமாதான நோக்கத்தோடுதான் பாராளுமன்றத்திற்கு அனுப்பி முன்மாதிரி காட்டியுள்ளனர். அவர்களை நீதி நேர்மையான தலைவர்களாக மாற்ற மக்களால்தான் முடியும்.


கடந்த இரு சகாப்தங்களாக தமிழ், முஸ்லிம் மக்களை இரத்தம் சிந்த வைத்து வரும்,
அப்பாவி உயிர்களை பலிகொண்டுவரும் - கொடிய யுத்தத்தை நிறுத்த வேண்டும், சமாதானம் தோன்ற வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க திறந்த மனதோடு முயற்சிகளை மேற்கொண்டு வரும்போது பேரினவாதிகளிடமிருந்து இதனை தடுத்து நிறுத்தும் வகையில் எதிரான, அபாண்டமான குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகின்றன.

எனினும் பிரமர் ரணிலோடு நம் முஸ்லிம்களின் தேசிய தலைவர் ரவூப் ஹக்கீமும் இணைந்து சமாதானத்தை நிலைநாட்டுவார்... சமாதானம் மலரும் என்பது என் திடமான நம்பிக்கை.

**நேர்முகம்:**
**எம்.எச்.பதி-யுஸ்-ஸமான்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முட்டுக்கட்டைகளை மீறி முன்னேற வேண்டிய சமாதான முயற்சிகள்




நக்கீரன்

ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அளித்த வாக்குறுதியின் பிரகாரம் சமாதானத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து அதற்கான முயற்சிகள் முன்னெடுத்துச் செல்லப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இம்முயற்சியின் முதற் கட்டமாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியத் தலைவர்களைச் சந்தித்து அவர்களின் ஆலோசனைகளையும் பெற்றுள்ளார். அடுத்த கட்ட நடவடிக்கையாக நோர்வேயின் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தின் மூலம் பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

சமாதானத்திற்கு பச்சைக்கொடி காட்டும் முகமாக விடுதலைப் புலிகள் கடந்த டிசம்பர் 24ம் திகதி முதல் யுத்தநிறுத்த அறிவிப்பொன்றைச் செய்திருந்தனர். அதற்குச் சாதகமாக இலங்கை அரசும் மோதல் தவிர்ப்பை பிரகடனம் செய்தது.

இது இவ்வாறிருக்க, இலங்கையில் மூன்றாவது அரசியல் பலம் பொருந்திய கட்சியாக உருவெடுத்துள்ள மக்கள் விடுதலை முன்னணியினரும் இதர இனவாத சக்திகளும் இச்சமாதான முயற்சிகளுக்கு பல முட்டுக்கட்டைகளைப் போட்டு வருகின்றன. இம்முட்டுக்கட்டைகள் எவ்வாறான அரசியல் லாபம் கருதி போடப்படுகின்றன என்பதை சொல்லத் தேவையில்லை.

பொ. ஐ. முன்னணி சமாதானத்திற்கு ஆரதவாகத் தனது நிலைப்பாட்டை தெரிவித்திருந்த போதும் விடுதலைப் புலிகளின் தடை நீக்கத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்பதாகக் கூறுகிறது. மக்கள் விடுதலைமுன்னணியினர் இதே நிலைப்பாட்டுடன் இன்னும் சில கொசுறுகளைச் சேர்த்து, அதாவது தமிழர்களின் பிறந்த மண் வடக்கு - கிழக்கு என்பதையும், விடுதலைப் புலிகள்தான் தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகள் என்பவை போன்ற பல விடயங்களை ஏற்றுக் கொள்ள முடியாது என்று எதிர்ப்பு தெரிவித்து கோஷங்களும், மறியற் போராட்டங்களும், கூட்டங்களும் நடத்தி வலியுறுத்தி வருகின்றனர்.

தடை செய்யப்பட்ட ஒரு இயக்கத்துடனோ அல்லது ஒரு நபருடனோ செய்யப்படும் எந்த ஒரு ஒப்பந்தமும் சட்டப்படி செல்லுபடியற்றது என்பதை அவர்களும் நன்கு உணர்வர். அப்படியிருந்த போதும், 'சமாதானம் வேண்டும் - ஆனால் புலிகளின் தடை நீக்கப்படக் கூடாது' என்று கூறும்போது இச்சமாதானம் ஏற்படக்கூடாது என்று நினைப்பதாகவே தோன்றுகிறது.

ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நிலையான ஒரு சமாதானம் ஏற்பட்டுவிட்டால் அதன் பிறகு நாட்டில் சுபீட்சமும், அபிவிருத்தியும் மேலோங்கிவிடும். பின் ஐ. தே. க. அரசாங்கத்தை இலேசில் அசைக்க முடியாது. அப்படியான ஒரு நிலை ஏற்பட்டால் தங்கள் அரசியல் எதிர்காலத்தில் மண் விழும். சமாதானத்திற்கு எதிரானவர்கள் என்று காட்டிக் கொண்டால் நிலைமை இன்னும் மோசமாகும். இதனால்தான் சமாதானம் வேண்டும் ஆனால் விடுதலைப் புலிகளின் தடை நீக்கப்படக் கூடாது என்று தொட்டிலையும் ஆட்டிக் கொண்டு பிள்ளையையும் கிள்ளிவிட்டுக் கொள்ளும் விளையாட்டில் மக்கள் விடுதலை முன்னணியும், இதர இனவாதக் கட்சிகளும் இறங்கியிருப்பதாக எண்ணத் தோன்றுகிறது.

யுத்தம் மேலும் தொடருமானால் எம் நாட்டில் இன்னும் ஒரு வருட காலத்தில் பஞ்சம் தலைவரித்தாடும் நிலை இருப்பதாக அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். பொருளாதார பின்னடைவிற்கு ஒரேயொரு முக்கிய காரணம் உள்நாட்டு யுத்தம். வெளிநாட்டுக் கடன் சுமையும் மிகவும் அதிகரித்த நிலையில் காணப்படுகிறது.

யுத்தத்திற்காகச் செலவிடப்படும் கோடிக்கணக்கான ரூபாய்களை நாட்டின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தினால் நாம் இந்த நிலையிலிருந்து ஓரளவு மீளலாம். யுத்தம் நிறுத்தப்படுமானால் எம் நாட்டுக்கு உதவி வழங்கும் நாடுகளிடமிருந்து மேலும் உதவிகளைப் பெற்று நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்லாம். இதனால் நாட்டுக்கும் மக்களுக்கும் சுபீட்சம் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

ஆனால் சமாதானத்திற்காகக் கிடைத்திருக்கும் இறுதிச் சந்தர்ப்பம் என்று கருதப்படும் இந்தச் சந்தர்ப்பத்தை சிறந்த முறையில் பயன்படுத்தி நாட்டில் நிலையானதொரு சமாதானத்தை உருவாக்க நம் நாட்டு மக்கள், அரசியல் கட்சிகள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

தற்போது நிரந்தர யுத்த நிறுத்தமொன்றுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன. அப்படியானதொரு நிகழ்வு ஏற்படும் பட்சத்தில் நாட்டின் நலன் கருதி நாம் விரும்பியோ விரும்பாமலோ விடுதலைப் புலிகளின் தடை நீக்கப்பட்டு பேச்சுவார்த்தைகள் மூலம் ஒரு சமரசத் தீர்வு ஏற்படுமானால் அதைவிட சந்தோஷமான விடயம் வேறொன்றுமில்லை.

ஆரம்பத்தில் ஆயுதமேந்திய மக்கள் விடுதலை முன்னணியினர் பின் ஜனநாயக நீரோட்டத்தில் கலந்தது போல் ஆயுதமேந்திய விடுதலைப் புலிகளும் தீவிரவாதத்தை கைவிட்டு விட்டு ஜனநாயக நீரோட்டத்தில் கலந்துவிட்டால் இந்நாட்டில் சமாதானமும் சாந்தியும் ஏற்படும் எனக் கொள்ளலாம்.
இதையே மக்களும் விரும்புகின்றனர். ஐ.தே.க. மீது எத்தகைய குற்றச்சாட்டுக்களை சுமத்திய போதும் மக்கள் சமாதானத்தை மையமாக வைத்தே ஐ. தே. க. விற்கு ஆட்சிப் பலத்தை யும் கொடுத்தனர். எனவே சமாதானம் மலர நாமனைவரும் ஒத்துழைக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுக்க(வி)தை

# நாளெனும் ந(இ)ல்லாள்



விழி திறந்தேன்.

குளிர்தென்றல் வருடிற்று. தன்கடமை தொலைத்திருந்த போர்வை. கால்ப்பிரதேசம் எட்டிக் குளிர்தொட்டது. கவனமாய் இழுத்து மூடினேன்.

மெல்ல சந்தடியற்று வந்திருந்தாள் அவள். உஷா தான்.

மெல்லிளம் குளிரில் சுவாசிக்க அழகான காற்று. எழுந்துகொள்ளச் சொன்னாள்.

மனம் ஆமோதித்தது.

உடல் இல்லை. படுத்திருந்தேன்.

தழுவச்சொன்னாள்.

எந்த வேலையின் ஆரம்பமும் அவளை உசுப்பேற்றும். உணரினும் இரக்கமற்றுத் தள்ளினேன். இணைவு பிடிக்காத புருஷனாய்.

முழந்தாளிட்டுப் பணிந்தாள்.

தன்னை ஒரு பெண்ணெனக் கருதி 'கூடுதல்' தனக்கு நன்மை தரும் என்றாள்.

தள்ளினேன்.

அந்த நோக்கில் நானில்லை.

பல்விளக்குதலே பெரும் வேலையெனும் என் பாசாங்கு. எச்சில் துப்பிக்கொண்டே ஏழு நிமிடங்கள்.

அவளைத் திரும்பிப் பார்க்கவும் பிடிக்காத என்மனம். அவளோ என்னை விலகாதவள் தான் எப்போதும் போல.

கடிகாரம் அலாரித்தது.

பாய்ந்து நிறுத்தினேன். அதன் மென்சங்கீதம் என் காதின் நாராசம்.

அதன் முகத்தில் இவளது வயதை ஒட்டியிருந்தது.

கணங்கள் யாவிலும் இவளது வயது சொல்லி வாழ்ந்து வருகின்றன கடிகாரங்கள்.

உலகெலாம் இவள் வயது தியானித்துப் பறக்கிறது.

நினைவு ஒதுக்கினேன்.

இவளது பெறுமானத்தை உணர்ந்து விடக்கூடாது. எனக்குத் தெரியும். ஆரம்பம் ஒன்றே உணர்தலதும் வேதனையினதும்.

உஷா இப்போது காலை ஆகியிருந்தாள். வயது குதிப்பை விலக்கிற்றோ?

பறவை விலங்குகளின் கானக்கலைவு. மென் சூடேறிய அவள் உடல். இளஞ்சூடான அவள் என் இளமையின் தீவிரம் தூண்டினாள்.

மனம் சலிப்பில் குளித்ததில் அவளை அணைக்கும் ஆர்வம் இழந்தேன்.

வானொலி தட்டினேன். மிதந்த ஒலி அருவியில் நிமிடங் கரைத்தேன்.

செயலற்ற நிமிடங்கள் சாக்கடை நீர்தரும். செயலுறின் சர்க்கரை நீர்தரும்.

அறுபதாகி நிமிடம் மணியாயிற்று. அதையும் கரைத்தேன்.

அவ்வேளை தான் அவர்கள் வந்தார்கள்.

நான்கு நண்பர்கள்.

ஐவரதும் அலட்சியம் அவள் மீது. உரத்துச் சிரித்தோம்.

சந்தோஷமெனும் போக்குக் காட்டி. கோபம் கொண்டாளோ? மதியம் ஆனாள்.

தகிப்பு.

கடிகார முட்கள் பன்னிரண்டில் கூடின. சங்கமம் இனிதென நாளுக்கு இருமுறை. பாதிப்பகல் வயது அவளது.

கண்களில் ஆர்வம் மின்னிற்று. பயன் படுத்தச் சொல்லிய கெஞ்சல் கண்டேன்.

புறக்கணித்தேன்.

சோம்பலில் சுகிக்கும் மனம். மெல்ல நடந்தாள். ஏனோ என்னை விலகி நடப்பதாய்த் தோன்றிற்று.

மாலை ஆனாள் அவள்.

மஞ்சளாய் வெளிறிய நோயாளிப் பெண் போல. உற்சாகஞ் செத்திருந்தாள். தான் மெல்ல நடந்து மனித விலங்குகளை 'ஓட விரட்டும்' சாகசக்காரி. உலகம் ஓடிற்று இவள் முகம் கண்டு பயந்து.

முதிர்ந்திருந்தாள். முகச் சோபை இழப்பு. இனிவராத இளமையைத் தொலைத்திருந்ததில் முகம் இருண்டாள்.

மாலையும் பாலையும் ஒன்று. இரண்டும் வரண்ட வெளி. முற்பகுதி அல்லது பிற்பகுதி உற்சாகமுற்றிருப்பின் மட்டும் இரண்டும் குதூகலிக்கும்.

இரவு மகிழ்வு பொதிந்திருப்பின் மாலைப் பாலத்தில் மென்பாட்டொடு நடக்கலாம். என்னிடம் பாடல்கள் இல்லை.

இருளுள் புதைந்த அவள் முதிர்வு முற்றி மடிந்தாள். என் ஆண்மை பயனின்றிப் போக அவளது கன்னிமை கழியாதே அழிய.

இப்போது ஏக்கம் என்னை மூடிற்று.

இனிய மனைவியாய் வந்தாள்.

அருகிலேயே நின்றாள். இருவருமாகிக் கூடி புதிதாய் ஒன்றைப் பிரசவியாத ஏக்கம் பரவிற்று.

நாளையும் வருவாள் புதிதாக இன்னொருவள் நாளெனும் நல்லாளாய். நிச்சயமாய் நாளை ஏக்கம் எனதில்லை.

- ச.சாரங்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரப் பகிர்வே தீர்வின் திறவுகோல்



எமது இலங்கைத் தாய் நாட்டின் 54வது சுதந்திர தினத்தை இவ்வருடம் பெப்ரவரி 4ம் திகதி நாம் கொண்டாடுகின்ற வேளையில் புதிய அரசியல் சூழ்நிலையொன்றும் நாட்டில் உருவாகி வருகின்றமையைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

முதலாவதாக கடந்த டிசம்பர் 5ம் திகதி நடந்தேறிய பொதுத் தேர்தலில் பதவியிலிருந்த பொதுசன ஐக்கிய முன்னணி அரசை, ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி தோற்கடித்து ஆட்சியைக் கைப்பற்றியதன் மூலம் எமது நாட்டில் இரட்டை அரசியல் அதிகார முறைமை ஒன்று முதல் தடவையாக ஏற்பட்டுள்ளது.

பொதுசன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நாட்டின் நிறைவேற்றதிகாரமுள்ள ஜனாதிபதியாகவும், ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்த ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் பிரதமராகவும் பதவி வகிக்கின்ற ஒரு சூழ்நிலையே அது.

இருவரும் வெவ்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருந்த போதிலும் கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக நாட்டின் ஒருமைப்பாட்டையும் வளர்ச்சியையும் பாதித்து, கடந்த 20 ஆண்டுகளாக நாட்டை யுத்தத்தின் கோரப்பிடியில் வைத்திருக்கின்ற இனப்பிரச்சினை விடயத்தில் முன்னுரிமையுடன் செயற்பட இருதரப்பினரும் ஆர்வம் கொண்டிருப்பது ஒரு நல்ல நிலைமையாகும்.

புதிய அரசாங்கம் நாட்டில் யுத்தத்தை நிறுத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வுகண்டு நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதன் அடிப்படையில் பல முன்முயற்சிகளை எடுத்திருக்கின்றது.

விடுதலைப்புலிகளின் ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்தத்தை வரவேற்று அரசாங்கமும் மோதல் தவிர்ப்பு நிலையை அறிவித்தது. நோர்வேயின் அனுசரணையாளர் பங்களிப்பை புதிய அரசாங்கமும் தொடர்வதுடன், அதற்கு இந்தியாவின் ஆதரவையும் வென்றுள்ளது. வன்னிக்கான பொருளாதாரத் தடையையும் போக்குவரத்து தடையையும் நீக்கியுள்ளது.

அதுமாத்திரமின்றி வவுனியாவிலிருந்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியினூடாக யாழ்ப்பாணம் செல்லும் ஏ9 நெடுஞ்சாலையை போக்குவரத்திற்குத் திறப்பதற்கு இருதரப்பும் இணக்கம் கண்டுள்ளன. தலைநகர் கொழும்பிலும் வடகிழக்கின் பல பகுதிகளிலும் வீதித்தடைகள் அகற்றப்பட்டுள்ளன. விசாரணையின்றி சிறைகளில் வாடும் தமிழ் கைதிகளை விடுவிப்பது குறித்தும், வடக்கு கிழக்கில் மீன்பிடித் தடையை நீக்குவது குறித்தும் அரசாங்கம் தீவிரமாக பரிசீலித்து வருவதாக பொறுப்புவாய்ந்த அமைச்சர்கள் அறிவித்துமுள்ளனர்.

விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரையிலும் கூட தம்மிடம் கைதிகளாகவிருந்த பத்து கப்பல் சிப்பந்திகளை விடுவித்து சமாதான முயற்சிகளுக்கு தமது ஆதரவுச் சமிக்ஞையை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவை ஒருபுறமிருக்க ஜனாதிபதி சந்திரிகாவும் பொதுசன ஐக்கிய முன்னணியின் முக்கிய தலைவர்களும் புதிய அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்கு தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர். இவைகளெல்லாம் நாட்டு மக்களிடையே புதிய நம்பிக்கைகளை உருவாக்கியிருப்பதைக் காணமுடிகின்றது.

தற்பொழுது இரண்டாவது மாதமாகத் தொடர்கின்ற யுத்த நிறுத்தத்தையும் மோதல் தவிர்ப்பையும் நிரந்தர யுத்த நிறுத்தமாக மாற்ற நோர்வே எடுத்துவரும் முயற்சிகள் பலனளிக்க வேண்டுமென்பதே எல்லோரதும் எதிர்பார்ப்பாகும். யுத்த நிறுத்தத்தைக் கண்காணிக்க சர்வதேச உள்ளூர் கண்காணிப்பாளர்களைக் கொண்ட குழு அமைக்கப்படுவதுடன் இருதரப்பினரும் பொதுமக்கள் மத்தியிலும் இதைக் கடைப்பிடிக்க ஏற்பாடுகள் செய்வது அவசியமாகும்.

கடந்த பொதுத்தேர்தலில் மக்கள் வழங்கிய தீர்ப்பு, அரசினதும் பிரதான எதிர்க்கட்சியினதும் சாதகமான நிலைப்பாடுகள் என்பனவற்றுக்கப்பால் சில தீவிர இனவாத சக்திகளின் வழமையான எதிர்ப்பு செயற்பாடுகளும் இல்லாமலில்லை. அத்தீய சக்திகள் போலித்தனமான முறையில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நாட்டைப் பிரிக்க சதி', 'தேசிய சுதந்திரத்திற்கு ஆபத்து' போன்ற கோஷங்களை ஓங்கி ஒலித்துக் கொண்டு வீதிகளில் இறங்கி எதிர்ப்புக் கிளர்ச்சியை உருவாக்க முற்படுகின்றன.

ஆனால் சுதந்திரத்திற்கு பின்னான கடந்த 54 ஆண்டுகால இலங்கை அரசியலின் வரலாற்றை ஆராயும் எவரும் இவர்களது 'பூச்சாண்டி அரசியலை' ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

1948ல் பிரித்தானியர்கள் எமது நாட்டுக்குச் சுதந்திரம் வழங்கி வெளியேறிய போது இந்த நாடு பல்தேசியத் தன்மை வாய்ந்தது என்ற யதார்த்தத்தை கணக்கில் எடுக்கத்தவறி, ஒற்றையாட்சி முறையிலான சோல்பரி அரசியல் அமைப்பை திணித்துவிட்டுச் சென்றதே இன்றைய அவல நிலைக்கு காரணமாகும். அந்த அரசியல் அமைப்புக் காரணமாக தமிழ் மக்கள் ஆட்சி அதிகாரத்தில் பங்கு வகிக்கும் நிலைமை இல்லாதொழிக்கப் பட்டதுடன், அவர்கள் தமது சொந்த இனத்துவக் கட்சிகளை உருவாக்கவும் செயற்படவும் வழிவகுத்தது.

இந்த யதார்த்தத்தை பின்நாளில் உணர்ந்தே, 1957ல் பண்டாரநாயக்க-செல்வநாயகம் உடன்படிக்கையும், 1965ல் டட்லிசேனநாயக்க - செல்வநாயகம் உடன்படிக்கையும், 1978ல் மாவட்ட அபிவிருத்திச் சபை ஒப்பந்தமும், 1987ல் இலங்கை-இந்திய ஒப்பந்தமும் உருவாக்கப்பட்டன. இவ்வொப்பந்தங்கள் நடைமுறைப் படுத்தப்படாததே தமிழ்மக்களின் விரக்திக்கும் பின்னர் அவர்கள் ஆயுதப் போராட்டத்தை ஆதரித்ததிற்கும் காரணமாய் அமைந்தது.



இந்த நாட்டில் சிங்கள மக்களைப் போலவே வடக்கு கிழக்கு தமிழ் மக்களும் பூர்வீகமான வரலாற்றைக் கொண்டவர்கள் என்பதை வரலாற்றுச் சான்றுகள் மிகவும் தெளிவாக நிரூபித்துள்ளன. அதேபோல முஸ்லீம் மக்களும் நீண்ட வரலாற்றைக் கொண்டிருப்பதுடன், மலையகத் தமிழ் மக்களும் பல தலைமுறைகளாக இந்நாட்டையே தமது தாய்நாடாகக் கொண்டிருக்கின்றனர். எனவே இந்த மக்கள் மத்தியில் உண்மையான ஒற்றுமையை ஏற்படுத்தி நாட்டை சுபீட்சப் பாதையில் முன்னெடுத்துச் செல்வதானால் ஒவ்வொரு இன மக்களினதும் தனித்துவங்கள் அங்கீகரிக்கப்பட்டு அவர்களது அடிப்படை உரிமைகள் பேணப் படவேண்டும். இன, மத, மொழி, சாதி, பிரதேச வேறுபாடுகளுக் கப்பால் மனிதன் என்ற அடிப்படை நிலை முதன்மையானதாக நிலைநாட்டப்பட வேண்டும்.

அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அவர்கள் முன்னைய அரசில் ஒரு சிரேஷ்ட அமைச்சராக விளங்கியதுடன் அவ்வரசால் முன்வைக்கப்பட்ட தீர்வு ஆலோசனைகளின் சிற்பியுமாவார். அவ்வாலோசனைகளைத் தயாரிப்பதில் தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பி. காலஞ்சென்ற நீலன் திருச்செல்வம் அவர்கள் முக்கிய பங்களிப்பை வழங்கியிருந்தார் என்பதும் குறிப்பிடத் தக்கது.

அண்மையில் வவுனியாவுக்கு விஜயம் செய்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஆஸ்லி வில்ஸ் அவர்கள், இலங்கை பிளவுபடுவதை அமெரிக்கா ஒரு போதும் ஆதரிக்காது என்று தெரிவித்ததுடன் (சென்ற வருடம் யாழ்ப்பாணம் சென்றிருந்தபோதும் இக் கருத்தை வலியுறுத்தியிருந்தார்) ஒற்றையாட்சி முறையைக் கைவிட்டு இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் எனவும் கூறியுள்ளார். அத்துடன் அமெரிக்காவிலுள்ளது போன்ற சமஷ்டி அமைப்பு முறை சிறந்தது என்பதையும் சுட்டிக்காட்டியிருந்தார்.

அமெரிக்காவின் அரசியல் அமைப்பின் பிரகாரம் அங்குள்ள சமஷ்டி அரசுகள் கலைக்கப்பட முடியாத நிரந்தரத் தன்மை வாய்ந்தவை என்பது குறிப்பிடத் தக்கது.

எனவே புதிய அரசு கடந்த காலத்தில் ஏற்பட்ட தீர்வு முயற்சிகளை எல்லாம் கவனத்தில் எடுத்து அதன் அனுபவங்களூடாக நல்லதொரு தீர்வுத்திட்டத்தை முன்வைத்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டு சமாதானபூர்வமானதும் சந்தோஷமானதுமான ஒரு வாழ்க்கையை ஒவ்வொரு இலங்கையனுக்கும் ஏற்படுத்தும் என்பதே 54வது சுதந்திர தினத்தைக் கொண்டாடுகின்ற இவ்வேளையில் சகல இன மக்களினதும் எதிர்பார்ப்பாகும்.

எனவே இன்றைய எமது நாட்டின் அழிவுநிலை, சர்வதேச சூழ்நிலை, பிராந்திய நிலவரம் என்பவற்றைக் கவனத்தில் கொண்டு சில விட்டுக்கொடுப்புகளுடனான ஒரு நிரந்தரத் தீர்வை அடைய அரசாங்கமும் விடுதலைப் புலிகள் அமைப்பும் முன்முயற்சிகளை தீவிரமாகவும் விரிவாகவும் மேற்கொள்வது அவசியம்.

- பி. எஸ். கிருஷ்ணன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆப்கானிஸ்தானின் மீட்சியும் பிராந்தியத்தின் எதிர்காலமும்

ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் ஆட்சி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு தற்காலிகப் பிரதமர் ஹமீட் கார்சே தலைமையிலான இடைக்கால அரசு பதவியில் அமர்த்தப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து அமெரிக்கா தலைமையிலான மேற்கு உலகும் ரஷ்யா, சீனா, இந்தியா மற்றும் பல நாடுகளும் ஆப்கானை மீளக் கட்டியெழுப்பும் பணியை ஆரம்பிக்கவுள்ளன. ஆப்கானின் புனர்நிர்மாணத்தில் ஐக்கிய நாடுகள் சபையும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களும் முக்கியமான பங்குவகிக்க உள்ளன.

இருந்தபோதும் ஆப்கானிஸ்தானில் ஏற்பட்டுள்ள ஆட்சிமாற்றம் அந்நாட்டு மக்களுக்கு மட்டுமின்றி உலக மக்களுக்கும் மகிழ்ச்சியைக் கொடுக்கின்ற அதேவேளையில், அந்நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமைகளுக் கூடாக இப்பிராந்தியத்தில் ஏற்பட்டிருக்கின்ற அரசியல்நிலைமை அயலிலுள்ள பல நாடுகளுக்குக் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

முன்னைய சோவியத் யூனியனால் ஆதரவளிக்கப்பட்ட டாக்டர் நஜிபுல்லாவின் ஆப்கான் அரசைக் கவிழ்ப்பதில் முஜாஹிதீன்கள், தலிபான்கள் போன்ற ஆப்கான் கிளர்ச்சிக் குழுக்களுக்கு அமெரிக்காவும் அதன் ஐரோப்பியக் கூட்டாளிகளும், பாகிஸ்தானும் வெளிப்படையாகவே ஆதரவும் உதவியும் வழங்கியதை உலகறியும்.

நஜிபுல்லாவின் அரசு வீழ்த்தப்பட்டு அவரும் அவரது சகபாடிகளும் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டபின் முஜாஹிதீன்களுக்கும் தலிபான்களுக்கும் இடையில் ஆட்சி அதிகாரம் சம்பந்தமாகச் சண்டை ஆரம்பமானது.

இந்தக் கட்டத்திலேயே அமெரிக்க சீ.ஐ.ஏ உளவு நிறுவனத்தால் பயிற்சியளிக்கப்பட்ட பின்லேடனும் அவரது அல்கைதா இயக்கமும் தலிபான்களுக்கு ஆதரவாக களத்தில் இறங்கினர். பின்னர் தலிபான்களின் ஆட்சி அமைந்தவுடன் அவர்களின் ஆதரவுடன் அங்கு தளமமைத்துக்கொண்டு உலகப் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடத்தொடங்கினர்.

பின்லேடன் குழுவினரின் பயங்கரவாதச் செயல்களின் உச்ச விளைவை 2001 செப் 11ம் திகதி அமெரிக்காவின் இரட்டை வர்த்தகக் கோபுரங்கள் மீதும் பென்டகன் மீதும் நடாத்திய கோரத்தாக்குதலின்போது உலக மக்கள் கண்டனர். அமெரிக்காவால் உருவாக்கப்பட்ட பயங்கரவாதிகளே இறுதியில் அமெரிக்காவின் வயிற்றில் புளியைக் கரைத்துவிட்டனர்.

'சோவியத் கம்யூனிஸ ஆதிக்க எதிர்ப்பு' என்ற போர்வையில் டாக்டர் நஜிபுல்லாவின் ஆட்சியைக் கவிழ்த்த அமெரிக்க-பிரிட்டிஷ் கூட்டணி, அந்நாட்டில் உள்நாட்டுச் சமாதானத்தையோ, ஜனநாயக ஆட்சியையோ, பொருளாதாரச் சீரமைப்பையோ கொண்டுவரத் தவறியதன் விளைவாகவே ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் தீவிர இஸ்லாமிய அடிப்படைவாத அரசு அமைய வாய்ப்பாகியது. அமெரிக்கக் கூட்டணியின் அன்றைய ஒரேநோக்கம் சோவியத் ஆதரவு அரசை வீழ்த்துவதேயொழிய ஐக்கியப்பட்ட பலம் பொருந்திய ஆப்கான் உருவாவதல்ல.

ஆனால் விளைவு அமெரிக்காவையே உலுக்கிய பின்னர்தான் அமெரிக்கா 'உலகளாவிய பயங்கரவாதம்' பற்றி அலறவும், தலிபான்களின் அரசைக் கவிழ்க்கவும் வழி வகுத்தது.

தலிபான் அரசு வீழ்த்தப்பட வேண்டும் என்பதில் உலகில் பெரும்பாலானோருக்குக் கருத்து வேறுபாடு இருக்கவில்லை. ஏனெனில் தலிபான்கள் தமது அரசியல் எதிரிகளை மட்டும் அழிக்கவில்லை. தமது நாட்டு மக்களின் ஜனநாயக வாழ்வையும் பொருளாதாரக் கட்டுமானங்களையும் கலாசாரப் பொக்கிசங்களையுமே துவம்சம் செய்தனர். குறிப்பாக ஆப்கானியப் பெண்கள் உலகின் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய அடிமைச் சமூகப் பெண்களையும் விடக்கேவலமான நிலையில் தலிபான்களால் நடாத்தப்பட்டனர்.

உள்நாட்டில் தலிபான்களின் செயல்கள் ஒருபுறமிருக்க பிராந்தியத்திலும் உலக அரங்கிலும் தலிபான்களின் ஆதரவுடன் அடிப்படைவாதச் செயற்பாடுகள் பயங்கரவாதமாக உருவெடுக்க அந்நாட்டு மண் களமாகப் பயன்பட்டது. இவையெல்லாம் சேர்ந்துதான் தலிபான்களின் வீழ்ச்சிக்கான அடிப்படையை உருவாக்கின. இருந்தபோதும் தலிபான்களின் வீழ்ச்சியுடன் ஆப்கான் புது உற்சாகத்துடன் துள்ளி எழுந்துவிடப் போவதில்லை.

ஏனெனில் புதிய இடைக்காலஅரசில் ஆப்கானிஸ்தானின் பல்வேறு பழங்குடி இனமக்களின் பிரதிநிதிகள் இடம்பெற்றுள்ள போதிலும் சனத்தொகையில் பெரும்பான்மையினரான பஸ்தூன் மக்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை என்ற அதிருப்தி அம்மக்களிடையே நிலவுகின்றது.

இந்த இடைவெளியை எதிர்காலத்தில் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பு இன்னமும் முற்றாகத் துடைத்தெறியப்படாத நிலையில் இருக்கின்ற தலிபான், அல்கைதா அமைப்புகளுக்கு இருக்கின்றது.

அவ்வியக்கங்களின் பிரதான தலைவர்களான ஓமர், பின்லேடன் போன்றோரை அமெரிக்க-பிரிட்டிஷ் படைகளால் இவ்வளவு நாட்களாக நெருங்க முடியாமல் இருப்பதே அந்த இயக்கங்கள் இன்னமும் வலிமையுடன் இருப்பதற்கும் அவற்றிற்கு வெளியுலக உதவி இருப்பதற்கும் போதிய சான்றுகளாகும்.

இருப்பினும் ஆப்கானில் புதிய இடைக்கால அரசு அமைந்து இருப்பதும் எதிர்காலத்தில் அங்கு ஜனநாயகத்தேர்தல்கள் நடைபெறவிருப்பதும் ஆப்கானை மீளக்கட்டியெழுப்புவதில் உலக நாடுகள் அக்கறை கொண்டிருப்பதும் நல்ல சகுனங்களாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலிபான்களின் வீழ்ச்சி இப்பிராந்தியத்திலும் உலகிலும் சுதந்திரத்திற்கும் விடுதலைக்கும் போராடுகின்ற மக்களுக்கு பல சிறந்த பாடங்களையும் வழங்கியுள்ளது. ஒரு நாட்டினது அல்லது இனத்தினது கோரிக்கைகள் எவ்வளவு நியாயமானவையாக இருப்பினும் அதை அடைவதற்கான வழிமுறைகளாக அடிப்படைவாதமும் பயங்கரவாதமும் கைக்கொள்ளப்படுமானால் அப்போராட்டம் இறுதியில் தோல்வியையே தழுவும் என்பதைத் தலிபான்களின் அனுபவம் நிரூபித்துள்ளது.

அதுமாத்திரமின்றி இன்றைய ஆப்கானிஸ்தானின் நிலையை நோக்கும்போது, தலிபான்களின் வீழ்ச்சியின் பின்னர் அங்கு ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதில் புதிய அரசின் பின்னால் பலம் வாய்ந்த மேற்கத்திய சக்திகள் இருப்பதையும் அவதானிக்கமுடிகின்றது. இந்நிலைமை புதிய பல கவலைகளை, பிரச்சினைகளை இப்பிராந்திய மக்கள், நாடுகள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

‘உலகப் பயங்கரவாத எதிர்ப்பு’ என்ற போர்வையில் ஆப்கானை வல்லரசு சக்திகள் தளமாகப் பாவிப்பதும், அந்நாட்டை மிதிபலகையாகப் பாவித்து இப்பிராந்தியத்திலுள்ள மக்களின் நியாயமான உரிமைப் போராட்டங்களை நசுக்குவதும் அதுமட்டுமின்றி, அப்போராட்டங்களின் தாற்பரியத்தை ஏற்க மறுத்து வருகின்ற, அரசுகளின் தேசிய இறைமைகளை கேள்விக்குள்ளாக்குவதும் ஏற்பட வழிபிறக்கலாம் என அவதானிகள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இப்பிராந்தியத்திலுள்ள உள்நாட்டு மோதல்களுக்குக் காரணமான இனப்பிரச்சினையையும் வெளி மோதலுக்கான எல்லைப் பிரச்சினைகளையும் கடந்தகாலத்தில் இப்பிராந்தியத்தைத் தம்வசம் வைத்திருந்த பிரித்தானிய காலனியவாதிகள் உருவாக்கி விட்டுச் சென்றதை மக்கள் அறிவர்.

இப்பொழுது அம் மோதல்களைத் தீர்க்கும் போர்வையில் உலகின் முதல்தர வல்லரசான அமெரிக்கா இப்பிராந்தியத்தில் காலூன்ற முனைவதும், அதற்குப் பழைய எஜமானரான பிரித்தானியா துணைபுரிவதும் எதிர்காலத்தை அச்சத்துடன் நோக்க வைக்கின்றது.

இந்தோசீனாவில் பிரான்சின் இடத்தை அமெரிக்கா நிரப்ப முயன்றதன் விளைவாக வியட்நாம் யுத்தம் ஏற்பட்டதை தென்னாசிய மக்களும் ‘சார்க்’ அமைப்பு நாடுகளும் மறந்து செயற்பட்டால் உருவாகும் விளைவுகள் மிகவும் பாரதூரமானவையாக அமைந்துவிடவும் கூடும்.

குறிப்பாக அணுவாயுதப் பற்களுடனும் நகங்களுடனும் எதிரும் புதிருமாக நின்று அரசியல் மோதலில் இந்தியாவும் பாகிஸ்தானும் இறங்கியிருக்கின்ற சூழலில் இன்றைய மேற்கத்திய வல்லரசுகள் பற்றிய எச்சரிக்கை உணர்வு மேலும் பலமடங்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

- எஸ். சண்முகம்




*சாதிப் பெருமை*
*தானாய் அழியும்!*
*சமயப் பெருமை*
*எளிதாய் மறையும்!*
*நீதி தேவன்*
*பணிகள் குறையும்!*
*நிலவைப் போலே*
*உலகம் ஒளிரும்!*
*காதல் செய்வீர்!*
*காதல் செய்வீர்!*

*- சிவா*




சில நாட்களுக்கு முன் ‘அந்த்ராக்ஸ்’ கிருமியின் அபாயம் பற்றி உலகம் முழுவதும் பயமும் பரபரப்பும் நிலவியது. இலங்கையையும் அது பற்றிப் பிடிக்கத் தவறவில்லை. கொழும்பில் சில வெளிநாட்டுத் தூதரகங்கள் தற்காலிகமாக மூடப்பட்டதுடன் ‘அந்த்ராக்ஸ்’ பரிசோதனை நிலையங்களும் பல இடங்களில் நிறுவப்பட்டன.

அமெரிக்கா ஆப்கானிஸ்தான் மீது தலிபான்களையும் பின்லேடனின் அல்கைடா அமைப்பினரையும் அழிக்கும் நோக்கில் பெரும் எடுப்பிலான விமானக் குண்டுவீச்சுக்களை ஆரம்பித்த வேளையிலேயே இந்த ‘அந்த்ரக்ஸ்’ பீதி பரப்பப்பட்டது. இந்தப் பீதியினால் பீதியுற்ற உலகமக்கள், குறிப்பாக அமெரிக்க - ஐரோப்பிய மக்கள் அமெரிக்காவின் நடவடிக்கைகளை பொதுவாக எதிர்க்கும் தமது வழமையான எதிர்ப்பு நடவடிக்கைகளைக் கைவிட இது வழிகோலியது.

ஆனால் உண்மை என்னவெனில் பின்லேடன் போன்ற இஸ்லாமியப் பயங்கரவாதிகளின் கைகளில் இந்த ‘அந்த்ராக்ஸ்’ கிருமி இருக்கின்றதோ இல்லையோ அமெரிக்காவின் கிறிஸ்தவ வெள்ளை இனப் பயங்கரவாதக் கும்பல்களிடம் இவை எப்பொழுதோ போய்ச் சேர்ந்துவிட்டன. இவ் வெள்ளையினக் கிறிஸ்தவப் பயங்கரவாதிகள் 1999ம் ஆண்டு ஜனவரியில் கலிபோர்னியா மாநிலத்தில் 30க்கும் மேற்பட்ட அரசஉயர்அதிகாரிகளுக்கு ‘அந்த்ராக்ஸ்’ கிருமி கடிதங்களை அனுப்பி எச்சரித்துள்ளனர். 2000 ஆண்டிலும் அமெரிக்கா முழுவதும் 1000க்கும் மேலான ‘அந்த்ராக்ஸ்’ கடிதங்களை இப்பயங்கரவாதிகள் அனுப்பியுள்ளனர் எனப் புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

இத்தகைய வெள்ளையின கிறிஸ்தவப் பயங்கரவாதிகள் 40,000க்கும் மேலாக அமெரிக்கா முழுவதும் செயற்படுவதாக அமெரிக்க சமஷ்டி புலனாய்வு நிறுவனமான FBI ஒப்புக்கொண்டுள்ளது. இப்பயங்கரவாதிகளைப் பற்றிய பல திடுக்கிடும் தகவல்களை பிரபல அமெரிக்கா நாளேடான ‘த ஹெறோல்ட்’ கடந்த அக்டோபரில் வெளியிட்டது. அதிநவீன ஆயுதங்களுடன் நவீன தகவல்தொடர்பு வலைப் பின்னலையும் கொண்டுள்ள இப்பயங்கரவாதிகள் ‘சுடு கருவிகளும் சுதந்திரமும்’ என்ற பெயரில் அவ்வப்போது செய்திக் கடிதங்களையும் வெளியிடுகின்றனர்.

இவ்வெள்ளையினப் பயங்கரவாதிகளின் இலக்கு இவர்களால் ‘சாக்கடை மக்கள்’ என வர்ணிக்கப்படுகின்ற கறுப்பினமக்கள், யூதர்கள், இஸ்லாமியர்கள், ஆசிய சமூகத்தினர் என்போரே. இப்பயங்கரவாதிகள் ‘தேசியக்கூட்டணி’ அமைப்பொன்றின் மூலம் செயற்படுவதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக சிந்திக்கவைக்கும் ஒரு உண்மை என்னவெனில் உலகில் அமெரிக்காவிலும் ரஷ்யாவிலும் மட்டுமே ‘அந்த்ராக்ஸ்’ கிருமிகளைக்கொண்ட வெள்ளைப் பொடி தயாரிக்கும் இராசாயன ஆலைகள் உள்ளன என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு மணமான விசயம்

சிறுகதை

தொல்புரம் சி. கதிர்காமநாதன்

அவசர அவசரமாக வெளியில் போக முடிவு செய்கின்றீர்கள். மறுகணம் வழமையில் நீங்கள் போகும் பாதையில் சைக்கிளில் போய்க் கொண்டு இருக்கிறீர்கள். கடைக்கார ஆனந்தன் வீடு, ரோசாக்கா வீடு, சுகாதார திணைக்களத்தில் வேலை செய்யும் பிரதீபன் வீடு, சங்கானை ப.நோ.கூ.சங்கத்தில் வேலை செய்யும் சபாரத்தினம் வீடு எல்லாவற்றையும் தாண்டிப்போக அடுத்து வருவது கொழும்பிலே செற்றிலாகிவிட்ட வசந்தியின் வீடு.

எட்டுப் பரப்புக் காணிக்குள் அந்த வீடு ''வடக்கு கிழக்கில் வாழும் தமிழர்களின்'' இதயம் போல் இடிந்து போய் இருக்கின்றது. இரண்டு புளிய மரங்கள் பலகுழல் எறிகணை போல் நிமிர்ந்து நிற்கின்றன.

இடிந்து போன வீட்டில் ஜன்னல் கதவுகளைக் காணவில்லை.

என்ன அவைகள் களவு போய் விட்டதா? சீச்சீ இல்லையில்லை. களவு போகவில்லை. வசந்தி மீது பாசம் கொண்டவர்கள் அவரது ஞாபகார்த்தமாக அவற்றினை எடுத்து வைத்துள்ளார்கள் அவ்வளவுதான்.

என்ன நான் சொல்வது சரிதானே? அடப்பாவி வயிறு பத்தி எரிகின்றது. என்ன, அவரது ஞாபகார்த்தமாக எடுத்துக் கொண்டு போய்விட்டார்களா? பட்டப் பகலிலே எல்லாவற்றையும் கழற்றிக் கொண்டு போய் விட்டார்களே? களவு எடுத்துக் கொண்டு போன ஜன்னல், கதவு மற்றைய தளபாடங்களை வேறு இடத்தில் விற்பார்களா?

யுத்தம் திடீரென வெடித்து அதனால் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள தலைதெறிக்க ஓடி இடம்பெயரும் மக்கள் யுத்தம் தணிந்து சில நாட்கள் கழித்து மறுபடியும் தமது வீடுகளைப் போய்ப் பார்த்தால் வீடுகள் தீர்வுத்திட்டம் மாதிரி அரைகுறையாய் நிற்கும்.

இவர்கள் படும் வேதனை திருடிக் கொண்டு போனவர்களுக்குத் தெரியாதா? திருடிப் போகிறவர்கள் யார்? வேற்றுக் கிராமவாசிகளா? அல்லது எம்மீது துவேசம் கொண்ட வேற்று இனத்தவரா?

இவர்கள் யாருமே இல்லை. அவர்கள் எமது மொழி பேசும் இனத்தவர்கள் தான். நீங்கள் இந்தக் கொடிய சமூக விரோதசெயலைச் செய்தால்.... நல்ல காலம் அனுமன் இப்போது இங்கில்லை. இருந்திருந்தால் அவனைக் கைக்குள் போட்டு காணியோடு சேர்த்துக் கிளப்பிக் கொண்டு போயிருப்பார்கள்.

நீங்கள் சமூகத்தில் நடக்கும் கொடுமைகளை நினைத்து யோசிக்கின்றீர்கள். பெருமூச்சு விடுகின்றீர்கள். அப்போது காற்றினில் அந்தக் கீதம்... மன்னிக்கவும். மணம் விரைந்து வருகின்றது. நீங்கள் தடுமாறிப் போகின்றீர்கள். வலக்கையினால் மூக்கைப் பொத்த... தொண்டைக் குழியிலிருந்து ஓங்காளம் வருகின்றது. உவாக்...

அடுத்து சைக்கிளை நிறுத்தி விடுகின்றீர்கள்.

இப்பாதையில் போகும் பலருக்கும் இதே கொடுப்பனவுதான்.

அது என்ன மணம்?

கற்பூரமா? அத்தரா? மல்லிகையா? ரோசாவா?

''ஐயோ கடவுளே! என்ன சனியனோ செத்து நாறியெல்லோ மணக்குது. என்னத்த கொண்டு வந்து உந்த வளவுக்குள்ள போட்டிட்டுப் போட்டாங்களோ தெரியாது.

மணத்தின் கொடுமை தாங்காமல் நாங்கள் முகம் தெரியாதபடி அந்த சமூக எதிரியை திட்டித் தீர்க்கின்றோம். வசந்தியின் ஆட்களற்ற அந்த வளவில் கிடந்து நாறிக்கொண்டு சுற்றுவட்டாரத்தை தன் 'மணத்தினால் கலக்கி அடித்துக் கொண்டிருக்கும் செத்துப் போன அந்தப்பிராணிதான்' என்ன?

கோழியா, பூனையா, நாயா? அல்லது வேறு... இப்போது ஒரு பழைய பக்திப் பாடல் உங்கள் காதில் கேட்கின்றது.

''திருப்பரங்குன்றத்தில் நீ சிரித்தால் முருகா திருத்தணி மலை மீது எதிரொலிக்கும்''.




அதுபோலத்தான் இதுவும். பக்கத்து வீடுகளில் நாய், கோழி, பூனை தடுப்பூசி போடாமல் நோய் வந்து செத்துத் தொலைந்து விட்டால்....

அவைகள் வசந்தியின் வளவிலோ, கிணற்றிலோ நல்லா மணத்து நாட்கணக்காய் எதிரொலிக்கும்.

ஒரு விஷயம், தடுப்பூசி போடும் வளர்ப்புப் பிராணிகளில் நான் பூனையையும் சேர்த்து விட்டேன். இதுவரை காலமும் பூனைக்குத் தடுப்பூசி போடும் அறிவித்தல் வரவில்லை. பூனையும் வீட்டோடுதான் இருக்கின்றது. இந்தத் தடுப்பூசி போடும் சமாச்சாரத்திலிருந்து பூனை தப்பி விடுகின்றது. சிலவேளை இனிமேல்தான் இதுபற்றி அறிவித்தல் வருகின்றதோ தெரியாது?

வளர்ப்புப் பிராணிகளுக்கு தடுப்பூசி போடும் அறிவித்தல் பத்திரிகையில் விளக்கமாக வந்துகொண்டுதான் இருக்கின்றது. சிலர் அக்கறையாக அந்தக் கடமையை செய்து விடுகின்றனர். சிலர் அதனை செய்யத் தவறி விடுகின்றனர். பலன் பிராணிகளைக் காவு கொடுத்து விடுகின்றனர்.

காலையில் துயில்விழித்து வெளியில் சென்று பார்த்தால் நாலைந்து கோழிகள் ஒன்றாக இறந்து போய்க்கிடக்கின்றன.

எல்லாமே கோழித்தூக்க நோயினால் இறந்தவைதான்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இறந்த கோழிகளைப் பார்க்கப் பார்க்க துக்கம் நெஞ்சை அடைக்கின்றது. கோழி இருபத்தியொரு நாள் அடைகாத்து குஞ்சுகள் வெளிவந்த கையோடு தூக்கினால் கைகளில் மசமச வென கோழிப்பேன்கள் 'அரசபிக்கப் வாகனங்கள்' போல உடல் முழுக்க ஓடிப்போகும்.

பிறகென்ன பங்கீட்டு அட்டையோ அடையாள அட்டையோ இன்றி உள்புகுந்த கோழிப் பேன்களை விரட்ட மருந்துக் கடையில் வசம்பு வாங்கி வெயிலில் காயவைத்து இடித்து தூளாக்கி தண்ணீரில் கரைத்துத் தெளிக்க பேன்கள் 'வெளிநாடு' ஓடிப் போய்விடும்.

அடுத்து குஞ்சுகளுக்கு சளி பிடிக்காமல் இருக்க குளோரோபெனிக்கல் விற்றமின் சி சேர்ந்த கலவை இடை இடை பருக்கல். பின் வெளியில் மேயவிட்டு கீரி பருந்துக்குப் பிடிபடாமல் வளர்ந்தெடுத்து அதன் பலனை அனுபவிக்கும் நேரம் கோழிகள் பொட்டெனப் போனால் அதன் சோகம் எப்படியானது?

கோழி வளர்த்தவருக்கே புரியும். வாயும் வயிறும் பத்தி எரியும்.

சரி சோகம் தான்.

அடுத்து நாங்கள் என்ன செய்கின்றோம். பாசமாக வளர்த்த கோழிகளெண்டால் நாங்கள் அதன் இறுதிக்கிரியையை தகுந்த முறைப்படி செய்யவல்லோ வேணும். நல்ல குழி வெட்டி (எமது சொந்த வளவுக்குள்) அதனை குழிக்குள் போட்டு மூடுவது தானே சிறந்தது.

அதைவிட்டுப் யாருமில்லாத பக்கத்து வளவுகளில், கிணறுகளில் போடுவது எவ்வளவு கீழ்த்தரமான செயல்.

இத்தகைய செயலால் பாதிப்புறுவது யார்? நோய் முற்றி இறந்த பிராணிகள் மண்ணில் தாக்காமல் அழுகிப் போவதால் அதன் கிருமிகள் எங்கே போகின்றன? காற்றினால் அவை எங்கெங்கு அனுப்பப்படுகின்றன?

அவை சுகதேகிகளாக இருக்கும் மற்ற பிராணிகளையும் மனிதர்களையும் தான் தாக்குகின்றன.

இப்போது தன்னும் இத்தகைய செயலை செய்பவர்கள் சிந்திப்பீர்களா?

சிலவேளை உங்களுக்கு கோபம் உண்டாகலாம். நாங்கள் ஆட்களில்லாத, வசிக்காத இடங்களில்தானே இந்த வேலையை செய்கின்றோம். உனக்கேன் இந்த விசயத்தில் தேவையில்லாமல் கோபம் வருகின்றது. உன்னுடைய வளவிலா கொண்டுவந்து போட்டோம்? பேசாமல் உன்ர வேலையைப் பார்த்துக்கொண்டு போ.

நீங்கள் சொல்வது உண்மைதான் நான் என்ர வேலையைப் பார்த்துக்கொண்டு பேசாமல் இருந்திருக்கலாம். என்ன செய்வது? என்னைப் போன்ற இந்த யாழ் குடாநாட்டில் வாழும் மக்களுக்குத் தானே இந்த நறுமணம் மூக்கில் அடிக்கின்றது. எப்படி கேட்காமல் இருப்பது?

வீடுவளவுகளை விட்டு வெளியேறி கனடா, பிரான்ஸ், ஜேர்மனி என குடிபெயர்ந்துவிட்ட உரிமையாளர்களுக்கு இந்த 'மணம்' மூக்கில் அடிக்கவா போகிறது. இந்த விசயம் அவர்கள் காதுகளுக்கு எட்டிவிட்டால் நிச்சயம் திரும்பி ஊர்ப்பக்கம் வரவேமாட்டார்கள்.

உங்களுக்குத் தெரிந்த தம்பதிகள் வெளியில போகப் போகிறார்களாம் என்ற செய்தி உங்கள் காதில் வந்து விழுகின்றது.

நீங்கள் ஆச்சரியப்பட்டுப் போனீர்கள். அவர்கள் முன்னர் சொன்னது உங்களுக்கு ஞாபகம் வருகின்றது.

''ஏன் தம்பி நாங்கள் வயது போன நேரத்தில் வெளியில போய்க் கஸ்ரப்பட்டு வாழவேணும்? நல்ல பென்சன் வருகுது. பிள்ளையளும் வெளியில நல்லா இருக்கினம் நிம்மதியாய் மனுசி சமைச்சுத் தாறத சாப்பிட்டுக் கொண்டு கோயில், குளமெண்டு.. எவ்வளவு சந்தோசமாய் ஊரில இருக்கலாம். செத்தாலும் நாங்கள் வெளியில போகமாட்டம்''

அப்படிச் சொன்னவர்களா இன்று வெளியில் போகிறார்கள். நம்ப முடியவில்லை.

என்ன காரணம் என்பதை அறிய மனது துடிக்கின்றது. உடன் அவர்கள் வீடு அடைகிறீர்கள். நேரில் சென்று காரணத்தைக் கேட்டால்...

''நாங்கள் என்ன தம்பி செய்யிறது. எத்தனை நாளுக்குத்தான் சொல்லிச் சொல்லிப் பார்க்கிறது. அதுகள் கேட்டால் தானே. ஆட்களில்லாத வளவெண்டு சொல்லி என்ன செத்தாலும் அதுக்குள்ளதான் கொண்டு வந்து போடுதுகள். அந்த மணத்தைத் தாங்கிக்கொண்டு பக்கத்தில நாங்கள் இருக்க முடியுமே? அதான் நாங்கள் வெளியில போறம்...''

என்ன பேசாமல் இருக்கிறீர்கள்? குடாநாட்டில் சண்டையென்றுதான் மக்கள் வெளிநாடு போகிறார்கள். இது உலகமே அறிந்த விசயம்.

இனிமேல் வெளிநாடு போகிறவர்கள் அப்படியொரு காரணத்தைச் சொன்னால்... எவ்வளவு அவமானம் யோசியுங்கோ!

சில நாட்கள் கழித்து நீங்கள் அதே பாதையில் சைக்கிளில் செல்கிறீர்கள். வசந்திக்கு சொந்தமான அந்த வளவுக்கு எதிர்ப்பக்க வளவில் ஒருவர் மண்வெட்டியால் குழி வெட்டிக்கொண்டு இருக்கிறார். நீங்கள் ஆச்சரியமாக அவரைப் பார்க்க...

''என்ன அப்படிப் பார்க்கிறியள். கோழி செத்துப் போச்சு. அது தான் தாக்கப் போறன். பிறகு யாரேனும், நான் தாக்காமல் விட்டுவிட்டால் வெளிநாட்டுக்கெல்லே ஓடிப் போய்விடுவினம்''

உங்களுக்குப் பெரிய சந்தோசம். செய்யும் தவறை உணர்ந்து திருந்தி வாழ்பவனே மனிதன். மனதில் எழுந்த சந்தோஷத்தில் உங்களையறியாமல் பாடல் வருகின்றது. 'ஒளிமயமான எதிர்காலம் என் உள்ளத்தில் தெரிகின்றது'

**என்ன செய்வது? என்னைப் போன்ற இந்த யாழ் குடாநாட்டில் வாழும் மக்களுக்குத் தானே இந்த நறுமணம் மூக்கில் அடிக்கின்றது. எப்படி கேட்காமல் இருப்பது?**

உங்கள் மகிழ்ச்சி கொஞ்ச நேரந்தான்.

திடீரென்று எதிரில் பலர் கைகளினால் காதுகளைப் பொத்திக்கொண்டு ஓடி வருகின்றனர். இதுவரை காலமும் மூக்கைப் பொத்திக்கொண்டு போன ஒழுங்கையில் இப்போது காதுகளை பொத்திக்கொண்டு தெரிந்தும் தெரியாத முகங்கள்.

இது என்ன புதுப்பிரச்சினை? ஷெல் விழுந்த சத்தமோ, விமானக் குண்டு வீச்சோ ஒன்றும் இப்போது நடக்கவில்லையே. ஒரே குழப்பம்.


அப்படியானால் இதற்கு என்ன காரணம்?

அவர்களை நிறுத்தி விசாரிக்கின்றீர்கள். அவர்கள் சொன்னார்கள்.

''ஐயோ அண்ணை என்னத்தை சொல்லுவம். நடக்கிற சண்டையில நாங்கள் நாளைக்கு என்ன நடக்குமென்று தெரியாமல் ஓடிக்கொண்டு இருக்கிறம். உங்க லெச்சனில நிண்டவை மறுபடி என்னவெல்லாமோ நம்ப முடியாததெல்லாம் சொல்லுகினம். அதான் தாங்க முடியாமல் காதைப் பொத்திக்கொண்டு ஓடி வாறம்.

*அண்ணல் அவன் தன் மருங்கே*
*அளவிறந்த காதலினால்*
*உண்ணிறையும் குணம் நான்கும்*
*ஒருபுடைச் சாய்ந்தன...*

- சேக்கிழார்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த நாளில் அன்று...

**பெப்ரவரி என்பது "பிப்ராரிஸ்" என்ற லத்தீன் மொழியிலிருந்து தோன்றியது. ஜூலியஸ் சீசரின் காலம் வரை இம்மாதத்தில் 30 நாட்கள் இருந்தன. 1866ம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் பௌர்ணமி (முழுநிலா) ஏற்படவில்லை. அதற்கு முதல் மாதமான ஜனவரியிலும் பிந்திய மாதமான மார்ச்சிலும் இரண்டு, இரண்டு பௌர்ணமிகள் தோன்றின. இம்மாதிரியான நிகழ்ச்சி இனி 25 இலட்சம் ஆண்டுகள் கழித்துத் தான் தோன்றும் என வானியலாளர்கள் கூறுகின்றனர்.**

**இனி பெப்ரவரி மாதத்தில் உலகில் நிகழ்ந்த அதிமுக்கிய நிகழ்வுகளைப் பார்ப்போம்.**









1884 பெப் 01 - 20 ஆண்டுகால முயற்சியில் ஒக்ஸ்போர்ட் ஆங்கில அகராதி முதன்முதலாக வெளியிடப்பட்டது.

1893 பெப் 01 - உலகின் முதல் சினிமா ஸ்ரூடியோ நியூ ஜேர்மனியில் எடிசன் லபோரெட்டரியில் ஆரம்பிக்கப்பட்டது.

1932 பெப் 02 - 60 நாடுகள் பங்கேற்ற ஜெனீவா ஆயுதக் குறைப்பு மாநாடு தொடங்கியது.

1943 பெப் 02 - ஸ்டாலின் கிராடில் ஜேர்மன் தாக்குதல் முறியடிக்கப்பட்டு 3 இலட்சம் ஜேர்மனிய படையினர் சோவியத் செஞ்சேனையால் அழிக்கப்பட்டனர்.

1919 பெப் 03 - சர்வதேச சங்கத்தின் கமிட்டி முதன்முதல் கூடியது.

1962 பெப் 03 - அமெரிக்க ஜனாதிபதி கென்னடி கியூபாமீது பொருளாதாரத் தடை விதித்தார்.

1904 பெப் 04 - ரஷ்யா-ஜப்பான் போர் ஆரம்பமானது.

1948 பெப் 04 - இலங்கை பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெற்றது.

1976 பெப் 04 - குவாத்தமாலாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 22,000 பேர் பலியானார்கள்.

1978 பெப் 04 - இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியாக ஜே.ஆர். ஜயவர்த்தனா பதவியேற்றார்.

1830 பெப் 05 - நீராவியால் இயங்கும் தீயணைப்பு என்ஜின் முதன்முதலாக லண்டனில் பயன்படுத்தப்பட்டது.

1819 பெப் 06 - சிங்கப்பூர் பிறந்த நாள்.

1945 பெப் 06 - அகில உலக தொழிற்சங்க காங்கிரஸ் லண்டனில் கூடியது.

1974 பெப் 07 - கிரனேடா நாடு சுதந்திரம் அடைந்தது.

1861 பெப் 08 - அமெரிக்க உள்நாட்டுப் போரில் 11 தென் மாநிலங்கள் இணைந்து ஐக்கிய அமெரிக்கக் கூட்டமைப்பை உருவாக்கின.

1924 பெப் 08 - காஸ் சேம்பர் எனப்படும் நச்சுப் புகையூட்டி மூலம் ஜீஜோன் என்னும் கொலையாளிக்கு முதன்முதலாக மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

1963 பெப் 08 - ஈராக்கில் விமானப்படையின் உதவியுடன் பிரதமர் காஸிம் கொலை செய்யப்பட்டு ஆட்சி கவிழ்க்கப்பட்டது.

1893 பெப் 09 - முதல் ஆடை அவிழ்ப்பு நடனம் பரீஸில் நடைபெற்றது.

1919 பெப் 09 - பரீஸ்-லண்டன் விமான சேவை ஆரம்பிக்கப்பட்டது.

1928 பெப் 09 - உலகத் தொலைக்காட்சி ஒளிபரப்பு நடத்திக் காண்பிக்கப்பட்டது.

1934 பெப் 09 - ருமேனியா, கிரீஸ், யூகோஸ்சிலோவாக்கியா, துருக்கி என்பன "பால்கன் உடன்படிக்கை"யில் கைபெழுத்திட்டன.

1971 பெப் 09 - "அப்பலோ 14" செய்கை விண்ணூர்தி சந்திரனிலிருந்து 44 கிலோ எடையுள்ள மாதிரிப் பொருட்களை எடுத்து வந்தது.

1837 பெப் 10 - ரஷ்யக் கவிஞர் அலெக்ஸாண்டர் புஷ்கின் காலமானார்.

1895 பெப் 10 - முதல் பெட்ரோல் லொறி பரீஸில் வெள்ளோட்டம் விடப்பட்டது.

1948 பெப் 10 - மகாத்மா காந்தியைக் கொன்ற நாதுராம் கோட்ஸேவுக்கும் ஆப்தேவுக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

1917 பெப் 11 - உலகில் முதன்முதலாக இரவு வேளையில் வானில் விமானச்சண்டை ஜேர்மன் - பிரெஞ்சு விமானங்களுக்கிடையில் நடந்தன.

1990 பெப் 11 - 27 ஆண்டுகள் சிறையிலிருந்த தென் ஆபிரிக்க தேசிய வீரர் நெல்சன் மண்டேலா விடுதலையானார்.

1912 பெப் 12 - சீனாவில் மஞ்சு வம்ச ஆட்சி தூக்கி வீசப்பட்டு குடியரசு நாடாகியது.

1945 பெப் 12 - ஹங்கேரிய தலைநகர் புடாபெஸ்டை செஞ்சேனை கைப்பற்றியது.

1960 பெப் 13 - பிரான்ஸ் சஹாரா பாலைவனத்தில் தனது முதல் அணுகுண்டு சோதனையை வெற்றிகரமாக மேற்கொண்டது.

1556 பெப் 14 - அக்பர் மன்னராகப் பிரகடனம் செய்யப்பட்டார்.

1918 பெப் 14 - வீரபாண்டிய கட்டப்பொம்மன் பாஞ்சாலங்குறிச்சி மன்னராக முடிசூடினார்.

1970 பெப் 14 - ரஷ்ய செஞ்சேனை உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

1919 பெப் 14 - "லீக் ஒப் நேசன்ஸ்" அமைப்பு சாசனம் 27 நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1877 பெப் 15 - சூரிய அஸ்தமனமும் சந்திர கிரகணமும் ஒரே நேரத்தில் நிகழ்ந்தது.

1950 பெப் 15 - சோவியத்-சீன 30 ஆண்டு நட்புறவு உடன்படிக்கை கைச்சாத்தானது.

1672 பெப் 16 - உலகின் முதலாவது சட்டப்பத்திரிகை ''ஜேர்னல்ட் பாலெயிஸ்'' பரீஸிலிருந்து வெளிவரத் தொடங்கியது.

1917 பெப் 16 - தென் ஆபிரிக்காவின் பாராளுமன்றம் முதன்முதல் தொடங்கியது.

1956 பெப் 16 - பிரிட்டனில் மரணதண்டனை ஒழிப்புச் சட்டம் நிறைவேறியது.

1956 பெப் 16 - கியூபாவின் பிரமராக பிடல் கஸ்ட்ரோ பதவி ஏற்றார்.

1863 பெப் 17 - செஞ்சிலுவைச் சங்கம் ஜெனீவாவில் ஆரம்பிக்கப்பட்டது.

1979 பெப் 17 - சீன-வியட்நாம் எல்லைப்போர் ஆரம்பமானது.

1986 பெப் 17 - சிந்தனையாளர் ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி அமெரிக்காவில் காலமானார்.

1564 பெப் 18 - உலகப் புகழ்பெற்ற ஓவியரும் சிற்பியுமான மைக்கேல் ஏஞ்சலோ பொனெராம் காலமானார்.

1965 பெப் 18 - காம்பியா நாடு சுதந்திரமடைந்தது.

1967 பெப் 18 - முதல் அணுகுண்டு தயாரிப்பதில் பெரும்பங்கு வகித்த டாக்டர் ஜே. ரொபேர்ட் ஒப்பனெயிமர் அமெரிக்காவில் காலமானார்.

1918 பெப் 19 - ரஷ்யாவில் நிலம் தேசவுடமையாக்கப்பட்டது.

1947 பெப் 20 - லூயிஸ் மவுண்ட் பேட்டன் பிரபு இந்தியாவின் கடைசி வைஸ்ராயாக நியமிக்கப்பட்டார்.

1878 பெப் 21 - முதல் டெலிபோன் டிரெக்டரி கனெடிகட்டில் வெளியிடப்பட்டது.

1972 பெப் 21 - சீனப்புரட்சிக்குப் பின்னர் முதலாவது விஜயத்தை அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸன் சீனாவுக்கு மேற்கொண்டார்.

1944 பெப் 22 - மகாத்மா காந்தியின் மனைவி - அன்னை கஸ்தூரிபா காலமானார்.

1821 பெப் 23 - ஆங்கிலப் பெருங்கவிஞன் ஜோன் கீட்ஸ் காலமானார்.

1955 பெப் 23 - தென்கிழக்கு ஆசிய ஒப்பந்த நாடுகளின் (சீட்டோ) முதல் கூட்டம் தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் ஆரம்பமானது.

1897 பெப் 24 - 1,86,000 ஆண்டுகளுக்கு முன் பெரிய மெகல்லன் மேகத்திலுள்ள ஒரு நட்சத்திரம் வெடித்துச் சிதறியதன் காரணமாக ஏற்பட்ட ஒளிக் கீற்றுதான் பூமியை வந்தடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

1308 பெப் 25 - இங்கிலாந்தின் மன்னராக இரண்டாம் எட்வேர்ட் முடிசூடிக்கொண்டார்.

1954 பெப் 25 - எகிப்தின் பிரதமராக நாஸர் பதவியேற்றார்.

1815 பெப் 26 - எல்பா தீவுச் சிறையிலிருந்து நெப்போலியன் தப்பிச்சென்றார்.

1909 பெப் 26 - 21 துண்டுப்படங்கள் அடங்கிய முதல் வண்ணப் படம் ஷாங்டெஸ்பரியிலுள்ள பலஸ் தியேட்டரில் திரையிடப்பட்டது.

1918 பெப் 26 - அயர்லாந்து கலவரம் ஆரம்பமானது.

1919 பெப் 26 - பாலஸ்தீனத்தில் தங்களுக்குத் தனித்தாயகம் வேண்டுமென யூதர்கள் பரீஸ் சமாதான மாநாட்டில் கோரினர்.

1952 பெப் 26 - பிரிட்டன் முதன்முதல் அணுகுண்டு தயாரித்ததை பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சில் அறிவித்தார்.

1897 பெப் 27 - முதலாவது கார் திருமண ஊர்வலம் பரீஸில் நடைபெற்றது.

1957 பெப் 27 - ''நூறுமலர்கள் மலரட்டும்; நூறு சிந்தனைகள் உதயமாகட்டும்'' என்ற பிரசித்தி பெற்ற வாக்கியத்தை சீனத் தலைவர் மாஓ சேதுங் கூறினார்.

1916 பெப் 28 - பிரிட்டிஷ் நாவலாசிரியர் ஹென்றி ஜேம்ஸ் காலமானார்.

1942 பெப் 28 - ஜப்பானிய படைகள் ஜாவாவைக் கைப்பற்றின.

1948 பெப் 28 - பிரிட்டிஷ் படைகள் இந்தியாவை விட்டு வெளியேறின.

1991 பெப் 28 - வளைகுடாப் போர் முடிவுற்றது.

**கிறிஸ்துவுக்கு முன்:**

3102 பெப் 17 - ஆரியபாட்டாவின் கணிப்புப்படி கலியுகம் பிறந்த நாள்.

0010 பெப் 29 - ஜுலியஸ் சீசர் கலண்டரைத் திருத்திய பின் 29 நாள் கொண்ட கலண்டரின் முதல்வருடநாள் இன்று.

0011 பெப் 30 - ஜுலியஸ் சீசர் ஒரு ஆண்டு 365 நாட்களைக் கொண்டது எனக் கணித்தார். பெப்ரவரியில் அவரது காலத்தில் இருந்த 30 நாட்களை 29 ஆக்கிய கடைசி ஆண்டின் நாள் இன்றுதான்.











Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# யுத்தத்தைவிட புகைத்தலால் சாம்பலாவோரே அதிகம்!

யுத்தம் மட்டுமே இலங்கையில் அப்பாவி உயிர்களை அநியாயமாகக் கொன்று குவித்து வருவதாகவே நாம் எண்ணிக் கொண்டிருக்கிறோம். ஆனால் அதைவிட பெரும் எண்ணிக்கையில் மனித உயிர்களைப் பலிகொண்டு வருகின்றது புகைத்தல் என்றால் நம்பமுடியுமா?

நம்பித்தான் ஆக வேண்டும். யுத்தத்தினால் வருடமொன்றுக்கு (பெரும் தாக்குதல்கள் தவிர்த்து) மரணிப்பவர்களின் தொகை ஆறாயிரத்தைவிட அதிகம் இல்லை. ஆனால் புகைத்தலால் வருடாந்தம் இருபதினாயிரத்திற்கும் அதிகமானோர் மரணமாகி வருகின்றனர்.

இந்தத் தகவலை தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச்சபை மருத்துவ நிபுணர்கள் ஆய்வுகள் மூலம் கண்டுபிடித்து வெளியிட்டுள்ளனர்.

போதைப் பொருட்கள்தான் பொல்லாதவை, மனித உயிருக்கு உலை வைப்பவை என்று நாம் கருதிக் கொண்டிருக்கின்றோம். ஆனால் ஹெரோயின், கஞ்சா போன்றவற்றைவிட ஆபத்தானதுதான் நாம் தாராளமாக பைக்கற் கணக்கில் சுருள் சுருளாக ஊதித் தள்ளும் சிகரெட்டுகள் என்றால் ஆடித்தான் போவோம்.

சிகரட் சயனைட்டை விடவும் பயங்கரமானது. சயனைட் உடனே உயிரை வாங்கிவிடும். சிகரெட் மெதுமெதுவாக எம்மோடு வாழ்ந்துகொண்டே இழுக்க இழுக்க இன்பம் தந்துகொண்டே எம்மை பலி கொண்டுவிடும்.

புகைத்தலில் நாலாயிரம் வகையான இரசாயன நச்சுப் பதார்த்தங்கள் காணப்படுகின்றனவாம். இருபத்தைந்துக்கும் மேற்பட்ட மரணத்தை ஏற்படுத்தக்கூடிய நோய்கள் புகைத்தல் மூலம் மனிதனை ஆட்கொள்கின்றன. இதற்காக செலவு செய்யும் பணமோ மலையளவு.

புகைத்தலிலுள்ள நிக்கோட்டின், தார் போன்ற நச்சுப் பதார்த்தங்களே இந்தப் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

போதைவஸ்துக்களில் சட்ட விரோதமானதாக பிரகடனப்படுத்தப்பட்டவை, சட்டத்தால் கட்டுப்படுத்தப்பட்டவை என்று இரு பிரிவுகள் உண்டு. என்றாலும் இவைஅத்தனையுமே போதைப் பொருட்கள்தான் என்பதே மருத்துவ ரீதியான முடிவு.

மேலும் ஹெரோயின், கஞ்சா போன்ற போதைப்பொருள் பாவனைக்கு நுழைவாயிலே இந்த புகைத்தல் பழக்கம்தான்.

போதைக்கு அடிமையானவர்கள் எல்லோரும் புகைப்பிடிப்பவர்களே. ஆனால் புகைப்பிடிப்பவர்கள் எல்லோரும் போதைக்கு அடிமையானவர்கள் அல்லர் என்றும் ஆய்வுகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளன.

சட்டத்தின் மூலமும் புகைத்தல் 16 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களுக்கு விற்கவும் அவர்கள் பாவிக்கவும் தடைவிதிக்கப்பட்டுள்ளன. ஆனால் துரதிர்ஷ்டவசமாக இலங்கையில் 15 சதவீதமானோர் தமது 11வது வயதிலேயே புகைப்பழக்கத்திற்கு அடிமையாகி விடுவதாகவும் அந்த ஆய்வுகள் மேலும் தெரிவிக்கின்றன.

ஹெரோயின், கஞ்சா, மதுசாரம் போன்றன போதைப்பொருட்கள் என்ற பெயரிலேயே பொதுவாக அழைக்கப்படுகின்றன. புகையிலையை மூலப்பொருளாகக் கொண்ட சிகரட், பீடி, சுருட்டு என்பனவும் இந்த அணியில் சேர்கின்றன.

கள், சாராயம், பியர், விஸ்கி, பிரண்டி, கசிப்பு போன்ற பல்வேறு லேபல்களில் பல்வேறு பெயர்களில் அறிமுகமாகியுள்ளதும் இப் போதைப் பொருட்களே.

இந்த எல்லாப் பொருட்களுமே இரசாயன ரீதியில் மனித நலனுக்கு உடலுக்கு தீங்கு விளைவிப்பனவே. இப்பொருட்களின் பாவனை காரணமாக பொருளாதாரரீதியிலும் சுகாதாரம், சமூக மட்டங்களிலும் பெரும் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன என்பது வெளிப்படை. இதனைப் பாவிப்போருக்கு இவ்வாறான ஆபத்துக்களைக் கொண்டுவருவதற்கு முன்னரே ஏற்படும் வெளிப்படையாக தோன்றாத ஆபத்துக்கள் விழிப்பாக இருந்தால் கண்டுபிடிப்பது கடினமல்ல.

அதாவது இவற்றைப் பாவிப்போரில் அதிகமானோரிடம் காணப்படும் சோம்பல், கோபம், பொறுமையின்மை, கவர்ச்சி - விரும்பக்கூடிய தன்மை அகன்றுசெல்வதைக் காணலாம். மேலும் பாவனைக்கு படிப்படியாக அடிமைப்படும்போது வாழ்க்கையை அனுபவிக்கும் சந்தர்ப்பமும் படிப்படியாக குறைந்து போவதையோ அற்றுப் போவதையோ காணலாம்.

மேலும் இந்தப் பொருட்கள் பாவனைக்குப் பழக்கமான இடம் அல்லது சந்தர்ப்பத்தில் இவை கிடைக்காமல் போகும்போது அல்லது கிடைக்கும் வரை துன்பமுற்று வேதனையை அனுபவிப்பதும் ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளன.

முன்கூட்டியே இவ்வாறானவர்களை கண்டுபிடிக்க முடிந்தால் பாவிப்போர் சிலரால் மேற்கொள்ளப்படும் போலி நடிப்பிலும் மிகைப்படுத்துதலிலும் எந்தவித

இந்தத் துக்கம்
எனக்குப் பிடித்தது
காரணம்
இது
நீ தந்தது.
- உருதுக் கவிதை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான உண்மைகளும் அடிப்படைகளும் இல்லை என்பதை அவர்களுக்கு உணர்த்தும் சந்தர்ப்பம் கிட்டும்.

**புகைத்தல்:**

மிகவும் பரந்த மிகவும் பாதிப்பான விளைவுகளை ஏற்படுத்தும் போதைப் பொருளாக சிகரட், பீடி, சுருட்டு என்பவற்றைக் கருதமுடியும். ஏனைய பொருட்களைப் போன்றே ஒப்பீட்டு ரீதியில் விலைகுறைவு, எளிதாக பெற்றுக் கொள்ளக்கூடியமை, மற்றும் விதவிதமான நுட்பங்களைக் கையாண்டு விளம்பரம் செய்யப்படுவது போன்ற காரணங்களே இவை ஏனையவற்றை விட அதிகமாகப் பரவுவதற்கு காரணமாகும்.


நிகோட்டின் காபன் மொனொக்சைட் உட்பட உடலுக்கு ஊறு விளைவிக்கும் விஷப்பொருட்கள் அதிகமாக அடங்கியுள்ளன. இவற்றின் இரசாயனத் தாக்கம் எவ்வளவு எனின் புகைப்பிடிப்பவர்களில் 50வீதமானோர் புகைப்பிடித்தலின் காரணமாக ஏற்படும் நோய்களுக்கு ஆளாகி அகால மரணமடைவதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இந்தளவுக்கு பெரும் தொகை மரணங்களை ஏற்படுத்தினாலும் அது உடனடியாக எமது உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பாமைக்குக் காரணம் என்ன என்பது பற்றியும் நாம் சிந்திப்பது அவசியமாகும்.

புகைத்தலின் காரணமாக ஏற்பட்ட நோய்களினால் மரணமானாலும் அந்த மரணங்கள் அறிவிக்கப்படுவது அந்த நோய்களின் பெயராலேயே. உதாரணமாக புற்றுநோய், மாரடைப்பு ஆகிய நோய்களால் மரணமடைந்ததாகவே குறிப்பிடப்படுகிறது. ஆனால் நோய்காவி சிகரட்தான் என்று பெரும்பாலும் கூறப்படுவதில்லை.

இவ்வாறு புகைத்தலின் காரணமாக இலங்கையில் வருடமொன்றுக்கு ஏற்படும் மரணங்களின் தொகை 20,000 என்று தெரிவிக்கப்படுகின்றது. இருந்தும் இது எமக்குத் தெரியாமல் இருப்பதுதான் ஆச்சரியம்.

இலங்கையில் யுத்தத்தினால் வருடமொன்றுக்கு மரணமாவோரின் தொகை 6000க்கும் அதிகமில்லை (விசேட காரணங்களினால் ஏற்படும் மரணம் நீங்கலாக) என்று கூறப்படுகின்றது.

ஆகவே யுத்தமா? புகைத்தலா இலங்கையில் அதிகமானோரை அழிக்கின்றது என்ற கேள்விக்கு நாம் விடை காணவேண்டியது மிகவும் அவசியமானதாகும்.



**இலங்கை பத்திரிகைப் பேரவை, தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டப்பாட்டுச் சபையுடன் இணைந்து நடாத்திய செய்தியாளர் செயலமர்வில் நிகழ்த்தப்பட்ட உரைகளிலிருந்து தொகுக்கப்பட்டதே இங்கு கட்டுரை வடிவில் தரப்படுகின்றது.**

சிகரட், பீடி, சுருட்டு காரணமாக மரணிப்பவர்களை விட அகாலமாக மரணிக்கும் புகைத்தலில் ஈடுபட்டுள்ளவர்களின் நிலைமை மிகவும் கவலைக்கிடமானது. புகைத்தலை ஆரம்பிக்கும்போது வாயிலிருந்து துர்நாற்றம் வீசுதல் போன்றவற்றால் ஆரம்பிக்கும் பாதிப்புக்கள் ஆளுமை, வசீகரம் இழத்தல், கடும் சோர்வான அழுக்கடைந்த தோற்றம், வயதுக்கு மீறிய கிழட்டுத் தோற்றம். பாலியல் பலவீனம் போன்ற விளைவுகளுக்கு ஆளாக நேரிடுகின்றன.

காலம் செல்லச்செல்ல பாவிக்காமல் இருக்க முடியாது சிரமத்தை அனுபவிக்க நேரிடுதல் போன்ற துன்பத்திற்கும் பாவனையாளர்கள் முகம்கொடுக்க நேரிடுகின்றது.

இலங்கையில் புகைத்தலுக்காக (பாவிப்போரினால்) தினம் ஒன்றுக்கு 500 லட்சம் ரூபா பணம் செலவிடப்படுகின்றன என்று தெரியவருகின்றது.

இது பெரும் தொகை என்பதுடன் புகைப்பிடிப்பவர்களில் அதிகமானோர் குறைந்த வருமானம் பெறுபவர்களே என்று ஆய்வு அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

**மதுசாரம்:**

சாராயம், பியர், கள், விஸ்கி, வைன் போன்ற பெயர்களில் அறிமுகமாகியுள்ள இவை அனைத்துமே மதுசாரம்தான். இவை ஒவ்வொன்றிலும் மதுசாரத்தின் விகிதாசாரம் ஒன்றுக்கொன்று வேறுபட்டாலும் அதே போல பல்வேறு லேபல்கள், பக்கட்டுகளில் வந்தாலும் வெவ்வேறு விலைகள் குறிக்கப்பட்டாலும் அல்க்கஹோல் என்ற ஒரே வகையான இராசாயனப் பொருள்தான் இவை அனைத்திலும் அடங்கியுள்ளன.

இந்த இரசாயனப் பொருள் பாவித்த ஒருவரை செயலிழக்கச் செய்து முடக்கிவிடுவதுடன் சரீரத்தின் சகல இந்திரியங்களினதும் செயற்பாடுகளையும் குழப்பிவிடும். பாலியல் செயற்பாடுகளுக்கு இது மிகவும் பாதிப்பை ஏற்படுத்தும்.

எனினும் பாவிப்போர் கூறுகின்ற, மேலோட்டமாக தென்படுவது வேறு வகையிலேயே.

அது -

மதுசாரம் பாவனை சுவையானது, மனிதனை உத்வேகமுறச் செய்து காரிய சூரனாக மாற்றக் கூடியதாகக் காட்ட மனிதர்கள் மேற்கொள்ளும் முயற்சியால்அதன் உண்மையான சுயரூபம் மறைந்து போவதனாலேயே.

அவ்வாறான நடத்தையின் காரணமாக அடுத்தவர்கள் மதுசாரம் தொடர்பாகப் படித்துக் கொள்வது அதன் வன்மையான உருவத்தில் அல்ல. மதுப் பாவனைபற்றி செல்வந்த படாடோப பிம்பம் ஒன்றை கட்டி எழுப்புவதில் பங்களிப்புச்செய்வது பாவிப்போர் மட்டுமல்ல பாவிக்காதோரும் பாவனைக்கு எதிர்ப்பு தெரிவிப்போரும்கூட பாவித்தல் சுவையானது என்பதைப் பிரச்சாரம் செய்ய உதவி செய்து வருகின்றனர்.

மதுசாரம் பாவிக்கும் அநேகர் மதுசாரம் பாவிப்பதன் மூலம் எதிர்பார்ப்பது மதுசாரம் அல்லது இரசாயனத்தின் மூலம் ஏற்படுத்திக்கொள்ளும் இயலாமையும் அல்லது வேறுபாடும் அல்ல. அவர்கள் எதிர்ப்பார்ப்பது பாவிக்கும்போது உள்ள சூழ்நிலையும் அக்கம் பக்கமும் மற்றும் பாவிக்கும் கலாசாரத்தின் ஊடாக கட்டி எழும்பும் வித்தியாசமான அங்கசேஷ்டைகளுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது பாவிப்போர் தொடர் பாக கட்டிஎழுப்பப்ட்டுள்ள செல் வந்த தோற்றப்பாடாகும். விசேட மாக புதிய பாவனையாளர்கள் பற்றி இங்கு இயல்பாகவே தெளி வாக தோற்றுவதை விழிப்போடு சுதந்திரமாகவும் பார்ப்பவர்கள் புரிந்து கொள்ளமுடியும். உண் மையில் மதுசாரம் தவிர்ந்த பாவிக்கும் இடத்தில் நிலவும் சுதந்திரம், இதமான சூழல் போன்ற சாதகங்கள் சுவையா னது. சுந்தரமானது.

நாம் அடையாளம் கண்டு கொள்ள வேண்டியது மதுசாரம் பாவனை சுவையானது என்று தென்பட்டாலும் வேறு சுவை யான சூழல் நபர்களுடன் சேர் ந்து பாவிப்பதனாலேயே. அதன் சுவை மற்றும் விருப்பமான கட் டங்களை அகற்றிப் பாவிக்கும் போது மதுசாரத்தின் உண்மை யான சுயரூபம் விளங்கும்.

அதேபோல அவ்வாறு மதுசா ரம் பாவிப்போர் புதியவர்கள் அல்லது இளைஞர்கள் மத்தி யில் காணமுடியாது. மதுசாரம் தொடர்பாக ஈடுபாடுள்ள மனி தன் எனின் (அதுபோன்ற அலங்காரங்கள் இன்றி) பாவிப் பதைக் காணமுடியும்.

புகைத்தல் மூலம் ஏற்படக்கூ டிய வேதனை உட்பட மேற்குறி ப்பிட்ட சகல பீடைகளும் தீமை யான நிலைமைக்கு முகம் கொடுக்க மதுசாரம் பாவிப்போ ருக்கும் ஏற்படுவதாக விளங்கி க்கொள்வது உங்களுக்கு கடி னமானதல்ல.

மேற்குறிப்பிட்ட மதுசாரவகை களை மற்றுமொரு வகையில் வகைப்படுத்த முடியும். அது சட்டத்தில் அனுமதித்த, சட்டத் தில் அனுமதிக்காத என்ற இரு வகைகளே.

ஹெரோயின், கஞ்சா போன்ற பொருட்கள் சம்பூரணமாகவே சட்ட விரோதமானது என்றாலும் சாராயம், சிகரட் பற்றி ஓரளவு கட்டுப்பாடுகள் உண்டு. கசிப்பு போன்றன சட்டவிரோதமான முறையில் உற்பத்தி, விற்பனை இடம்பெறுகின்றது. அவை தடை செய்யப்பட்டாலும் பல்வேறு பெயர்களில் சட்டத்தால் தடை- செய்யப்படாத மதுசாரம் சந்தை யில் உண்டு. இதன் பாதிப்புக் கள் ஒன்றுக்கு ஒன்று குறைந் தது அல்ல.

பியரிலுள்ள மதுசாரம் ஒப் பீட்டளவில் குறைவு என்றா லும் அதிகளவில் பாவிக்கும் போது அடுத்த மதுசாரத்தி னால் கிடைக்கும் போதை யே உடலுக்குள் சேர்கிறது. பியர் விற்பனை செய்ய முடியும் சட்டபூர்வமான லைசன்ஸ் பெற்ற கடை களுக்கு மட்டுமே.

ஹெரோயின், கஞ்சா, புகைத்தல், மதுசாரம் மற்றும் எந்த போதைப் பொருளாயினும் அதனை பாவி ப்பதில் அளவு மற்றும் வேறு வெளிக் காரணங்களின் மீது மனிதனுக்கு எல்லா விதத்திலும் பாதிப்பை ஏற்படுத்தி தீங்குவிளை விப்பதுடன் உணர்ச்சிபூர்வமாக யோசிப்போமானால் மதுசாரத் தின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்தான நிலைமையானது மனிதனுக்கு வாழ்க்கையின் ஏனைய சுவையான விஷயங் கள், முக்கிய கட்டங்கள், காலம் பெறுமதியும் மதுசாரத்தினால் இல்லாமல் செய்யப்படுகின்றன என்பது தெளிவாகின்றன.

இந்த இழப்பை எந்த மட்டத் திலுள்ள இப்போதைப் பொருட் களைப் பாவித்தோரும் அனுப விக்க நேரிடும்.

**இதற்கு நாம் என்ன செய்ய லாம்?**

பாவனை சுவையானது என்று புலப்படுத்தும் சூழ்நிலை கார ணங்கள், உபகரணங்கள், பிர யோக மொழிகள் பற்றி அவதா னமாகவும் அதனை முடியுமான வரை குறைப்பது.

இந்த பொருட்களின் உற்பத்தி, விற்பனை செய்யும் வியாபாரி கள் எம்மை ஏமாற்ற மேற்கொ ள்ளும் தந்திரங்கள் தொடர்பாக விழிப்பாக இருத்தல்.

பாவிப்போர் தமது உண்மை யான அனுபவங்களை மறைத்து செய்யும் பிரசாரங்களை மற்றும் பாவனையுடன் காட்டும் பொய் காட்சிகளை சரியான முறை யில் புரிந்து கொள்வது.

**ஆபத்தான ஔடதங்களைக் கட்டுப்படுத்தும் தேசிய மன் றம் - பணிகள்:**

ஆபத்தான ஔடதங்கள் பாவ னையை தடுப்பதற்காக மற்றும் கட்டுப்படுத்துவதற்கு ஈடுபட்டு ள்ள நிறுவனங்களின் நடவடிக் கைகளை இணைத்தல்.

ஆபத்தான ஔடதங்களுக்கு அடிமையாகியுள்ள நபர்களுக்கு சிகிச்சை செய்வது மற்றும் புன ருத்தாபனம் செய்யும் செயற்பா டுகளுக்கு அனுசரணை வழங் குவது மற்றும் சிறுவர்கள் வளர் ந்தோர் தொடர்பாக ஔடதங்க ளை தவறான முறையில் பாவி ப்பதை தடுக்கும் தேசிய கல்வி நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை நடத் துதல்.

ஆபத்தான ஔடதங்கள் முறை யின்றி பாவிப்பது பரவுதல், அது தொடர்பான சட்ட, வைத்திய, சமூக, கலாசார மற்றும் பொரு ளாதார காரணங்கள்.

- எம். எச். பதி-யுஸ்-ஸமான்







என்னைப் பொறுத்தவரை
உன் இதயத்தின்
பாராட்டுதலே சகலமும்...

- ராகுல்..

தோட்டத்தில் உள்ள மலர்களில் எல்லாம்
இன்று முகம் புதைத்து மகிழ்கிறேனே...
உன்னால்தான்...
உன்னை எனக்கு நினைவில்லை
உன் முகமும் எனக்கு நினைவில்லை
உன் கைகள்.. கன்னங்கள்.. உதடுகள்..
அதில் பதிந்த முத்திரைகள்..
எதுவுமே நினைவில்லை...
சிலைகளுக்கு வாயில்லை என்று தெரிகிறது
இருந்தும் பேசுகிறேன்
ஓவியங்கள் உயிர்பெறாது என்று புரிகிறது
இருந்தும் அவைகளுடன் நடக்கின்றேன்
உன்னால்தான்...
உன்னை எனக்கு நினைவில்லை
உன் கண்கள்.. புருவங்கள்..
எதுவும் எனக்கு நினைவில்லை..
உன் குரல்கூட சரியாக நினைவில்லை
என்னுள் ஏற்பட்ட ஊமைக்காயங்களுக்கு
இன்று மருந்து தேடிக்கொண்டிருக்கிறேன்
மலர்களின் வாசனை பிடிக்கவில்லை..
சிலைகளின் பாஷை புரியவில்லை..
உன்னால்தான்...
வாசனை கொண்டு பூக்களை அடையாளம்
காணுதல் போல
உன் நினைவுகளைக் கொண்டு
உன்னை அடையாளம் காண முயல்கிறேன்
நீ எங்கே?
இன்னும் ஒவ்வொரு சன்னல்களிலும்
தேடிக்கொண்டு தான் இருக்கிறேன்...

- கே.ஆர். விஜய்







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆறுதல் பரிசுக் கவிதை

NIPU படைப்பாற்றல் போட்டி

அமுது

# சாக்கடைச் சுகம்



- மாவை வரோதயன்

அண்ட சராசரமும் அதிர்ந்து
வெடித்துச் சிதறி நடுநடுங்க
மூண்ட போர் மீண்டும் நகர்கிறது!
சொல்லலும் சூளுரைத்தலும்
செல்லலும் மீளலுமாய்
பட்டணம், கிராமம், வயல்வெளி,
வனம், சோலை, பாடசாலை, கோவில்...
துவம்சமே யாவுமாய்
தூள் தூளெனப் பொடியாக்கி
மூண்ட போர் மீண்டும் நகருது!

கற்பக தருக்களைச் சிதைத்து - போர்
பணமரமாய்க் காய்க்கிறது!
பட்டை வெட்டவும்
பூப் பிடுங்கி கிளை முறிக்கவும்
வேர் அரிந்து விறாத்து அவிக்கவும்
குருத்துக்கள் நொடித்து வறுத்துக்
கசாயம் குடிக்கவும்
மனிதம் உரமாகிப் புதைய
போர் - சிலருக்கு
பணமரமாய்க் காய்க்கிறது!

அகதிச் சிறுவரின் ஏழை வயிற்றைக்காட்ட
பணம் இறங்கி வந்து
புல்லுக்குப் பொசியுது!
கண்ணீரில் தோய்த்துக் காய்ந்த
விதவைச் சேலையின் ஓட்டையுள்
கூதல்க் காற்று - அறிக்கைகள் படிக்குது!
ஓட்டைக் குடிசைக்குள்
நட்சத்திரங்கள் இறங்கி வந்து
ஏக்கக் கன்னியரின்
எதிர்காலக் கனவுகளைக்
கற்பழித்துப் போகிறது! - போர்
சட்டத்தைக் காலணியாய் மாட்டிக்கொண்டு
அதிகார முத்திரைக்காய்
அணிவகுத்துப் போகிறது!

இந்தச் சாக்கடைச் சுகம்
ஒருநாள்
போருக்கும் அலுக்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுதல் பரிசுக் கதை

2,000/=

NIPU படைப்பாற்றல் போட்டி
அமுது

செல்வி ச. குமுதினி

மாலைநேரம் பூமிக்குள் சலிப்பாய் இறங்கிக் கொண்டிருந்தது. நீளமான நிழல்களையும் கசகசக்கின்ற வியர்வையையும் கொண்ட இந்த முதிர்வெயிலை அவனுக்குப் பிடிக்கவில்லை. இரும்புக்கோளங்கள் கிட்டக் கிட்டவாகப் பெரும் அதிர்வுடன் வெடித்துக்கொண்டிருக்க, அவன் அம்மாவின் விரல்களைப் பற்றியபடி ஓடியும் தடக்கியும் நடந்து கொண்டிருந்த போதும் இப்படித் தானிருந்தது முதிர் வெயில். அவன் காலடிகளிலிருந்து மிதிபடாமல் ஓடமுயற்சித்துக் கொண்டிருந்த அவனது நீண்டுபோன நிழலும், அச்சத்துள் அமுங்கிக் கசங்கிய மனமும், எல்லாமும், இன்றைக்கு இந்தப் பொழுதில், இப்போது நிகழ்ந்தவையாய்த் தானிருக்கின்றன.

ஒரு கனவழிந்து திடுக்குற்று எழும்பிய காலைப் பொழுது போல, மனத்தின் எல்லா இடுக்குகளுக்கும் திகிலை நிரப்பிப் போயிற்று அந்தச் சாகாத மாலைப் பொழுது.

நகரமுடியாத கனத்துடன் தேங்கிவிட்ட அந்தப் பொழுதுக்கும், நிமிடந்தோறும் அந்தப் பொழுதை நாளின் ஏதோவொரு நிகழ்விலேனும் நினைப்பித்துக் கொண்டு நகர்கின்ற இந்தப் பொழுதுக்கும் இடையே பாலமாய் அரை வருடம் இழுபட்டுச் சென்றுவிட்டதாய்க் காலை அப்பா சொன்னது ஞாபகம் வந்தது.

படங்களில் அநாயாசமாய் வந்து சாகசங்கள் செய்கிற கதாநாயகர்களைவிடவும் அவனுக்குக் கம்பீரம் மிகுந்தவராயிருந்த அப்பா!

''இண்டைக்காவது வீட்டுப் பக்கம் போகக் கிடைக்கவேணும் ஆண்டவரே!'' அவன் 'பூக்குருவி கிடைத்துவிட வேண்டும்' என்பதற்காகச் சுவரோரமாய் வைக்கப்பட்டிருந்த சின்னச் சுவாமிப் படத்தின் முன் கண்மூடித் தேவாரம் சொல்லிக் கொண்டிருந்தபோது, அப்பா இரங்குகின்ற குரலில் முணுமுணுத்ததை அவன் கேட்க நேரிட்டது. உடைந்து சிதறிப்போன அந்தக் கம்பீரத்தின் ஒரு துணுக்குக் கூட இந்த முணுமுணுப்புக் குரலில் எஞ்சியிருக்கவில்லை என்று தோன்றிற்று அவனுக்கு.

ஈரம்பட்டு வர்ணங்கள் கலைந்துபோன சித்திரம் போன்று அவரின் கம்பீரமான விளிம்புகளை அலைக்கழித்துவிடத்தக்கதாய், ஏதோ ஒன்றை அவரும் தொலைத்திருக்க வேண்டும்; அவனுக்குப் பூக்குருவி போல இருந்த ஏதேனும் ஒன்றையோ அல்லது பலவற்றையோ.

தோலின் ஓரங்களும் வெந்து கருகுகின்ற தான வெம்மையுடன் வெயில் கொளுத்திக் கொண்டிருக்கும்போது, திடீரென கருக்கிட்டு, ஆனந்தவர்ஷமாய்க் கொட்டி வெம்மையையெல்லாம் கழுவிச் செல்கின்ற ஒரு மழை போல, ஏதோ ஒன்று நிகழ்ந்துவிட்டால் எவ்வளவு நன்றாயிருக்கும்! அவனுடைய பூக்குருவி நிஷா.... ராஜு.... அப்பாவின் கம்பீரம்.... இனிமையின் ஞாபகங்கள் ஏக்கப்படிவுகளை விலத்திப் பெருமூச்சை விடுவித்தன.

அவன் திரும்பி அம்மாவை நோக்கினான். வெளிறிய வெண்மலர் இதழ்போல, பூச்சிடாத சொரசொரப்பான சுவரிற் சற்றே சாய்ந்தபடி இருக்க வாசல் தாண்டித் தூரே மடிகின்ற ஒழுங்கையில் அவளின் விழிகள் நிலைத்திருந்தன. வியர்த்த முகத்திற் கூந்தல் பக்கப்புறமாய்க் குங்குமத்தைத் தேய்த்திருந்தது. அந்த உப்பல் வயிறு அவளை மிகவும்தான் சிரமப்படுத்திக் கொண்டிருக்கிறது.

முன்னரெப்போதுமே அவள் இப்படிச் சோர்ந்திருந்ததில்லை. அவனைக் கூடக் கணப்பொழுதும் சோர்ந்திருக்க விட்டதுமில்லை. அவன் 'நேஸரி'யால் வந்துவிடும் நேரத்திலிருந்து அவனுக்கும் அம்மாவுக்குமென ஒரு உலகம் விரியும். அவனுக்குப் பூக்குருவி. அம்மாவுக்கு அவன். அப்பா வந்துவிட்டால் அவரும். தினத்துக்கும் ஒவ்வொருவிதமாய் நேரம் சந்தோஷமாய்ச் சிரிக்கும்.

எழுதப்படாமலே தொடர்ந்து கொண்டிருந்த நேர அட்டவணைப்படி எல்லாமும் நியமப்படி நடந்து கொண்டிருந்தன அப்போது.

''திங்கள், புதன், வெள்ளியெண்டா 'மாஸ்' போட வேணும் பூக்குருவிக்கு....
ஞாயிறு எண்டாக் கூடு கழுவவேணும்....'' அவன் தனக்குள் மெதுவாய் முணுமுணுத்து ஞாபகப்படுத்திக் கொண்டான்.

கூடு கழுவுவது கூட அப்படியொன்றும் கடினமானதில்லை.' அருவருப்பானதாயிருக்கும்' என்று மற்றவர்கள் நினைத்திருந்த போதும் அது அருவருப்பானதொன்றுமில்லை. அம்மாவே தொங்கும் கறுப்புக்கூட்டினுள் நீர் தெறித்து விடாமல் மரக்கூட்டைச் சுத்தம் பண்ணித்தருவாள். அவன் பச்சைக் கைபிடி இட்டிருந்த கோப்பையால் நீரூற்ற வேண்டியது மட்டும்தான்.

அம்மா ஓரங்களைக் கழுவிக்கொண்டே அவனிடம் கேட்பாள்....

''இண்டைக்கு என்ன கிழமை...?''
''ஞாயிற்றுக்கிழமை...''
''இங்கிலிஷ்ல...?''
'தேஸ்டே... ரீ...ஏச்...யூ...ஆர்...எஸ்... டே... டீ...ஏ...வை...டே....''

அம்மா கழுவுவதை விட்டுவிட்டு ஈரக்கையால் அவன் மூக்கை நிமிண்டுவாள். அகன்ற விழிகளைக் கோபமாய் இன்னமும் அகலமாக்குவதாய்ச் செய்வாள். பிறகு அவனது உயரத்துக்குக் குனிந்து திருத்தமாய்ச் சொல்லித் தருவாள். அதன்பிறகு அவனுக்கு மறக்காது.

''பூக்குருவி கூடு கழுவினா... சன்டே...''

கணக்குகள் கூட, சுமதி ரீச்சர் விதவிதமாய்ப் போட்டாலும் அவனுக்குக் கடினமாய் இருப்பதில்லை. ராஜு, நிஷா எல்லோரும் கைவிரல்களையும் மடித்து, கால் விரல்களையும் மடித்த கைவிரல்களால் தொட்டு எண்ணுவதற்குக் கடினப் பட்டுக்கொண்டிருக்கும் போது அவன் சுமதி ரீச்சரிடம் 'வீ.குட்' வாங்கியிருப்பான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா ஆச்சரியமாய்க் கேட்பாள்...

''நானும் காட்டித்தராத கணக்கு... எப்படி யப்பன் சரியாய்ச் செய்தனீ?''

''பூக்குருவியை வைச்சுச் செய்தனான்...''

''எப்பிடி...?''

''பத்து.. சய மூண்டு.. சக ஒண்டு தானே?''

''ம்...ம்......?''

''பூக்குருவி பத்து முட்டையிட்டு அதில மூண்டு குஞ்சு பொரிக்கேல்லை... அப்ப ஏழு குஞ்சு...ம்ம்... பிறகு ஒரு குஞ்சு பொரிக்குது... எட்டு.... எட்டுக்குஞ்சு... எட்டுப் பூக் குருவிக்குஞ்சு...''

அவன் கைகளைக் கொட்டிச் சிரிப்பான். கணிதம் மறந்து பூக்குருவிக் குஞ்சுக் கனவு தொடரும்.... அம்மாவும் குதூகலமாவாள்.




இப்போது எதுவுமில்லை. அம்மா மிகவும் தளர்ந்துவிட்டாள். வீட்டிலிருந்து புறப்பட்ட நாளிலேயே அவளின் அடிவயிறு சற்று உப்பலாய்த்தான் இருந்திருந்தது. இப்போதோ... நன்கு ஊதிய பலூனின் பக்கப்புறம் போல மேடிட்டு...

வெளிறியும் போனாள். சிறிய காற்றையும் தாங்காத, பச்சை நரம்புள்ள வெண் மஞ்சள் இலைகளை அவள் அடிக்கடி ஞாபகமூட்டினாள். கண்களுள் நித்தியமாய் வலியுணர்கின்ற பிரக்ஞை இருந்தது.

அவள், இந்த உப்பல் வயிற்றோடு ஒரு கட்டிலோ கதிரையோ இல்லாத இந்த வெற்றுக் கட்டிடத்துள் நிலத்தில் உட்காரவும் படுக்கவும் படுகின்ற அவதியைப் பார்த்து அவன் அழுவதுண்டு. அவன் பூக்குருவியை நினைத்தே அழுவதாக எண்ணி அவனை அணைத்து நலிந்த குரலில் அவள் சமாதானப்படுத்தும்போது அழுகை அலையலையாகப் படரும் அவனுள்.

எந்தத் தளர்ச்சியிலும் அம்மா அந்த உப்பல் வயிற்றை நேசித்தாள் என்றே தோன்றிற்று - அவன் பூக்குருவியை நேசிப்பது போல.

அவன் எழுந்து மெல்ல அவளருகே சென்று அமர்ந்தான்.

அம்மா வயிற்றில் பட்டுவிடாதவாறு அவனைத் தன் கரங்களுள் அணைத்துக் கொண்டாள். அவன் அவள் உள்ளங்கையை விரித்துத் தன் கண்களுக்கு முன்னே வைத்து அவளது முகத்தைப் பார்த்தான். அப்பா புறப்பட்ட வேளையில் இருந்து பலமுறை கேட்ட கேள்வியை இன்னொருமுறை கேட்கத் தோன்றிற்று.

''அம்மா...''

''ம்...ம்... என்னப்பன்....?''

''அப்பா பூக்குருவிக்கூடு கொண்டு வருவரே...?''

''வீட்டை போக ஏலுமெண்டாக் கட்டாயம் கொண்டுவருவார்...''

அவள் குரல் அவன் கேள்வியையும் அவளது பதிலையும் தாண்டி எங்கோ தொலைவுள் எத்தனையோ எண்ணங்களுள் புதைந்து போயிருந்ததாய் நலிந்து ஒலித்தது. மதியம் சாப்பிடாததாலோ என்னவோ வழமையைவிடவும் அவள் மிகக் களைத்திருந்தாள். அவனும் கூடச் சாப்பிடவில்லை இன்னமும். அப்பா வந்த பிறகு பூக்குருவியையும் வைத்துக் கொண்டு சாப்பிடலாம்!

யாருமல்லாத ஊரின் தனிமையும் காற்றைக் கிழிக்கின்ற அதிர்வுகளும் பூக்குருவியை எங்காவது பறந்துவிட வைத்திருக்குமோ என்ற எண்ணத் தவிப்பு அடிக்கடி எழுந்து அவனை அலைக்கழித்ததுண்டு. ஆனாலும் அம்மா அவன் தலை கோதி அவனைச் சமாதானப்படுத்துவாள்; பூக்குருவி அவர்களை மறந்து விடாது என்றும் எங்காவது இரைதேடச் சென்றாலும் மீண்டும் கூட்டுக்குத் திரும்பி வருமென்றும்.

கணத்திலும் மறந்துவிடாமல் உள்ளூரத் தத்தளிக்கின்ற இந்தத் தவிப்பு அம்மாவின் வார்த்தைகளிலும் தணிவதாயில்லை. முன்னரைப் போல எனின் அவன் ஒருவேளை 'பூக்குருவி வரும்' என்பதில் சந்தேகமே கொள்ளாது இருந்திருப்பான். அப்போதெல்லாம் அவனுக்குத் தெரிந்தவாறு அல்லது அவன் எதிர்பார்த்தவாறுதான் காலங்கள் வந்தன; நிகழ்ந்தன; மறைந்தன; ஏதோ நியமம் போல.




பாடசாலைக் காலம், விடுமுறைக்காலம், புதுவருடக்காலம், மழைக்காலம், பிறந்த நாட்காலம்... என எல்லா நாட்களும் அவன் அறிந்தவாறு எதிர்பார்க்கின்றவாறு புத்தொளியுடன் ஒரு சந்தோஷமான வீச்சுப் போல நுழையும். சின்னச்சின்னச் சலிப்புகள் சிதற முன்னரே ஓடி மறைந்து விடும். நுழையும் போதும் சந்தோஷம்தான். மறையும்போதும் சந்தோஷம்தான்.

இப்போதோவெனின் அசையாத ஒரு பெரும் பாரமுள்ள சாம்பல் நிறச் சலிப்பூட்டும் காலம் எல்லோர் மேலும் கவிந்து அழுத்தி நசுக்கியபடி நகர மறுப்பதாய்த் தோன்றுகின்றது. இந்தக் காலத்தின் மூடிய அகன்ற கரங்களுள் உள்ள எல்லாமே அவனுக்கு அந்நியமானவையாயும் அவன் எதிர்பாராதவையாயுமே நிறைந்து இருந்தன என்பதாய் உணர்ந்தான். 'பூக்குருவி வரும்' என்பதைக் கூடத் தவிப்பின்றி, நிதானமாய், ஒரு பரிச்சயமான காலத்தை எதிர்கொள்வது போன்ற நம்பிக்கையுடன் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?

ஆனாலும் 'பூக்குருவி வரும்' என்பதை அவன் தனக்குள்ளேயே அடிக்கடி சொல்லிப் பார்த்து நம்ப முயற்சித்துக் கொண்டிருந்தான். அவன் வரையிலான எல்லா நியமங்களையும் உடைத்தெறிந்து, அசுரத்தனமாய் உள்நுழைந்த ஒரு இரக்கமற்ற காலத்தின் கொடுமையான விழுங்குதல்களிலிருந்து, தனக்கெனத் தன்னுடைய ஒன்றைப் பறித்தெடுத்து விடுகின்ற தவிப்புடன் ஒரு முனைப்போடு 'பூக்குருவி வரும்' என்பதை அவன் நம்புவதற்கு மிக விரும்பினான்.

'அப்பா பூக்குருவியை கொண்டு வருவார்... அப்பா பூக்குருவியைக் கொண்டு வருவார்...' அவன் கண்களை இறுக மூடியபடி மனத்துள் முணுமுணுத்தான்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஒரு எதிர்பாராத நாளொன்றின் காலைப்பொழுதில் அப்பாதான் பூக்குருவியையும் கூட்டையும் இவனுக்கு அறிமுகப்படுத்தியிருந்தார். முதன்முதலாய் மேசையில் வைத்திருந்த கூட்டைப் பார்த்தபோது புதினமாய் எதுவும் தென்படவில்லை; இரும்புச் சட்டங்கள் வரியப்பட்ட வெளிப்புற மரக்கூட்டையும், உள்ளே கவிழ்த்து வைக்கப்பட்ட நீண்ட கழுத்துக் கூசாபோல தொங்கிக் கொண்டிருந்த கறுப்புநிறக் கூட்டையும் தவிர.

''கொஞ்ச நேரத்தில கூட்டுக்குள்ள இருந்து ஒரு ஆள் வருவார்...'' அவன் கேட்க விரும்பிய கேள்விக்குப் பதில் சொல்லிவிட்டு, ஒரு மந்தஹாசப் புன்னகையோடு அப்பா தன் அலுவல்களைக் கவனிக்கப் போய்விட்டார்.

அவன் கைகளை மடித்து முகவாயை முழங்கையில் ஊன்றியபடி கூட்டையே உற்றுநோக்கிக் கொண்டிருந்தான். பார்க்கப் பார்க்கக் கூட்டின் அமைப்பு வியப்பைப் பெருக்கிற்று. காகிதத்துண்டுகள், ஓலைநார்கள், தும்பு முதலியனவற்றால் வனையப்பட்டிருந்த கூட்டை மரக்கூட்டினுள் வசதியானபடி பொருத்துவதற்கு அப்பா நிறையச் சிரமப்பட்டிருக்க வேண்டும்!

பார்த்துக் கொண்டிருக்கக் கூடு மெதுவாய் ஆடிற்று. காற்றடிக்கிறதா என்ன! மின்விசிறி ஓய்விலிருந்தது. யன்னல்களின் வெளியே காற்று அசையாமலிருந்தது. அவன் அதிசயமாகிக் கூட்டினோரம் தலைநுழைத்துப் பார்க்கக் கூட்டின் கீழ்ப்புற வாயிலூடு மஞ்சள் தொப்பி போட்ட கபில முகத்தை நீட்டிற்று 'அது'! இவன் மூச்சை இழுத்துப் பிடித்தான். மெல்ல வெளியே வந்து எச்சரிக்கையாய்த் தலையைத் திருப்பிற்று கபிலக்குருவி!

அவன் தன்னை மறந்து அம்மாவைக் கூப்பிட்டதுதான் தவறாயிற்று. சடாரென ஒரு பறப்பில் கூட்டினுள் மறைந்து விட்டிருந்தது.

அது மெல்லியல்புள்ள குருவி என்றும், உரத்துப் பேசுவது அதற்குப் பிடிப்பதில்லை எனவும், முரட்டுத்தனமாய் நடக்கக்கூடாது என்றும் அப்பா சொன்னார்.

அதன்பிறகு மிருதுவாய் உதடசைத்துப் பேசி அதனோடு நட்பாகி விட்டான். அது மெல்லச் சாய்ந்து நடந்து கம்பி விளிம்பருகே வரும். மெல்லிய இழை போன்ற குரலில் ஏதோ சொல்லும். தீனிபோடச் சாவகாசமாய்க் கொறிக்கும்.

ஆனாலும் தூக்கணாங்குருவி என்ற பெயரில் ஆரம்பத்திலிருந்தே அவனுக்குப் பிடித்தமில்லை. அளவில் பெரிய குருவிக்கு வைத்திருக்க வேண்டிய பெயர் என அவனுக்குத் தோன்றும்.
''அது என்ன தூாாாா ஊஊஊக்கணாங்குருவி...க்கணாங்குருவிச்சாய்... செம்பு விழற சத்தம் மாதிரி... அப்ப தூக்குருவி... தூக்குருவி... அதுவும் சரியில்லை...'' கூட்டருகே சென்று அமர்ந்தான்.



''உனக்கு உந்தப் பேருகள் பிடிக்கேல்லை எல்லோ...?'' சின்னக்குருவி கழுத்தாட்டி மெதுவாய் நடந்தது.
''அப்ப என்ன பெயர் வைக்கிறது..?''
அது நின்று அவனைப் பார்த்தது. பின் மெல்லிய இழைக்குரலில் ஏதோ பேசிற்று. ஒரு மென் மஞ்சட் பூவொன்று காற்றிலசைவதாய்த் தலையை ஆட்டிற்று. அவனுள் சட்டென மகிழ்ச்சி ததும்பியது.
''பூக்குருவி..! பூக்குருவி..!'' கைகளைக் கொட்டித் துள்ளினான். எத்துணை அழகான குருவி! எத்துணை அருமையான பெயர்! அவனுக்குத் தன்னிலேயே சந்தோஷம் வந்தது.

'நேசரி'யில் ராஜுவிடம் மட்டும்தான் அவன் பூக்குருவி பற்றிச் சொல்லியிருந்தான். ஆனாலும் சொன்ன மறுநாளிலேயே ஆசிரியை வகுப்பில் இல்லாத வேளையொன்றில் எல்லோரும் அவனது சின்னக் கதிரையைச் சூழ்ந்து விட்டிருந்தார்கள். ஆரம்பத்தில் தன் பூக்குருவி பற்றித் தானே சொல்வதற்குக் கூச்சமிருந்தாலும், அவனது பூக்குருவி பற்றிய ஒவ்வொரு வார்த்தைகளும் அந்தக் கூட்டத்தில் எவ்வளவு பெறுமதியாய்த் தவழ்கிறது என்பதை உணர்ந்த பிறகு ஆசிரியை எப்போது வகுப்பை விட்டு விலகி நிற்பாள் என்று எண்ணத் தோன்றும் அவனுக்கு.

நிஷா கூட அவனருகே நின்று, அவன் பூக்குருவி பற்றிச் சொல்வதை ஒரு ஏக்கமான பொறாமை விழிகளில் கேட்டுக்கொண்டிருப்பதில் அவனுக்கு நிறையச் சந்தோஷமிருந்தது. ஆனாலும், அவன் அவளைக் கவனியாதவன் போல, மற்றவர்களின் பக்கம் திரும்பி பூக்குருவியை விவரிப்பான். நிஷாவுக்கு அவன் முதுகைப் பார்த்தபடிதான் சொற்களைக் கேட்க வேண்டியிருக்கும்.

நிஷாவுக்கும் அவனுக்கும் 'நேசரி ஸோங்' பாடுவதில் எப்போதும் போட்டியிருந்தாலும் முதலாமிடம் அவளுக்குத்தான் எப்போதும்.

மென்சிவப்பு நிறத்துடன் குண்டுக் கன்னங்களின் மேல் உருண்டு உருண்டு கதை பேசுகின்ற அகன்ற கண்களுடன் பொம்மை போலச் சட்டையணிந்து அவள் 'ஸோங்' தொடங்கிவிட்டால் யாருக்கும் விழிகளை இமைக்க விருப்பம் வராது. பரிசுப்பெயர் வாசிக்கும்போது அவளின் பின்னால் தான் இவன் நிற்கவேண்டியிருக்கும். அவள் இவனையே தெரியாதமாதிரி முதுகுகாட்டி நின்றிருப்பாள். முகம் திருப்பிப் பார்க்கவே மாட்டாள். மிஞ்சிப் போனால் அவளது செம்பட்டுக் கன்னங்களின் ஓரம் மட்டும்தான் அவனுக்குத் தெரிய முடியும்.

பள்ளிக்குப் போகும் பெரிய பையன்களுக்குக்கூட அவனது பூக்குருவி பற்றித் தெரிந்திருந்தது. அவன் அம்மாவின் கைபிடித்து 'நேசரி'க்கு நடந்துபோகும் வேளையில் பெரிய பையன்கள் இவர்களைத் தாண்டிச் சைக்கிளிற் செல்வார்கள்.
ஒருவன் திரும்பி மற்றவனுக்குச் சொல்வான்... ''டேய்...! உவன் வீட்டில தூக்கணாங்குருவி வளர்க்கினமாம்...'' எல்லாத் தலைகளும் ஒருசேரத் திரும்பிப் பார்க்க, அவன் அவர்களைப் பாராதது போல அம்மாவுடன் ஏதேனும் கதைப்பான்.




**ஒன்பதாய பிராயத்தள்**
**என் விழிக்(கு)**
**ஓதுகாதைச் சகுந்தலை**
**யொத்தனள்**
**என்பதார்க்கும்**
**வியப்பினை நல்குமால்**
**என் செய்கேன்?**
**பழியென்மிசை உண்டுகொல்?**
**அன்பெனும் பெரு**
**வெள்ளம் இழுக்குமேல்**
**அதனை யாவர்**
**பிழைத்திட வல்லரே?**
**முன்பு மாமுனி வோர்**
**தமை வென்றவில்**
**முன்னரேழைக் குழந்தை**
**யென் செய்வனே?**

*- பாரதி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டை வரை ததும்புகின்ற சந்தோஷத்தில் எத்தனை வர்ணச் சாரல்கள் சிதறும் அவ்வேளைகளில்!

''பூக்குருவி... பூக்குருவி....!
என்னூாாாடைய பூக்குருவி....!''
ஆனந்தமாய்ப் பாடியபடி அம்மாவுடன் நடப்பான் அவன்.

ஒருநாள் சுமதி ரீச்சர் 'எனது செல்லப் பிராணி' பற்றி ஐந்து வசனம் எழுதச் சொன்னபோது வகுப்பு மொத்தமும் பூக்குருவி பற்றி எழுதியிருக்க, சுமதிரீச்சருக்கும் பூக்குருவி விஷயம் தெரிந்ததாயிற்று. ரீச்சர் பூக்குருவி பற்றிக் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் அழுகையை மறைத்தபடி விடை சொல்வதற்கு மிகப் பிரயத்தனப்பட வேண்டியிருந்தது அவனுக்கு.

அன்று வீடு வந்ததுதான் தாமதம்! குமுறிக் குமுறி அலையலையாய் எழுந்தது அழுகை! அம்மாகூடப் பயந்து போனாள்.. ஆனாலும் அழுகையின் நுனி பற்றி இழுத்துக் காரணம் தெரிந்து கொண்டபோது ஆசுவாசமாய் அவனைப் புன்னகையுடன் அணைத்துக்கொண்டாள் அம்மா.


''என்ரை பூக்குருவி எல்லோ அம்மா அது...? எல்லாரும் தாங்கள் வளக்கிற செல்லப்பிராணி எண்டெழுதினா எனக்கு கோவம் வரும்தானே... நான் இனி அவை ஒருத்தரோடயும் கதைக்க மாட்டன்...''

''இல்லை அப்பன்... அப்பிடிக் கோவிக்கக்கூடாது... ஆர் எழுதினாலும் என்ன... குருவி உன்ரை தானே...''

ஆனால் அம்மா சொன்னதும் இல்லையாகிப் போனது. எதுவும் எடுத்துக்கொள்ள இயலாத அவசரத்தில், நிமிட இடைவெளிகள் கூட இல்லாமல் இரும்புக்கோளங்கள் காற்றைக் கிழித்துப் பிளந்த பொழுதில் அம்மா சொன்னதும் பொய்த்து அவன் பூக்குருவி அவனுக்கும் இல்லையாகிற்று.

அப்பாவின் கையில் இரண்டு பைகள், அம்மாவுக்கு உப்பல் வயிறும் ஒரு கையில் இவனும், பூக்குருவியின் கூட்டைத் திறந்து விட்டு வாயிலில் தீனியைக் கொட்டியிருந்தார் அப்பா. அவர்கள் புறப்படும் வரை கூட்டுள்ளிருந்து ஒருதடவை கூடப் பூக்குருவி வெளிப்படவில்லை. அதற்கு உரத்த அதிர்வுகள் பிடிப்பதில்லை. பயமும் கூட.

சின்னச்சின்ன முட்புதர்கள் படர்ந்திருந்த நெடுவெளியூடு நடந்து கொண்டிருந்த ஊரோடு அவர்களும் தொடர்ந்தார்கள். அவனுக்குப் பூக்குருவியின் நினைவுகள் புதிது புதிதாய்க் கண்ணீரை உற்பவித்துக் கொண்டிருந்தன. அம்மா வழமைபோல் அவனது உயரத்துக்குக் குனிந்து அவனது கண்ணீரைத் துடைக்கவில்லை. ஏதோ ஒரு பிரமாண்டமான அச்ச






இவ்வளவு வன்முறையான
இவ்வளவு மென்மையான
இவ்வளவு மிருதுவான
இவ்வளவு நம்பிக்கையிழந்த
இந்தக் காதல்...
கழுதையைப் போல் பிடிவாதமாக
ஆசையைப் போல் துடிப்பாக
ஞாபகத்தைப் போல் கொடியதாக
மனக்குறைகளைப் போல்
முட்டாள்தனமானதாக
நினைவுகளைப் போல் மென்மையாக
பளிங்கைப் போல் குளிர்ச்சியாக
பகல் பொழுதைப் போல் அழகாக
குழந்தையைப் போல் மிருதுவாக
புன்னகையுடன் நம்மைப் பார்க்கிறது
- ழாக் ப்ரெவெர்

இருளுள் தொலைந்தவனாய், அவள் விழிகளில் வலியுணரும் பிரக்ஞையுடன் அவன் விரல்களை பற்றி நடந்து கொண்டிருந்தாள். கண்கள் ஈரமாயிருந்தன. அப்பாக்கும் சுமை கனத்திருக்க வேண்டும்... ஆனால், அவ்வெளியில் சுமை வைப்பதற்குப் பொருத்தமாய் இடம் இருக்கவில்லை.

வழியில் பெரிய பையன்களும் தாண்டிப் போனார்கள். வழமை போல எவனும், 'இவன்தான் குருவி வீட்டுப் பையன்' என்று மற்றவர்களிடம் சொல்வானோ என இவன் ஏக்கமாய்ப் பார்த்தான். எவனும் வெற்றுப் பார்வையுள் இவனை வீழ்த்தியபடி அப்பால் விரைந்துகொண்டிருந்தான்.. அச்சவெளியுள் விழுந்து எல்லாம் மறந்தவனாக. இவனையும் பூக்குருவியையும் மறந்தவனாக.

ஒரு திருப்பத்தில் ராஜு தன் தம்பியின் கையைப் பிடித்தபடி நடந்து கொண்டிருந்த போது இவனுக்குள் துக்கமான பேரவா எழுந்தது; தான் பூக்குருவியை விட்டுவிட்டு வந்ததைச் சொல்ல வேண்டுமென. ஆனாலும் இவனைப் பார்க்கும்போது இவனது பூக்குருவி பற்றிய ஞாபகம் அவனுள் எழவே இல்லை என்பதை அவனது கண்களில் வழிந்த நீர் சொல்லிற்று. சொல்ல நினைத்ததை மறந்து இவனும் அழுதான். ராஜுவின் அம்மா இவனது அம்மாவின் கையைப் பிடித்து அழுதாள். பிறகு ஒரு முடக்கில்அவர்கள் வேறு திசையாய்ப் பிரிந்து போனார்கள். இவன் அம்மாவை பற்றாத மற்றக் கையினால் கண்ணீரைத் துடைத்தான்.

ஒருநாள் நடந்து முடித்த பொழுதில் நிஷாவின் அண்ணனைக் காண நேரிட்டது. அம்மாவைக் கண்டபோது சகிக்க முடியாத கண்ணீர்க் கோலத்துடன் ஓடி வந்தான். சொற்களை விழுங்கியும் கண்ணீருள் கரைந்தும் அவன் திணறியபடி சொல்லச் சொல்ல அம்மா அதிர்ந்து போய் அந்த இடத்திலேயே சரிந்து உட்கார்ந்து விட்டாள்.

''கழுத்திலை பட்டுட்டுது அக்கா.. இரத்தத்தை நிப்பாட்டேலாமப் போச்சுது... அம்மா அவளை விட்டுட்டு வரமாட்டன் எண்டு கத்திக் கத்தி மயங்கிப் போனா.... தோளிலதான் வைச்சுக் கொண்டு வந்திருக்க ஏலும்... எவ்வளவு தூரம் நடக்கிறது... அப்பாதான் பூந்தோட்டத்துக்கை குழிவெட்டி...''

அவன் பெரிய பையன் என்பதை மறந்து பெரிதாய் அழுதான். அம்மா இவனை இறுகக் கரங்களுள் பற்றியபடி ''நிஷா.. நிஷா'' என்று அரற்றிக் கொண்டிருந்தாள். அவள் கைகள் நெடுநேரமாய் நடுங்கிக்கொண்டிருந்தன.

பாவம் 'நேஸரிஸோங்'. மென்சிவப்புப் பட்டுக்கன்னங்களுடன் ஒரு அழகான குட்டிப் பொம்மைச் சிறுமி செய்வதைப்போல அதனை யாரும் அத்துணை இனிமையாய்ப் பாடமுடியாது. நிஷா.. நிஷா... அவளுக்குப் பூக்குருவி பற்றிக் கேட்பதற்கு எவ்வளவு விருப்பமிருந்தது! அவன் அவளுக்கு முதுகைக் காட்டாமல் முகம் பார்த்து பூக்குருவி பற்றிச் சொல்லியிருந்தானெனின் இப்போது சுட்டுப் பிசைகின்ற இக் கொடிய துயரம் சற்றாவது குறைந்திருக்குமோ என்னவோ. பூக்குருவியும் நிஷாவும் அவனைத் தொடர்ச்சியாய் அழவைத்தார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு வந்தபிறகு வந்தநாட்களில் அப்பா அவனை இங்குள்ள 'நேஸரி'யொன்றில் சேர்த்திருந்தார். இங்குள்ள பையன்களில் எவனும் இவன் பூக்குருவி வளர்த்தானென் பதை அறிந்திருக்கவில்லை. அந்தப் பூக் குருவி எவ்வளவு அருமையானதாய் இரு ந்ததென்பதைக்கூட அவன் சொல்ல முயற் சித்தபோதும் நிஷாவைப்போல, ராஜ"வைப் போல கண்களில் ஆவல் மிளிரும் நம்பிக் கையுடன், எவனும் கேட்கத் தயாராயும் இருக்கவில்லை.

சொல்லப் போனால் இவனுக்கு 'நேஸரி' யே பிடிக்காமல் தானிருந்தது. பூக்குருவி இல்லாத சாதாரணப் பையன் எப்படிக் கிழ மை நாட்களை ஞாபகப்படுத்த முடியும்? எப்படிக் கணக்கை முதலில் போட்டு 'வீ. குட்' வாங்க முடியும்? பள்ளி செல்லும் பெரிய பையன்கள் கூட இவனை அறிந்தி ருக்கமுடியும் என்பதை எவ்வாறு எதிர்பார் க்க முடியும்? எவ்வளவு அருமையான பூக் குருவி! அவனுள் எண்ணங்கள் நெகிழ்ந்து கண்களூடாய்க் கசிந்திருக்க வேண்டும்.

''ஏனப்பன் அழுறாய்...? அப்பா இண்டை க்கு எப்படியும் பூக்குருவியைக் கொண்டு வருவார்...'' அம்மாவின் குரல் தளர்ந்து கரகரத்திருந்தது. அவள் இதமாய் அவன் தலையை வருடினாள்.

அவன் அம்மாவின் வயிற்றில் பட்டுவிடாத வாறு மெல்ல அவளைவிட்டு எழுந்தான். வெளியே இருளின் மென்சாயம் நிலத்திற் படியத் தொடங்கியிருந்தது. தூரே எங்கோ வெடிச்சத்தங்கள் கேட்டுக் கொண்டிருந்தன. அவன் வீடு, பூக்குருவி எல்லாம் கூடச் சத்தம் கேட்கின்ற அந்தத் திசையில்தான் இருப்பதாக அம்மா முன்னரெப்பொதோ சொன்னது ஞாபகம் வந்தது.

''பூக்குருவி... பூக்குருவி...!''

என்னூாடைய பூக்குருவி...!'' மனம் மெலி தாய்ப் பாடிற்று அழுகையுடன். 'அம்மா... அப்பா... பூக்குருவி... அப்பா... பூக்குருவி...' அவன் தூரே மடிந்து திரும்பிய ஒழுங் கையில் விழிகளைப் பதித்து யாராவது தென்படுகிறார்களாவெனத் தேட முயற்சித் தான். வெளியே திரள்திரளாக மெல்ல அடர்ந்து கொண்டு அசைந்து வருகின்ற இருட் படலங்களை மீற முடியாமற் பார் வையின் எல்லை குறுகிற்று. நிலாக்கால முமில்லை இது.

நெஞ்சு முறுக்கி முறுக்கி அழுகை கிளர்ந் தது. புறங்கைகளால் விழிகளைத் துடைத் தபடி மறுபடியும் அம்மாவை நெருங்கி உட்கார்ந்தான். அவனை அணைத்தபோது அம்மாவின் புறங்கைகளும் ஈரமாகி நடுங் கிக் கொண்டிருந்ததை உணர முடிந்தது.

'அப்பா... அப்பா... பூக்குருவி... அப்பா...'' அவன், மடக்கித் தன்னுள்ளே விழுங்க விரும்பிய அழுகை, உதடுகளூடாகப் பீறிட் டுக் காற்றைக் கசக்கத் தொடங்கிற்று. ●

# தமிழ் எழுத்தாளனுக்கும் தனியே ஒரு குணம்

...ஜெயமோகன் 'விஷ்ணுபுரம் நாவலை எழுதுவதற்காக தரவுகளைத் திரட்டும் முயற்சியில் மும்முரப்பட்டிருந்தார். அதன் ஒரு கட்ட பணியாக அவருக்கு தென் பகுதியிலுள்ள வைணவ ஸ்தலங்களை சென்று பார்க்கும் திட்டமிருந்தது. நாங்கு நேரி, ஸ்ரீவைகுண்டம், ஆழ்வார்திருநகரி போன்ற இடங்களில் அமைந்துள்ள வைணவ திருத்தலங்களுக்கு அவருடன் சென்றேன். ஜெயமோகன் தன்னுடன் செல்பவர்களை தம்பியாகவோ தொண்டனாகவோ அல்லது குருவாகவோ பாவிப்பது வழக்கம். என்னைத் தம்பியாக பாவிப்பார். அது சரியானதுதான் என்றாலும் தம்பியாக, மகனாக இருப்பதில் எனக்கு ஒவ்வாமை உள்ளது. சமமான உறவு அவருக்குச் சாத்தியமில்லை. இது அவருக்குத் தெரியும் என்றாலும் இந்த ஜென்மத்தில் அவர் ஏற்றெடுத்திருக்கிற பணி அவரை வேறு வகையாக இருக்க அனுமதிப்பதில்லை என்பது எனது எண்ணம்.

எனக்குத் தெரிந்த பல எழுத்தாளர்கள் கடவுளுக்கு அடுத்த ஸ்தானத்தில் இருப்பவர்கள். கடவுளுக்கு அடுத்த ஸ்தானம் என்பதும் ஒரு சடங்குதான். கடவுளையும்கூட சமமாக மதிக்கத் தகுந்தவர் என்று இவர்கள் எண்ணுவதில்லை. கடவுளின் இருப்பை அழித்துவிட்டால் தங்க ளாலும் கடவுளாகிவிட முடியும் என்று கருதுகிறவர்கள் இவர்கள். இவர்களைப் பொறுத்த வரையில் கடவுளும் கூட ஒரு முட்டாள்தான். எனக்குத் தெரிந்த ஒரு கவிஞர். எனது நண்ப ரும்கூட. கைலாஷ்சிவன். 'சூனியப்பிளவு' என்கிற அவருடைய கவிதைத் தொகுப்பு நூல் ஒன்றும் வெளிவந்துள்ளது. மிகவும் சோபையான தமிழ் கவிதைச் சூழலில் சில மினு மினுங்கும் வரிகள் இந்தத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இதை வைத்தே கைலாஷை முக்கியமான இளம்கவிஞர் என்று கொண்டாடுகிற அளவுக்குப் பஞ்சம் தலைவிரித்து தாண்ட வமாடுகிறது. நேராக ஒரு முழு கவிதையைக்கூட எழுதியிராதவர் அவர். ஆனால் அவரும் கூட கடவுளின் அருகிலேயே தனது இருக்கையை அமைத்துள்ளார். தன்னைத் தவிர பிறரு டைய செயல்பாடுகள் எதற்குமே புண்ணியமில் லை என்பதில் தீராத நம்பிக்கை கொண்டுள் ளார்.




பார்த்தேனடி உன் முகத்தை
பகைச்சேனடி என் சனத்தை
கேளாத வார்த்தை யெல்லாம்
தங்கரத்தினமே...
கேட்டேனடி உன்னால...
*- நாட்டார் பாடல்*

இத்தகைய விசித்திர மனோபாவத்தின் ஊற்று எங்கிருந்து பிரவாகமெடுக்கிறது என்று அறி யக்கூட இயலவில்லை.... எழுத்தாளர்களிடம் புழங்கும் இத்தகைய மனோபாவத்திற்கும் சாதீய அமைப்பிற்கும் தொடர்பிருக்கக்கூடுமோ என்கிற சந்தேகம் என்னிடமுள்ளது. தமிழுக்கு தனியே ஒரு குணமிருப்பதுபோல தமிழ் எழுத் தாளனுக்கும் ஒரு குணமிருக்கிறது.

ஒவ்வொரு சாதியுமே தன்னை அரசாண்ட சாதி யாகவும் அதிகாரத்திலிருந்து வீழ்ச்சியடைந்த சாதியாகவும் கருதுகிறது. எந்தவிதமான படி நிலையில் உள்ளபோதும் இத்தகைய மனோபா வம் பொதுவாக உள்ளது. தாங்கள் ஆண்ட பரம்பரை தற்பொழுது வீழ்ச்சியுற்று அவதிப்படு கிறோம் என்கிற புனைவு சாதிகளுக்குத் தேவை ப்படுகிறது. இதுவொரு செயல்பாடாகவும் உள் ளது. சமூகம் தோல்வியாகக் கருதுகிற ஒரு நிலையை ஒரு தனிமனிதன் அடைந்தால் உடனடியாக அவர் தனது பொற்காலம் குறித்து கதை சொல்பவராக மாறிவிடுகிறார். ''நான் எவ்வாறெல்லாம் இருந்தேன் தெரியுமா? நான் இப்போது இவ்வாறாகச் சீரழிய வேண்டியுள்ளது. நான் சீரழிவது கருணைக்குரியது. கடவுள் பிச்சையெடுக்க நேர்ந்தால் எப்படியிருக்குமோ அதனை ஒத்தது எனது நிலை'' என்கிறவிதமான ஒரு புனைவு அது. நமது பெருங்கதைகளிலிருந்து தமிழ்த் திரைப்படங்கள் வரை இத்தகைய ஒரு மனோபாவத்தை காலத்தில் சுமந்துகொண்டு வந்து நம்மிடத்தில் சேர்ப்பிக்கிறது.

எம்.ஜி.ஆரோ, ரஜினிகாந்தோ திரையில் துன்பங்களை அனுபவிக்கும்போது பார்வையாள னுக்கு அவர்கள் துன்பங்களை அனுபவிக்க வேண்டியவர்களல்ல என்கிற கருணை பொங்கு கிறது. அதேசமயத்தில் செந்திலோ, கவுண்டமணியோ, எம்.ஆர்.ராதாவோ, நம்பியாரோ துன் பப்பட்டால் அது தேவையானதுதான் என்று தோன்றுகிறது. ரஜினிகாந்த் ஏதேனும் தொழிற் சாலையில் வேலை பார்த்தால் அதற்கு பின்னணியாக திரையில் தரப்படும் இசை பார்வை யாளனை துயரம் கொள்ளச் சொல்லி வற்புறுத்துகிறது. பார்வையாளன் இப்படியாக ரஜினிகாந் தோடு தனது சாதீய வரலாற்றை இணைத்துக் கொள்கிறான். தனது அகந்தைக்கு ஒரு நியாயத்தை கற்பித்துக் கொள்கிறான்... *- லக்ஷ்மி மணிவண்ணன் ('தமிழ்.கொம்'மில்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இந்த வருட மிஸ் இந்தியா - பிரபஞ்ச அழகி பட்டத்தை வென்றிருப்பவர் இந்த 21 வயது நேஹா துபியா. பிறந்தது வளர்ந்தது படித்தது எல்லாமே டில்லியில். மூன்று வருடங்களாக பல விளம்பரங்களுக்கு மொடலாக இருந்துவருகிறார். நேஹாவுக்கு நிறைய ஆண் நண்பர்கள் உண்டாம். இருந்தாலும் ஆண்களைப்பற்றி அவர் சொல்வது இது: ''ஆண்கள் மிகப் பலவீனமானவர்கள். 90சதவீத ஆண்களுக்கு முழங்காலில்தான் மூளையிருக்கிறது. பெண்கள்தான் சக்தி. நான் பெண்ணாக இருப்பதில் மிகவும் சந்தோஷம்''. 'சரி, மிஸ் இந்தியா ஆகிவிட்டீர்கள் அதைக்கொண்டு என்ன செய்வீர்கள்?' என்ற நிருபரின் கேள்விக்கு 'ஏழைக்குழந்தைகளுக்கு உதவுவேன், வறுமையை ஒழிப்பேன்' போன்ற வழக்கமான சொதப்பல்கள் எதனையும் நேஹா சொல்லவில்லை. அவர் சொன்ன பதில்: ''சந்தோஷமாய்ச் சிரிப்பேன்''.



நவீன ஓவியங்களின் பிதாமகராக கருதப்படும் பிக்காஸோவின் ஓவியங்களை புரிவதில்லை என்று பலர் குறைபட்டுக் கொள்வதுண்டு. ஆனாலும் உலகெங்கும் அவர் ஓவியத்திற்கென பல கோடி ரசிகர்கள். பிக்காஸோ கைப்பட வரைந்த 122 அற்புத ஓவியங்கள் இந்த மாதம் இந்தியாவில் கண்காட்சிக்கு வைக்கப்படுகின்றன. இதற்கென்று பிரான்ஸிலுள்ள பல்வேறு புகழ்பெற்ற அருங்காட்சியகங்களிலிருந்து ஓவியங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. சர்ச்சைகளுக்கு அப்பால் பலர் உள்ளங்களை கொள்ளையடித்திருப்பவர் பிக்காஸோ.



ஈஷா தியோல். இந்தித் திரையுலகின் அன்றைய கவர்ச்சிக்கன்னி ஹேமமாலினியின் அழகு மகள். அப்பா தர்மேந்திரா இளம் பெண்களை ஏங்க வைத்த அன்றைய அதிரடி நாயக நடிகர். 18 வயது ஈஷா ஸ்ரீதேவியின் கணவர் போனி கபூர் தயாரிக்கும் படத்தில் அறிமுகமாகிறார். ஹேராம் படத்தில் வசுந்தராதாஸ் நடித்த பாத்திரத்தில் ஈஷாதான் முதலில் நடிப்பதாக இருந்தார். முதல் படத்தில் அம்மாவும் மகளும் நடிக்க வேண்டாமே என்று அதை நிராகரித்து விட்டார் ஹேமமாலினி. இப்போது சிநேகிதி ஸ்ரீதேவியூடாக மகளை அறிமுகப்படுத்துகிறார். படம் 'கோயி மேரே தில்ஸே பூச்சே'.





பொப் இசை உலகில் கொடிகட்டிப் பறக்கும் அமெரிக்கப் பாடகி பிரிட்னி ஸ்பியர்ஸ். மிருக வதையை எதிர்க்கும் PETA என்ற அமைப்புக்கு ஆதரவாக பல காரியங்களைச் செய்து வருபவர். மிருகங்களைக் கொன்று எடுக்கப்படும் ரோமங்களில் செய்யப்பட்ட ஆடைகளை அணிவோருக்கு எதிராக ஒரு விளம்பரத்தை எடுக்க நினைத்த PETA அதற்கு பிரிட்னி நிர்வாணமாக போஸ் தர இருக்கிறார் என்று செய்திபரப்பி, பரபரப்பாகியிருக்கிறது.

'டைட்டானிக்' படத்தில் அறிமுகமாகி உலகெங்கிலும் உள்ளவர்களால் காதலிக்கப்பட்டவர் கேற் வின்ஸ்லெட். ஆனால் இவர் டைட்டானிக் படத்தில் துணை இயக்குன கடமையாற்றிய டெரிப் லிட்டனை காதலித்து கல்யாணமும் செய்துகொண்டார். இவர்களுக்கு மியா என்று ஒரு வயதுப் பெண்குழந்தையும் இருக்கிறது. காதல் முறிந்து விவாகரத்து வாங்கிவிட்டார். இப்போது 'அமெரிக்கன் பியூட்டி' படத்தை இயக்கிய சாம் மெண்டிஸ் இயக்கும் 'ஐரிஸ்' படத்தில் நடிக்கிறார். சாமோடு காதல் ஆரம்பமாகியிருக்கிறது. படம் முடிய இருவரும் திருமணம் செய்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




புகழ்பெற்ற பெரு நாட்டுப் புகைப்படப் பிடிப்பாளரான மரியோ டெஸ்டினோவின் பிரசித்திபெற்ற புகைப்படங்களின் கண்காட்சி லண்டனில் கடந்த மாதம் இடம்பெற்றது. தன் படங்களோடு நிற்பவர் மரியோ டெஸ்டினோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அமுது
பெப்ருவரி -2002



தங்கள் நாட்டு வீரர்கள் விளையாடுவதை உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டிருக்கும் கமரூன் உதைபந்தாட்ட ரசிகர்களின் கோலம்!



சர்வதேச சாகசப் போட்டியொன்றில், மனித உடல்தான் நம்புங்கள்!



தென்னாபிரிக்க உதைபந்தாட்ட ரசிகர் ஒருவர் அணிந்திருக்கும் விநோத தலைக்கவசம்.




வேலையில்லா இளைஞர்களின் நூதன போராட்டம். ஆஜென்டினாவின் தலைநகரான புவனர்ஸ் அயர்ஸில் பல தெருக்களில் மின்சார மற்றும் தொலைபேசிக் கம்பங்களில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் இப்படிச் சிலுவையிலறைந்ததுபோல் தங்களைக் கட்டிக்கொண்டு, பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்காத அரசுக்க எதிர்ப்பைத் தெரிவித்தனர். நம்மூர் மின்சாரக் கம்பங்களை நாம் பயன்படுத்துவது வேறு தேவைகளுக்கு.



8000 தபால் முத்திரைகளைப் பயன்படுத்தி எலிசபெத் மகாராணி உருவத்தை அமைத்திருக்கிறார் பல்கேரிய ஓவியர் ஒருவர். அவரது தந்தை 30 வருடங்களாகச் சேகரித்த முத்திரைகளாம் இவை. ஆறுமாதங்கள் மினக்கெட்டு செய்த இந்த ஓவியத்தை மகாராணி முடிசூடிக்கொண்ட 50வது நினைவு தினத்தை முன்னிட்டு கடந்த ஜனவரி 14 அவருக்கு அனுப்பி வைத்திருக்கிறார்.





இந்திய எல்லைப்படை வீரர்கள் ஜனவரி 26ந் திகதி இந்திய சுதந்திர தினத்தை முன்னிட்டு செய்து காட்டிய சாகசங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குமூலம்

- காத்த நகர் முகைதீன் சாலி



பால் பொழியும் நிலவு, சிலிர்க்க வைக்கும் தென்றல், தாயாக தாலாட்டும் மரங்கள், தந்தையாக நீராட்டும் குளங்கள், உடன் பிறப்புகளாய் மிருகங்கள், இவைதான் இப்போது என் உலகம்.

நான் யார்? என் பெயரென்ன? வயதென்ன? என்பதெல்லாம் மறக்கடிக்கப்பட்டுவிட்டன. என் இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் எவையுமே எனக்கு தெரியாது. ஆனால் என் கண் முன்னால் நடந்தேறிய கொடூரங்கள், எனக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் எல்லாமே பசுமரத்தாணியாக என்னுள்ளத்தில் புதையுண்டுள்ளது.

இந்த உலகம் எதற்காக, இந்த மனிதர்கள் எதற்காக, மனிதர்களுக்குள் சண்டைகள் யுத்தங்கள் எதற்காக என்பதெல்லாம் எனக்கு தெரியாது.

நான் இப்போது வசிக்கின்ற இந்த காட்டுல மனுஷங்க யாருமில்ல. ஆனா ஐந்தறிவுள்ள மனுஷங்க இங்க நிறைய இருக்கு. இந்த மனுஷங்களுக்கு சொந்தமா இடம் தேவயில்ல, எந்தவிதமான சேமிப்புமில்ல, வஞ்சகமில்ல, சூழ்ச்சியில்ல... அதனால நாட்ல வாழ்ற மிருகங்களோட வாழ்றதைவிட காட்ல வாழ்ற மனுஷங்களோட வாழ்றத நான் பெருமையா நினைக்கிறன்.

நான் அப்போ சின்னப்பிள்ளை. அப்பா கூட கோயிலுக்கு போயிருந்தேன். எனக்கு பூக்களென்றா பிடிக்கும். அப்பாகிட்ட பூ வாங்க கேட்டன்.

அப்பா என்ன ஒரு பக்கமா நிக்க சொல்லிட்டு பூ வாங்க போயிட்டாரு.

நான் தனியா நின்டுட்டிருந்தன். கொஞ்ச நேரத்தில கோயில சுத்தி வெடிச்சத்தம் கேட்டுது. சனங்களெல்லாமல் திசை தெரியாம ஓடினாங்க. நான் அழுதுகிட்டே அங்கிருந்த ஒரு மரத்திற்கு பின்னால ஒழிஞ்சிட்டிருந்தன்.

கொஞ்ச நேரத்தில வெடிச்சத்தமெல்லாம் ஓய்ஞ்சிட்டுது. வெளியில வந்து பார்த்தன். யாரையுமே காணல்ல. ஆனா சற்று தூரத்தில பெரியவங்களும் சின்ன பிள்ளைகளுமா இரத்த வெள்ளத்தில இறந்து கிடந்தாங்க.

நான் அவங்களுக்குள்ள தன்னந்தனியா அப்பாவை தேடினன். அப்பா எனக்கு வாங்கிய பூவோட இரத்த வெள்ளத்தில இறந்து கிடந்தாரு. அப்பா எனக்காக வாங்கிய வெண்ணிற மல்லிகை பூங்கொத்து சிவப்பாக மாறியிருந்தது. நான் ஓவென்று சத்தமிட்டு அழுதன்.

அப்பாவ அசைத்து, அடித்து புரட்டி எழுப்பி பார்த்தன். அப்பா எழும்பல்ல. எனக்கு வீட்டுக்கு போகவும் வழி தெரியாது. நான் அப்படியே அழுதிட்டிருந்தபோது மீண்டும் வெடிச்சத்தம் கேட்க ஆரம்பிச்சிட்டு.

வீதிக்கு ஓடினேன். எங்க ஊரில உள்ள எல்லாரும் மூட்ட முடிச்சோட ஓடிக்கிட்டிருந்தாங்க. நானும் அவங்க ஓடின திசையால அழுதுகிட்டே ஓடிக்கிட்டிருந்தன். என்ன யாரும் கண்டுக்கவேயில்லை.

ஓடின சனத்துக்குள்ள என் அம்மாவும், தங்கச்சியும் இருக்காங்களான்று தேடிக்கிட்டே ஓடினேன். எல்லாரும் பக்கத்து ஊருல உள்ள ஒரு பள்ளிக்கூடத்துக்கு போகும் வரைக்கும் ஓடினாங்க.

நானும் ஓடினன். என் அம்மாவையும் தங்கச்சியையும் நான் அந்த சனத்துக்குள்ள தேடிக்கிட்டிருந்தபோது ஒருத்தரு என்னை கண்டு என் அம்மா இருக்கிற இடத்த காட்டினாரு.

அம்மாவும், தங்கச்சியும் என்னை கண்டதும் கட்டிப்பிடிச்சிட்டு அழுது புலம்பினாங்க.

அப்பா எங்கெண்டு கேட்டாங்க. நடந்ததைச் சொன்னன். அம்மா'கோ'வென்று அழுதாங்க. கொஞ்ச நேரத்துல அப்படியே நிலத்தில விழுந்தாங்க. பக்கத்துல இருந்தவங்க அம்மா இறந்திட்டதா சொன்னாங்க. நானும் தங்கச்சியும் அம்மாவை பிடிச்சிட்டு அழுதிட்டிருந்தோம்.

கொஞ்ச நேரத்தில ரெண்டு மூனு வாகனம் வந்திச்சி. எல்லோரையும் ஏத்தினாங்க. அகதி முகாம் போறதா பெரியவங்க சொன்னாங்க. நானும் தங்கச்சியும் அம்மாவின் உடலை கட்டிக்கொண்டு போவதற்கு மறுத்தோம். வலுக்கட்டாயமா எங்களையும் வாகனத்துல ஏத்திக் கொண்டு போனாங்க.

நானும் தங்கச்சியும் அனாதையாவும் அகதியாவும் போயிட்டம்.

அகதி முகாமில ஒரு சின்ன இடத்தில எல்லாரும் இருந்தோம். ஒழுங்கான சாப்பாடு இல்ல, தண்ணியில்ல, இடமில்ல. இதனால தங்கச்சிக்குச் சரியான காய்ச்சல் வந்திட்டுது. அவள கவனிக்க யாருமில்ல. கொஞ்ச நாளா உயிரை கையில பிடிச்சிட்டு கஸ்டப்பட்டுட்டிருந்திட்டு பின்னால செத்துப் போயிட்டாள். என் உயிரின் அரைவாசியை அன்றைக்கே புதைச்சிட்டாங்க.

எனக்கென்றிருந்த அந்த ஒரு சொந்தமும் என்னவிட்டு போயிட்டுது. என்னை பாக்குறதுக்கு யாருமில்லாம போனதால முகாமில உள்ளவங்களுக்கு நான் வேலைக்காரனா போயிட்டன். காலையில இருந்து மாலை வரைக்கும் ஒரு பிடி சோற்றுக்காக முகாமில உள்ள அத்தனை பேரினதும் வேலைகளைச் செய்ய ஆரம்பிச்சன். காலப்போக்கில என்னை ஒரு அடிமையா நினைச்சிட்டாங்க. அடிக்கிறதும், உதைக்கிறதுமா இருந்தாங்க, சிறுவனா இருந்தாலும் யாருமே என்னை மனிதாபிமானத்தோட நடத்தல்ல.

ஒருநாள் முகாமில எல்லாரும் தூங்கிட்டாங்க நான் மட்டும் விழிச்சிட்டிருந்தன். அன்றைக்கு நல்லா நிலவு விழுந்திச்சி. பேசாமல் முகாமை விட்டு வெளியேறி காட்டுப்பக்கமா நடந்தன். நடந்துட்டேயிருந்தன். வழியில தண்ணி கிடைச்சா குடிச்சிட்டு, உணவு கிடைச்சா உண்டு, மீண்டும் நடந்தன். கால் வலியோ உடம்பு வலியோ தெரியல்ல. ஏன்னா இந்த வலியையெல்லாம் விட என் மனசு வலி பெரிதாயிருந்திச்சி. நாலு இரவும், மூனு பகலும் இப்படியே நடந்து நான் இப்போ இருக்கிற இடத்தை அடைஞ்சன். இங்க குடிக்க தண்ணியிருக்கு, உண்ண பழங்கள் இருக்கு பழக மிருகங்கள் இருக்கு, தாலாட்ட மரங்கள் இருக்கு.

அம்மா, அப்பா, தங்கச்சி இவங்களெல்லாரினதும் சாவுக்கு யார் காரணமென்று எனக்கு தெரியாது. என் அப்பா எதையுமே கேட்கலேயே, யாருக்கெதிராகவும் எந்த வார்த்தையும் பேசலையே. எங்க அப்பா எதைக் கேட்டாரு? அவரு என்ன பாவம் பண்ணினாரு? எதற்காக அவரை கொன்டாங்க?

என் அம்மா ஒரு அப்பாவி. அவங்களுக்கு நானும் தங்கச்சியும் அப்பாவுந்தான் உலகம். அந்த தெய்வம் செத்ததற்கு யார் காரணம்?

என் தங்கச்சி என்ன பாவம் பண்ணிச்சி? அது மலர்றதுக்கு முன்னாடியே மொட்டிலேயே கருகிட்டதே. யாரு காரணம்?

இந்தக் கேள்விகள் என்னை குடைஞ்சிட்டு இருக்குது. பதில் கிடைக்குறவரைக்கும் என்டுதான் இந்தக் காட்டுல நான் தனிமையில் வாழ்ந்திட்டிருக்கன்.

விடை கிடைக்குமா? ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### சமாதானம்

பூவோடு இதழாக
கிளையோடு இலையாக
காற்றோடு கானமாக
வானோடு நீலமாக
கடலோடு அலையாக
பகலோடு ஒளியாக
மனிதனோடு மனிதமாக
மலர்ந்திடு சமாதனமே

மானிடா மானிடா
மடமையை ஒழித்திடு
புதுமையில் தெளிந்திடு
புதுயுகம் படைத்திடு
இனமெது மதமெது
என்பதை மறந்துடு
வந்திடும் சமாதானம்
தந்திடும் சந்தோஷம்
அதை வரவேற்றிடு
திறந்த மனத்தோடு.

- மேகலா
கொழும்பு - 13.

### கவிதை எனும் கைத்தடியுடன்

அமாவாசை இரவினிலே தோன்றிய
அற்புத ஒளி நிலவாய் நீயும்
அமைந்திருந்த அந்தப் பொழுதுகளை
சொற்களில் வடித்து
கவிதைகளாக்கிவிடுவது
என்னால் முடியாத காரியமே!
ஆனாலும்
உன் உன்னத உணர்வுகள்
என் உள்மனதில் உறுதியாக
வரைந்து விட்டிருக்கும்
உனது உருவமதைப்
படாதிருப்பது எப்படி முடியும்
என் கவிதைக் குழந்தையை
கைபிடித்து நடக்க வைத்தவள்
நீயல்லவா?
அதனால்த்தான்
என் கற்பனை வளையல்களை
உன் கரங்களின் மீது
வளையல்களாகப் பூட்டிவிடுகின்றேன்
நரம்புகள் ஒவ்வொன்றையும்
நனைத்து அதில்
புதிய நாதமிசைக்கும் வலிமை
உன் உறவினால்தானே முடிந்தது
உன் நட்சத்திர நினைவுகள்
என் அம்மாவாசை வாழ்க்கை வெளியில்
கண்சிமிட்டிக் கொண்டிருப்பதால்தான்
நான் இன்னும்
கவிதை எனும் கைத்தடியுடன்
காண்பவற்றிலெல்லாம் உன்னை
இரசித்துக் கொண்டிருக்கிறேன்!

- சூரியநிலா
யாழ்ப்பாணம்

### என் சலனம்...!

கண்கள் இல்லை என்றால்
அவளைக் கண்டிருக்கமாட்டேன்
கண்ணைத் தந்தவனுக்கு நன்றி
தூக்கம் ஒன்று இல்லையென்றால்
ஏக்கத்தால் இருட்டைக் கழித்திருப்பேன்
கனவென்று ஒன்றைப் படைத்திருக்கக்கூடாது
அடிக்கடி தூக்கத்தையும் - என்
ஏக்கத்தோடு சேர்த்து எழுப்பிவிடுகிறது
என் எண்ணங்களைச் சொல்ல
எனக்குள் ஏக்கங்கள் எத்தனை
அவளுக்கு முன் நான்
ஓர் கோழை - எதற்கு இவையெல்லாம்
என்று எடுத்தெறிந்துவிட்டு எம்ப - நினைத்தால்
சறுக்கிவிழுமோ வார்த்தைகள் என்ற சலனம்.

- ஏ. எம். நபீர்
கந்தளாய் - 01

### சம்மதம் தா சகியே!

சுவாசத்தின் வழியாக
உன் ஞாபகங்களைத்தான்
என் உயிர்ப் பரப்புக்கு
எடுத்துச் செல்ல முடிகிறது!
மௌனத்தின் இறகுகள்
தீப்பிடித்துக்கொள்ளும் போது
மரணத்திற்கு வெளியே
ஒரு மகிழ்ச்சிப் பிரவாகம் எனை
மணந்து கொள்ளும்!

உன்னை எனக்கு
முழுமையாய் தந்த பின்பும்
இதழோர அத்தியாயத்தில் ஏனடி
வார்த்தைகளைச் சிறையிடுகிறாய்?

உன் அன்பை நினைக்கும் பொழுது
மகரந்த இதழ்களில்
உனை மழலையாய்ச் செதுக்கிக்
கொள்ள நினைக்கிறது மனம்
பிரிவை நினைக்கும் போது
விரக்திக்குள் விறகெடுத்து
நெஞ்சில் தீ மூட்டப் பழகுகிறது ரணம்!

நீ அனுமதி தந்தால் போதும்
பூக்களின் புன்னகைக்குள்
ஒரு விழாக் கோலம் திருடிவருவேன்
மணவறையை அலங்கரிக்க!
புளூற்றோ கிரக குளிர்ச்சியையும்
நயகரா நீர் வீழ்ச்சியையும்
களவாடித் தருவேன்
ஊர்கின்ற பொழுதுகளில்
உனைக் குளிரூட்டிக்கொள்ள!
சம்மதம் தா சகியே
சுவாசிக்கத் தொடங்குகிறேன்!

- நியாஸ் முஸாதிக்
கிண்ணியா - 05.

### புரிந்துகொள்

நீ இன்றி
தடுமாறுது தென்றல்
நம்புவாயா!

யோசனை இன்றி
இளைப்பாறிய என் மனம்
உன் பயணம் நடந்ததால்
உறங்க முடியாததை
நீ அறிவாயா!

கலங்காத என் மனம்
உன் கனவுகளின்
காதல் வெள்ளத்தில்
மூழ்குவதை உணர்வாயா!

போற்றிப் புகழ்ந்த
என் குணங்களை
மாற்றிவைக்கவும்
யாருமில்லை அறிவாயா!

- என். சுதாகர்
பொத்துவில் - 10.

### கண்ணீர் சுவடுகள் காத்திருக்கட்டும்!

உன் கண்களின் வழியே
வழிந்தோடிய கண்ணீர்ச்சுவடுகளில் நான்
என் காதலைத் தேடினேன்!

என்னையே உச்சரிக்கும் உன்னிதயத்தின்
உடைந்துபோன உதடுகளையும்
காற்றின் நிர்ப்பந்தத்தால்
கட்டாய சுவாசம் நடத்தும்
சோகப்பிசின் இறுக்கிய உன்
சுவாசப் பையையும் நான் நன்கறிவேன்

சூரியன் கண்விழிக்கும் ஒவ்வொரு பொழுதிலும்
கூரிய முட்களை நீ நடந்து செல்லும்
பாதைகளில் தூவுவதையும் நானறிவேன்
எவ்வுயிர்க்கும் நன்மைதரும் தண்நிலவுகூட
உன்மீது எரிதணல்களை வாரி வீசுவதை
நானறிவேன்

இழப்புக்களில்லாத வெற்றியில் பலனேதுமில்லை
உழைப்புக்களில்லாத செல்வத்தால்
பயனேதுமில்லை
இழக்கட்டும் இழக்கட்டும் - உன்கண்கள்
உப்புக்கண்ணீரையெல்லாம் இழக்கட்டும்
கண்ணீர்ச் சுவடுகள் காத்திருக்கட்டும்
நாளை ஆனந்தக் கண்ணீரை வடிப்பதற்கு!

- அகியோபி, வதிரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேடிப்பார்...!

மனிதா...!
கட்டிய உன் வாழ்வு - நித்தம்
மீட்டிய வீணைபோல்
கதறுகின்றது.
ஒட்டிய உன் உறவு
வீதியில் இன்று
ஊளையிடுகின்றது.
மண்டியிட்டு வாழும்
மண்புழுவான நீ
மலர்வான உன் நினைவை
மழுங்கடிக்க முயல்வதேன்...?
குழந்தையென அழுவதை
குவலயமும் பொறுக்காது
வீரம் கொண்ட உன் நெஞ்சம்
உரமாகப் போவதேன்...?
கசிகின்ற உன் உதிரம்
களையாக மாறினாலும்
மிளிர்கின்ற புத்துணர்வு
புயலாக மாறாததேன்...?
கரங்களால் பிடிக்கும்
விளக்கை மட்டும்
விடியும் வரை தேடுகிறாய்...!
உன் மன இருளின்
விளக்கை தேடிப்பார்...!
யாவற்றிற்கும்
விடைதெரியும்.

**- வ. சசிகுமார்,**
**சுன்னாகம்.**

## ஒரு காட்டு நிலாவின் தவிப்பில்...!

கோரமுகங் காட்டும்
இருளை...
விடிவிளக்கின்
சன்னமான ஒளி
மூடியிருக்கும்!
என்னுள் வியாபித்த
சில ஞாபகங்கள்
அழுதபடியே... பிரசவிக்கும்!
சீரான மின்விசிறிக்காற்று
மிதமாக தழுவும்!
சிதைந்த நினைவுகளை,
மீட்டதில்
நிம்மதி நழுவும்!
முடக்கப்பட்ட உணர்வுகளில்
புதைந்துபோன
அந்த நேசத்தினை,
மனம் தூசுதட்டும்!
இணைந்து பிரிந்த
இதழணைப்புக்காக
இதயம் இரக்கப்படும்!
சாளரம் வழியே...
தூரத்து விண்மீன்கள்
கண்சிமிட்டி ரகசியம் பேசும்!
இரவுராணியின்,
மென்முறுவல்
நாசியில் வீசும்!
கரங்களில் பிசுபிசுத்த ஈரம்!
ஓ!
கண்களின் வீரம்...!
ஊமைக்காயங்களோடு,
சயனித்த என்னுயிரின்
சல்லிவேர்களை,
மெல்ல தொட்டு... நீ
வளைத்துப் போடுவாய்!
உன்னை வேகமாக
வழிமறிப்புச் செய்த
என் ஜீவநாடிகளின்
நேசவேட்கையை கூட...
உருவி, நான்...
கலைத்துப் போடுவேன்!
நெஞ்சோடு போராடிய
சிலிர்ப்புகள்
சலித்துப் போய்
கடைசி சாமத்தில்
தளர்ந்து அயரும்போது...
உறக்க ஜென்மத்திலும்
வந்து உலைவைப்பாய்!
பதைபதைக்கும்போதே
பாவமாய் பக்கம்
வருவாய்!
இமைக்காமல் மேய்ந்து
இழுத்தணைப்பாய்!
செல்லெல்லாம் சிவக்கவே...
ஆத்மாவை ஆக்கிரமிப்பாய்!
அன்றாடம் என்னுள்
சொட்டு சொட்டாய்...
காயப்பட்ட
கன்னிச் செதில்கள்
கதகதப்பாகும் போது...
காத்திருந்த வெளிச்சம்
கரடியாய்...
எட்டிப்பார்க்கும்...!
அதுவரை
துரத்திய ஞாபகமும்...
விரட்டிய சொப்பனமும்...
செத்துப் போகும்...!
செயலற்ற தவிப்போடு...
நானிருப்பேன்...!!

**நாவலப்பிட்டி,**
**செல்வி. மாஷா யூசு(f)ப்.**



## இதயம்

பல நாடிகள் சில நாளங்கள்
நான்கு அறைகள் பல வாசல்கள்
இரத்தக்கறைகள் இடறும் தன்மை
இவைகொண்ட ஒரு சதைக்கட்டி
இதைப்போய் ஏன் காதலின்
உறைவிடம் என்கின்றார்கள்
உயிரும் இங்கே உறங்குவதாலோ!

**- ம. அமலராஜ்**
**அளவெட்டி.**

## இறப்பு

மண் பட்டு
புண்பட்டுப்போன
பாதங்களுக்குப் பதவியுயர்வு
காசு கொடுத்து
மாற்ற முடியாத
காலக்கேடு
ஏழையும் செல்வந்தனும்
சந்திக்கும்
சர்வதேச விழா
ஏளனம் செய்ய முடியாத
எரி நெருப்பு
பாகுபாடின்றி
தொட்டுச் செல்லும்
தென்றல்
நாளைய விடியலை
நாம் எதிர்நோக்கும் - முன்
யாரோவைக்கும் முற்றுப்
புள்ளி.

**- ஹிதாயா நபீர்**
**கந்தளாய்.**

## உந்தன் ஞாபகங்களை...

என் இதயத்தின்
ஓசையிலே
உன் நாமத்தை
பொறித்து வைத்தேன்!
அது துடிக்கும்
பொழுது ஒவ்வொன்றிலும்
உன் பூ முகம்
நினைத்து வந்தேன்!

உன் நடத்தைகள்
ஒவ்வொன்றையும்
இயற்கைக்கு ஒப்புவித்தேன்!
இயற்கையின் ஸ்பரிசத்திலே
உன் ஞாபகம் கொண்டுவந்தேன்!

எழுத்துக்கள் வடிவினிலே
உன் வார்த்தைகளைச்
சேமித்தேன்!
ஏடுகள் புரட்டுகையில்
கொஞ்சும் மொழி
கேட்டு வந்தேன்!

உன் உருவத்தை
பிரதி செய்து
இதயத்தில் வைத்திருந்தேன்!
கண்ணாடி முன் நிற்கையிலே
உன்னையே
கண்டு வந்தேன்!

**- ருஷ்னா ஹம்ஸடீன்**
**கொட்டுவ.**

## நீயும் நானும்

நீ வானமாக மாறினால்
கட்டியணைக்கவியலாத
காற்றாய் இருந்திருக்கலாம்...

நீ நிலமாக மாறினால்
பாய்ந்துவரும் பெருமழையாய்
கரங்களுள் சிக்கியிருக்கலாம்...

நீ தாமரையாக மாறினால்
சுந்தரக் குளமாய்
கிட்டேயே கிடந்திருக்கலாம்...

நீ மதியாயின்
மின்மினியின் துளியொளியாய்
சுடர்விட்டு இருந்திடுவேன்.

**- மதுராப்புர பைரூஸ்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதுவன்கந்த சரதியல்

## வரலாறு செய்த குற்றம் 7

எம்.எச்.பதி-யுஸ்-ஸமான்

சரதியல் மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டான் - அதுவும் மிகவும் பாதுகாப்பு கூடிய புதுக்கடை சிறையில்.

தன் வழக்கு இன்றோ நாளையோ விசாரித்து தீர்ப்பு வழங்கப்படப் போவதில்லை என்பதைத் தெரிந்து கொண்டான்.

இவனிடமிருந்து அடியை வாங்கிக் கட்டிக்கொண்ட பெஸ்குவல் சிகிச்சை பெற்று வருவதாலும் அவனே முக்கிய சாட்சி என்பதால் அவன் குணமாகி எழுந்து வந்து சாட்சி சொல்லும் நாள் வரை தமக்கு அவகாசம் உண்டு என்றும் தெரிந்து கொண்டான்.

சிறைக்கு வந்த நேரம் தொட்டு அவனது கவனமெல்லாம் ஏதாவது ஒரு வழி கிடைக்காதா தப்பியோடுவதற்கு என்பதிலேயே லயித்திருந்தது. கண்கள் சிறையின் சுவர்கள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு அங்குலமாக சல்லடை போட்டன.

திடீரென அவன் வயிற்று வலியால் துடிதுடித்தான். சிறையதிகாரிகளே பயந்துவிடுமளவுக்கு கரையில் ஒதுங்கிய மீனைப்போல துடித்தான்.

உடனே அவனை அரசாங்க ஆஸ்பத்திரியில் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளோடு அனுமதித்தனர்.

அவனைப் புரட்டிப்புரட்டி பரிசோதித்த அரசாங்க சட்டவைத்திய அதிகாரி சரதியலுக்கு எந்த வருத்தமுமே இல்லை என்று கையை விரித்துவிட்டார்.

சரதியலின் முதல் முயற்சி தோல்வியில் முடிந்தது. தலையை தொங்கப் போட்டவனாக மீண்டும் சிறையில் தள்ளப்பட்டான்.

1862 நவம்பர் 29ம் திகதி.

கொழும்பு புதுக்கடை சிறைச்சாலையில் வழக்கம்போல அதிகாலை 5.30 மணிக்கு மணி ஒலிக்க ஆரம்பித்தது.

அப்போது அங்கு கைதிகளாக இருந்த 185 பேரும் எழுந்து பாதுகாவலர்கள் பார்த்திருக்க முகம், கை, கால், கழுவி தமது தேநீர் கோப்பைகளையும் எடுத்துக்கொண்டு கியூ வரிசையில் நின்றனர்.

ஆனால் ஒரே கூண்டிலிருந்த சரதியலையும் வெலுன் அப்புவையும் இந்த நீண்ட கியூவரிசையில் எங்கும் காணவில்லை.

இதனை மோப்பம் பிடித்து கண்டுபிடித்த சக கைதி ஒருவன் இதனை சத்தமிட்டு எல்லோருக்கும் கேட்கும்படியாக கூறினான்.

இதைக்கேட்ட யாருக்கும் தேநீர் அருந்த நினைவில்லை. எல்லோரும் சிறையினுள்ளே ஒவ்வொரு திசையில் பதறியடித்துக் கொண்டு ஓடினார்கள். சரதியலையும் வெலுன் அப்புவையும் தேடி கண்டுபிடித்துக் கொடுத்தால் தமக்கும் கௌரவம் கிடைக்குமே என்ற நப்பாசை அவர்களுக்கு.

அவர்கள் ஓடிய ஓட்டத்தில் ஒருவரோடு ஒருவர் தலைவெடிக்க மோதிக் கொண்டார்கள்.

எல்லா இடங்களிலும் தேடி விட்டார்கள். எங்கேயும் அவர்களிருவரையும் காணவில்லை. ஏமாற்றத்தோடு எல்லோரும் திரும்பி தாம் இருந்த இடத்திற்கே வந்து கொண்டிருந்தனர்.

சரதியல் எப்படி தப்பினான்? இதுதான் சிறையிலிருந்த உயர் அதிகாரி முதல் சிறைக் கைதி வரை கேட்ட கேள்வி.

அப்போது அங்குவந்த சரதியலின் அறைக்குப் பக்கத்து அறையில் அடைக்கப்பட்டிருந்த மலபார் இன கைதி ஒருவன் இரவு முழுக்க சரதியலும் வெலுன் அப்புவும் குசுகுசு என்று பேசிக்கொள்ளும் அரவம் கேட்டதாக கூறினான்.

அங்கு கடமையிலிருந்த பியோனான மாகிரிஸ் அப்பு மீது எல்லோர் பார்வையும் மேய்ந்தன. அவன் உதுவன்கந்தையைச் சேர்ந்தவன் என்பதால்.

அவனுக்கு சரதியலின் சகோதரன் ஒருவன் மூன்று பவுண்களைக் கொடுத்ததாகவும் சரதியல் தப்ப உதவினால் பின்னர் மேலும் பணம் தருவதாகவும் கூறிய இரகசியமும் அப்போது அம்பலமானது.

ஆனாலும் அவனை விசாரித்தபோது தமக்கும் சரதியல் தப்பியோடிய சம்பவத்திற்கும் எந்த சம்பந்தமுமே இல்லை என்று அடித்துச் சொல்லி விட்டான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் சரதியல்கூட மாகிரிஸுக்கு பணம் கொடுத்தும் அவன் தனக்கு உதவி செய்ய வில்லை என்று பலரிடம் கூறியதாக செய்திகள் சிறை அதிகாரிகளுக்கு வந்து சேர்ந்தன.

சிறைச்சாலை அதிகாரிகள் அதிகாலை 5.30 க்கு அந்த மணியோசை கேட்டவுடன் முதலில் கடூழியச் சிறைத்தண்டனை பெற்றுள்ளவர்களை வெளியே எடுத்து, அவர்கள் காலைக் கடன்களை முடித்து வந்த உடன் தேநீர் அருந்தச்செய்துவிட்டு, அவர்களை அவர்களுக்கென பங்கிடப்பட்டுள்ள வேலைகளுக்கு பிரித்து அனுப்புவதாகும்.

அதன் பின்னர் ஏனைய கூண்டுகளிலுள்ள சாதாரண கைதிகளை வெளியே எடுத்து அவர்களுக்கும் கோப்பி வழங்குவதுமாகும்.

இவ்வாறு வழமையான இந்தப்பணிகளில் சிறைக் காவலர்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்த அதேநேரம், நிகோ அப்பு என்ற பியோன் மரணதண்டனை விதிக்கப்பட்ட இருவரது கூண்டை காவல்புரிந்து கொண்டு நின்றான்.

சிறைச்சாலை நிர்வாகி லெம்பர்க்கும் காவல் மேடையிலிருந்துகொண்டு வேலைகளுக்காக சென்று கொண்டிருக்கும் கைதிகளுக்குத் தேவையான மண்வெட்டி கோடரி, கடப்பாரை, கல்உளி என்பவற்றை விநியோகித்துக் கொண்டிருந்தான்.

இவ்வாறு சிறை அதிகாரிகள் அனைவருமே தமது கடமையில் கண்ணாயிருந்தனர்.

சரதியலோ சிறையின் பின்புறமாக உள்ள சுவர் ஓரமாக ஒட்டியபடி நின்று கொண்டிருந்தான்.

அவன் தீராந்தியில் பொருத்தப்பட்டிருந்த தூண்களை பார்த்துக்கொண்டு வந்தபோது அதில் ஒன்று இற்றுப்போயிருப்பதைக் கண்டு கொண்டான். அதனைக் கழற்றி எடுப்பதற்கு ஆயுதங்கள் எதுவும் தேவையில்லை என்பதை எண்ணியபோது அவனுக்கு சந்தோஷம் பிடிபடவில்லை. இரு கால்களையும் ஊன்றி பலம்கொண்ட மட்டும் இழுத்தபோது தூண் சத்தம் எதுவும் இன்றி பெயர்ந்து வந்தது.

அந்த பலகையை மதில்சுவரில் சாய்த்து வைத்தான். அதன்பின் அங்கிருந்த கயிற்றுக் கட்டிலை நீளவாக்கில் தூணுடன் வைத்து ஏணியொன்றை உருவாக்கிவிட்டான்.

அதன் மூலம் மேலே இழுபட்டுச் சென்ற 13அடி 10 அங்குலம் உயரமான அந்தச் சுவரின் மேல் பதிக்கப்பட்டிருந்த போத்தல் ஓடுகளால் எந்த கீறல்களும் ஏற்படாவண்ணம் தப்பிச் சென்றான்.

பின்னர் பார்த்தபோது வெலுன் அப்புவையும் அங்கு காணவில்லை. அந்த மலபார் கார கைதி கூறியது உண்மையாகிவிட்டது. வெலுன் அப்புவும் சரதியலுடன் சேர்ந்து தப்பியுள்ளான் என்பது ஊர்ஜிதமாகியது.

வெலுன் அப்பு ஒரு மாயமனிதன். அவன் போதையிலும் சூதாட்டத்திலும் மூழ்கி கரையேற முடியாது இருப்பவன்.

கடந்த இரு மாதங்களாக சரதியல் சிறைக் கைதிகளுடன் தமது நல்லுறவை வலியச் சென்று வளர்த்துக் கொண்டிருந்தான். எவருடனும் எந்த வாதவிவாதங்களிலும் மோதல்களிலும் ஈடுபடுவதை தவிர்த்து வந்தான்.

வெலுன் அப்பு சரதியலின் ஆத்ம நண்பனாகிவிட்டான். அவர்கள் இருவருக்குமிடையில் இறுக்கம் அதிகரித்தது.

சிறைக்குள் கஞ்சா, அபின் என்றால் தண்ணிபட்டபாடு. அன்றும் முன்கூட்டியே அபரன் சீயாவிடம் கஞ்சாவை வாங்கி எல்லோருக்கும் பாட்டி கொடுத்து விட்டான். எல்லோரும் தம்மை மறந்துவிட்டார்கள். அந்த நேரத்தைத்தான் அவன் தேடிக்கொண்டிருந்தான். பயன்படுத்திக் கொண்டான்.

முதன்முறையாக சிறையிலிருந்து தப்பியோடிய சரதியலைக் கைது செய்வதற்கு பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டது இரண்டாவது தடவையாகவும். ஆனால் அவன் இதற்காக அலட்டிக் கொண்டதாக தெரியவில்லை. அப்படி அஞ்சுபவனாக இருந்தால் அவன் நேரே உதுவன்கந்தைக்கு வந்திருப்பானா?

இந்த அச்சத்தையும் ஆபத்தையும் மீறிய தாயின் பாசமும் அரவணைப்பும் உதுவன் கந்தையில் அவனுக்காக காத்திருந்தன. அதற்கு அப்பால் அது அவனுடைய ராஜதானி. அவனுடைய பரிவாரங்கள், பாதுகாவல் படை அங்குதான் இருந்தன.


இவை எல்லாவற்றையும் விட அவனது மனதை ஆக்கிரமித்து ஆட்டிப்படைக்கும் ஒரு காரணமும் இருந்தது.

அதுதான் பரீனா!

எனவேதான் தன்னைத்தேடி பொலிசார் உதுவன்கந்தைக்கு நிச்சயமாக வருவர் என்று தெரிந்தே அவன் அங்கு வந்தான்.

ஆனாலும் அவன் முழுக்கவே அலட்சியமாக இருந்து விடவில்லை. அவதானமாகவே இருந்தான். அவன் சுதந்திரமாக அங்கும் இங்கும் அலைந்து திரிவதை கட்டுப்படுத்தியே வந்தான்.

இந்தக் கட்டுப்பாடு பரீனாவைப் பார்ப்பதற்கு மட்டும் இல்லை. பரீனாவைப் பார்க்காமல் அவனால் இருக்கவே முடியாது என்பதனால் அல்ல. சூதாடவோ, நண்பர்களின் வீடுகளுக்கோ சென்றால் பொலிஸார் முற்றுகையிட்டு வளைத்துப் பிடித்து விடலாம் என்பதனாலேயே.




சரதியலுக்கு இதில் மிகவும் சந்தோசமான விஷயம்தான் காதர் ஊரில் இல்லை என்பது. காதர் சில தினங்களுக்கு முன்னர்தான் தனது வியாபாரத்திற்காக வெளிக்கிட்டுச் சென்றிருந்தான்.

சரதியல் காலை மாலை பரீனாவைப் பார்க்க மாவனல்லைக்குச் சென்று விடுவான்.

சரதியல் இவ்வாறு காதர் இல்லாத நேரம் பார்த்து பரீனாவை சந்தித்து வரும் விஷயம் சந்திக்கே வந்துவிட்டது. வெறும் வாயை மெல்பவர்களுக்கு அவல் கிடைத்தது போல் ஆகிவிட்டது. சரதியல் பரீனா சந்திப்பு கையும் காலும் முளைத்து வேகமாக பரவ ஆரம்பித்தது.

இந்த கிசு கிசு கசிந்து கசிந்து காதரின் காதுகளுக்கும் எட்டி விட்டது. காதர் கலங்கித்தான் போனான். பரீனாவின் மீது அவன் உயிரையே வைத்திருந்தான். அவன் பரீனாவை இழக்கத் தயாராக இல்லை.

அதேநேரம் சரதியலுடன் மோதும் துணிவும் அவனுக்கு இல்லை. வம்பு தும்புகளுக்குப் போய் பழக்கம் இல்லாதவன். தானுண்டு தன் பாடுண்டு என்றிருப்பவன். அவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

ஒருநாள் இந்தக் கொடுமையை அவன் தன் கண்களாலேயே கண்டுவிட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாபாரத்திற்காக போவதாக கூறிவிட்டுச் சென்று பதுங்கிப் பார்த்துக் கொண்டிருந்தபோது சரதியல் வந்து பலமணிநேரம் தங்கி பேசிவிட்டு சென்றான். அவர்கள் இருவரும் கொஞ்சிக் கொஞ்சி பேசுவது, கும்மாளமிட்டு சிரிப்பது எல்லாமே காதருக்கு தெளிவாக கேட்டது. காணத்தான் முடியவில்லை. கண்டிருந்தால் அவன் தற்கொலை செய்யும் முடிவுக்கே வந்திருப்பானோ என்னவோ?

சரதியலை எப்படி மடக்கலாம் என்று திட்டமிட்டான். அவனைக் காட்டிக் கொடுப்பதைத்தவிர அவனுக்கு வேறு வழியே தென்படவில்லை.

தனது மச்சான் முறையான பபாசாரா என்ற பொலிஸ் சார்ஜண்டிடம் நடந்ததைக் கூறி உதவி கோரினான். அவரது ஆலோசனையின் பேரில் பொலிஸிலும் இது தொடர்பாக முறைப்பாடு செய்தான் காதர்.

வீட்டின் பரணில் பச்சை கொப்பு ஒன்றை தொங்கவிட்டால் சரதியல் வீட்டினுள்ளே இருக்கின்றான் என்று அர்த்தம் என்று சமிக்ஞை வழங்கவும் ஏற்பாடு செய்து கொண்டார்கள்.

ஒருநாள் இரவு பச்சிலை கொப்பு கூரையின்கீழ் தொங்கிக் கொண்டிருந்தது. பபாசாராவும் கோஷ்டியினரும் காதரின் வீட்டைச் சுற்றி வளைத்து விட்டனர்.

மாஜிஸ்திரேட்டும் அவனை கொழும்பு உயர்நீதிமன்றத்திலேயே ஒப்படைக்க தீர்மானித்தார்.

131 இலக்கம் கான்ஸ்டபிள் நல்லதம்பி, புஞ்சப்பு என்ற பியோன், மேலதிகமாக ஒரு பியோனும் காவல்புரிய மாட்டு வண்டியில் கொழும்பு உயர்நீதிமன்றத்திற்கு கொண்டு சென்று கையளிக்கத் தேவையான முன்னேற்பாடுகள் அனைத்தும் மாஜிஸ்திரேட்டின் மேற்பார்வையிலேயே நடைபெற்றன.

இரு கைகளிலும் விலங்கு மாட்டப்பட்டு வண்டியினுள்ளே உட்கார வைக்கப்பட்டான் சரதியல். இருபுறத்திலும் பியோன்கள் காவல்புரிய சரதியல் கொண்டு செல்லப்பட வேண்டும் என்றும் கான்ஸ்டபிளிடம் தெரிவிக்கப்பட்டது.

இடையில் எதிர்ப்படும் பொலிஸ் நிலையங்கள் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் வண்டியை நிறுத்தவே கூடாது என்ற கடுமையான உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது.

கைதி மற்றும் காவலர்களை சுமந்து கொண்ட வண்டி 1862 டிசம்பர் 12ம் திகதி அதிகாலை வேளையில் பயணத்தை ஆரம்பித்தது.

வழியில் பகல் உணவை சாப்பிட்ட அவர்கள் மாலையாகும்போது அம்பேபுஸ்ஸ பொலிஸ் நிலையத்தை நெருங்கிவிட்டனர்.

அங்கேயே அன்றைய இரவைக்கழித்த அவர்கள் மறுநாள் 13ம் திகதி அதிகாலையிலேயே பயணத்தைத் தொடர்ந்தனர்.

பகலாகும்போது பஸ்யாலை வரைக்கும் வந்துவிட்டனர். பகலுணவை அங்கேயே முடித்துக்கொண்ட அவர்கள் இரவு ஏதாவது ஒரு பொலிஸ் நிலையத்தில் தங்கிக் கொள்ளலாம் என்று எதிர்பார்த்தனர்.

திடீர் என பெருமழை சோவென கொட்ட ஆரம்பித்தது. இடியும் மின்னலும் மிகப்பலமாக அடித்தன. அப்போது இரவு ஏழு மணியிருக்கும். 22வது மைல்கல்லைத் தாண்டிவிட்டார்கள்.

பாதைகள் சேறும் சகதியுமாக மாறிவிட்டது. மாட்டு வண்டியை ஓட்டுவதற்கு வண்டிக்காரன் மிகவும் சிரமப்பட்டான். வண்டியின் சில்லுகள் சேற்றில் புதையுண்டு ஒரு அடியும் நகர மறுத்து விட்டது.

கைதியைத் தவிர வண்டியிலிருந்த எல்லோரும் அந்த கொட்டும்மழையிலும் கீழே இறங்கி வந்து வண்டியை தள்ள ஆரம்பித்தனர். சேற்றில் புதையுண்டிருந்த வண்டிச் சில்லை மூவருமாகச் சேர்ந்து தூக்கி வைக்க பெரும்பாடுபட்டனர்.

வண்டி அங்குலம் அங்குலமாகவே நகர்ந்து சென்றது.

வெளியிலிருந்து கொண்டு பபாசாரா பலமாக குரல் கொடுத்தான். கலவரம் செய்யாமல் வந்து சரணடைந்து விடுமாறு கூறினான்.

சரதியலை கைது செய்யும் இந்த போராட்டத்தில் எந்நேரமும் எதுவும் நடக்கலாம் என்று முன்னரே ஊகித்து அதற்குத் தயாராகவே வந்திருந்தனர் பாபசாரா கோஷ்டியினர்.


ஆனால் எவருமே எதிர்பாராத வகையில் ஆச்சரியப்படும் படியாக சரதியல் எந்தவித எதிர்ப்பும் இன்றி ஆரவாரமும் இன்றி தன் இருக்கைகளையும் நேரே நீட்டிக்கொண்டே முன்னோக்கி வந்து சரணடைந்து விட்டான்.

பபாசாராவால் நம்பவே முடியவில்லை. இதற்காகவா சிறையிலிருந்து தப்பி வந்தான்? என்ற கேள்வி அவனை துளைத்தது.

சிறையிலிருந்து தப்பியோடிய சரதியல் இரு வாரங்களுக்குள் கைது செய்யப்பட்டு கேகாலை பொலிஸ் மாஜிஸ்திரேட் கே.டி.பி ஏயூ. ஷாப் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டது ஒரு ஆச்சரியமான நிகழ்ச்சிதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எப்படியும் மிரிஸ்வத்தையை அடைந்து விட வேண்டும் என்று புஞ்சப்பு உற்சாகப்படுத்திக் கொண்டே வந்தான்.

என்ன செய்ய? மீண்டும் மீண்டும் வண்டிச் சில்லுகள் சேற்றுக்குள் புதைந்துகொள்வதும் எடுத்து விடுவதுமாகவே இருந்தன.

அவர்கள் மிகவும் களைத்துப்போய் விட்டார்கள். மாடுகளும் களைத்து அப்படியே படுத்துக்கொண்டு எழும்பமாட்டேன் என்று அடம்பிடித்தன.

இன்னும் அரைமைல் துரமே இருந்தது மிரிஸ்வத்தை பொலிஸ் நிலையத்திற்கு. என்ன செய்ய மாடு படுத்துவிட்டதே. பக்கத்திலுள்ள மாட்டுத் தொழுவம் ஒன்றில் தங்கினர். அடித்துப்போட்டது போல அனைவரும் தன்னை மறந்து தூங்கினர்.

அப்போது சரதியலும் அமைதியாக அவர்களோடு உறங்கிக் கொண்டிருந்தான். 14ம் திகதி அவர்கள் சூரியன் உதிப்பதற்கு முன்னரே பயணத்தை தொடங்கினர். நேற்றைய தாமதத்தை ஈடுகட்டவும் வேண்டுமல்லவா? மழையும் பெய்து ஓய்ந்திருந்ததால் வேகமாக சென்று விடலாம் என்று எண்ணிக் கொண்டனர் அவர்கள்.

மிரிஸ்வத்தையைத் தாண்டி சில மைல் தூரம் சென்று கொசுபேயில் சாப்பாட்டிற்காக வண்டியை நிறுத்தினர். வண்டிக்காரன் எல்லோருக்கும் சேர்த்து சமைப்பதில் ஈடுபட்டிருந்தபோது திடீர் என்று அங்குவந்து சேர்ந்தான் காதர். அவன் சரதியலுக்கு சாப்பாட்டுப் பார்சல் ஒன்றையும் எடுத்து வந்திருந்தான்.

காதர்தான் தன்னைக் காட்டிக்கொடுத்தவன் என்று தெரியாத சரதியலும் காதரைக் கண்டு மிகவும் மகிழ்ந்து போனான். தன்னைத் தேடி வந்திருப்பான் என்று எண்ணி மகிழ்ந்தான்.

அவன் தந்த சாப்பாட்டுப் பார்சலை வாங்கி அவனது முன்னிலையிலேயே பிரித்து ஆவலோடு சாப்பிட்டான். அது பரீனா சமைத்ததாக இருக்கலாம் என்று மனதுக்குள் எண்ணிக்கொண்டாலும் நல்ல ருசி என்று பொதுவாக கூறி வைத்தான்.

இத்தனைக்கும் அங்கு புஞ்சப்புவைக் காணவில்லை. சாராயப் போத்தல்களுடன் புஞ்சப்பு வந்து நின்றபோது தான் அவன் இவ்வளவு நேரமும் அங்கு காணாமல் போயிருந்தான் என்ற விவரமே விளங்க ஆரம்பித்தது. அவன்தான் வந்துவிட்டானே?

சிறிது நேரத்தில் சாராயப் போத்தல்கள் எல்லாம் காலி. சரதியலும் சேர்ந்து மூக்குமுட்டக் குடித்திருந்தனர்.

அடி போதாது என்று கருதிய கான்ஸ்டபிள் நல்லதம்பியும் இன்னும் சில சாராய போத்தல்களை வாங்கி வந்திருந்தான். அதுவும் கொஞ்ச நேரத்தில் காலி. புஞ்சப்பு தொண்டைவரை குடித்து வெறி தலைக்கேறி அப்படியே ஒரு மூலையில் சாய்ந்து விட்டான்.

அவர்கள் போதை தெளிந்து தூக்கம் கலைந்து எழுந்து பார்த்த போது மாலை 3 மணி ஆகியிருந்தது. அவசர அவசரமாக பயணத்தைத் தொடங்கினர்.

இரவாகிக் கொண்டிருந்தது. அப்போது தான் சுய உணர்வு திரும்பிய கான்ஸ்டபிள் நல்லதம்பி முன்னால் வரும் பொலிஸ் நிலையத்தில் வண்டியை நிறுத்தும்படி கூறினான். ஆனால் வண்டிக்காரனும் புஞ்சப்புவும் சேர்ந்து மறுப்பு தெரிவித்தனர். மூவருக்குமிடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

குடித்தால் சண்டைக்குக் கேட்கவும் வேண்டுமா?

ஆனாலும் பயணம் நிற்கவில்லை. தொடர்ந்தது. ஏழாவது மைல்கல்லை வண்டி நெருங்கும்போது இரவின் பெரும்பகுதி கழிந்திருந்தது.

முன்னால் வரப்போகும் மஹர பொலிஸ் நிலையத்தில் தங்குவோம் என்று நல்லதம்பி ஆலோசனை கூறியபோது அதனையும் புஞ்சப்பு மடக்கினான். அதே இடத்திலிருந்த ஒரு பாழடைந்த வீட்டைக்காட்டி இங்கே தங்குவோம் என்றான் புஞ்சப்பு.

வண்டிக்காரனும் புஞ்சப்புவின் பக்கமே இருந்ததால் நல்லதம்பியும் அந்த முடிவுக்கு இணங்கிப்போனான்.

அந்த வீட்டின் முன் விறாந்தையில் எல்லோரும் தங்குவதாக தீர்மானித்தனர். இந்த வண்டியை பின்தொடர்ந்து வந்த காதரின் வண்டியும் அங்கு வந்து சேர்ந்தது. காதருடன் கூடவே சரதியலின் சித்தப்பா வான ஹரமானிசும் வந்திருந்தார்.

சகலருக்கும் சேர்த்து இரவுச் சாப்பாட்டைத் தயாரிப்பதற்காக சமையலறைப் பக்கமாகச் சென்ற வண்டிக்காரனும் மேலதிக பியோனும் மும்முரமாக வேலையில் ஈடுபட்டிருந்தனர். காதரும் புஞ்சப்புவும் சமையலுக்குத் தேவையான பொருட்கள் வாங்கிவர கடைத்தெருவுக்குச் சென்றிருந்தனர்.

சரதியல் கட்டப்பட்ட மிருகத்தைப்போல இரு கைகளிலும் விலங்கு பூட்டப்பட்டவனாக பாயின் ஒரு மூலையில் சுருண்டு படுத்துக் கொண்டிருந்தான்.

கடைக்குப் போய் வந்த காதரும் புஞ்சப்புவும் கொண்டு வந்திருந்த சாராய போத்தல்களை மீண்டும் எல்லோரும் ஒரு பிடி பிடித்துவிட்டு, சாப்பிட ஆரம்பித்தனர்.

சரதியலின் கைவிலங்குகளை அகற்றி சேர்ந்து அனைவரும் சாப்பிட்டனர். ஆனாலும் சாப்பிட்டு முடிந்தவுடன் கைவிலங்கை மீண்டும் அவன் கைளில் மாட்ட மறக்கவில்லை நல்லதம்பி.

மூக்குமுட்ட குடியும் வயிறு நிறைய சாப்பாடும் எல்லோரையும் ஆளுக்கொரு மூலையில் போட்டது போட்டபடியே கையைக் காலை நீட்டிப் படுக்க வைத்து விட்டது.

நடுநிசியில் திடீர் என்று கண்விழித்துப் பார்த்த மேலதிக பியோன் சரதியல் படுத்திருந்த பாயில் சரதியலைக் காணாது காட்டுக்கூச்சல் எழுப்பினான்.

பதறியடித்துக் கொண்டு வாரிச்சுருட்டிக் கொண்டு எழுந்த எல்லோரும் எல்லா இடங்களிலும் சல்லடை போட்டு தேடினர். எங்கும் சரதியலைக் காணவில்லை. சரதியல் மீண்டும் தப்பிவிட்டான்.

*(தொடரும்)*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு பிஞ்சு - முதல் எழுத்து தேடுகிறது

சிறுகதை

பச்சைக் கம்பளம் விரித்தாற் போன்று, பச்சைப் பசேலென்று கண்ணுக்கெட்டிய தூரம் வரை பரந்து கிடந்தது அந்தத் தேயிலைத் தோட்டம்.

மலைக்குன்றினைச் சுற்றி வளையங்களாக வளைந்து இருந்தது. சலசலத்து ஓடும் சிற்றருவியொன்று மலைக்குன்றின் உச்சியிலிருந்து ஆரம்பித்து, சிறிது தூரம் ஓடி, பிறகு ஓர் நீர்வீழ்ச்சியாக மாற்றம் கண்டு, 'சோ'வென்ற சத்தத்துடன் குன்றின் அடித்தளத்தை முத்தமிட்டுக் கொண்டிருந்தது.

கண்டியிலிருந்து பஸ் ஏறி, வளைவுகளும், ஏற்றங்களும் நிறைந்த பாதைகளினூடே இரண்டு மணித்தியால பயணத்தின் முடிவில் அந்த அழகான, பசுமையான போப்பிட்டிய தோட்டத்தைச் சென்றடைந்தேன்.

பள்ளி மாணவனாக இருந்த காலத்தில் இந்தத் தோட்டத்தில் எனது கால்கள் படாத இடங்களே இல்லை. எனது மாமா இந்தத் தோட்டத்தில்தான் கணக்கப்பிள்ளையாக கடமையாற்றினார்.

அவரது வீட்டுக்கு வந்து தங்கும் போதெல்லாம் தோட்டத்தின் மேடு, பள்ளங்களைச் சுற்றித் திரிவேன். இன்றைக்கு எட்டு வருடங்களுக்கு முன்....

எவ்வளவு சுதந்திரமான நாட்கள் அவை. இயற்கை எழிலை ரசிக்கும்போது ஏற்படுகின்ற மனநிறைவுக்கு எதுவுமே ஈடாகப் போவதில்லை.

எட்டு வருடங்களில் எத்தனை மாற்றங்கள். தேயிலைப் பெட்டிகள் வரிசையாக அடுக்கி வைத்தாற் போன்று அன்று காட்சி தந்த தோட்டத்து லயன் காம்பராக்கள் இருந்த இடத்தில் இன்று வசதியான குடியிருப்புகள் உருவாகியிருக்கின்றன. குடியிருப்புகளின் முற்றமெங்கும் பலவர்ண மலர்ச்செடிகள் பூத்துக் குலுங்கி அழகை மேலும் மெருகூட்டிக் கொண்டிருக்கின்றன.

தேயிலைத் தொழிற்சாலைக்கு கிழக்காக புதிய கட்டிடமாக நிமிர்ந்து நிற்கும் அதுதான் தோட்டப் பாடசாலையா? என்னால் நம்பவே முடியவில்லை. இன்றைக்குப் பல வருடங்களுக்கு முன்பு பலகையினால் அமைந்திருந்த பாடசாலை - எத்தனை - மாற்றங்கள்?

மலையக தோட்டப் பாடசாலைகளுக்கு கல்வி அதிகாரியாக நியமனம்பெற்ற நான், எனது முதல் கடமையாக போப்பிட்டிய தோட்டப் பாடசாலையையே தெரிவு செய்தேன்.

தேயிலைத் தொழிற்சாலையைக் கடந்து ஒற்றையடிப் பாதையினூடே தோட்டப் பாடசாலையை நோக்கி முன்னேறுகிறேன்.

தொழிற்சாலைக்கு வடக்குப் புறமாக இருக்கும் டீமேக்கரின் வீடு என் கண்களில் குத்திட்டு நிற்கிறது. இன்றைக்குப் பல வருடங்களுக்கு முன்பு நடந்து முடிந்துவிட்ட அந்தத் துயரச் சம்பவம் என் நெஞ்சத்தில் அழியாத சிற்பமாக அமைந்து விட்டது.



அன்று - அவள், பார்வதி, வயது பதின்மூன்றை அண்மித்துக் கொண்டிருந்தாள். தொழிலாளி - சுப்பையாவின் ஆறு பிள்ளைகளில் அவள்தான் மூத்தவள்.

குடும்பத்தின் பொருளாதாரச் சுமை காரணமாக பார்வதி பாடசாலையை நினைத்துக்கூட பார்க்க முடியாதவளாக இருந்தாள். டீமேக்கர் மோகனின் வீட்டில் வேலை செய்து அதன் மூலம் கிடைத்த சிறு வருமானம் அவர்களது குடும்பத்துக்கு உதவியது.

அன்றொரு நாள் -

மழை இலேசாகத் தூறிக்கொண்டிருந்தது. வேகமாக சீற்றம் கொண்டு வீசிய காற்றுக்கு ஈடுகொடுக்க முடியாது தேயிலைச் செடிகள் அசைந்து கொண்டிருந்தன. குளிர் காற்றின் தாக்கத்துக்குள்ளாகி, நடுங்கிய வாறே லயன் காம்பிராவுக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்தேன். பனிமூட்டங்கள் மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தன.

பார்வதி அழுதுகொண்டே டீமேக்கர் மோகனின் வீட்டிலிருந்து வெளியிலிறங்கி லயத்தை நோக்கி ஓடிவந்தாள். அவளது பாவாடையும், சட்டையும் பலாத்காரமாகக் கிழிக்கப்பட்டிருந்தது. கண்கள் சிவந்திருந்தன. பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட பீதியினால் அவள் குரல் அடைத்துக் கொண்டிருந்தது.

நடந்து முடிந்த பயங்கரத்தை அவள் குளமாகிய கண்களுடன் விளக்கினாள்.

குளிரில் நடுங்கிக் கொண்டிருந்த என் கரங்கள் சூடேறின. அநீதிக்கு எதிராக அவைகள் சூடு பிடித்தன. நேராக டீமேக்கரின் வீட்டை நோக்கி விரைந்தேன். என் கரங்கள் டீ மேக்கர் மோகனை வீட்டிலிருந்து வெளியே இழுத்து எடுத்து பதம் பார்த்தன. பலம் கொண்ட மட்டும் தாக்கி தண்டனை கொடுத்தேன்.

ஆனால் பாதிக்கப்பட்ட பார்வதியின் வாழ்க்கையில் ஓர் கறை படிந்துவிட்டது. குற்றமிழைத்த டீ மேக்கர் விசாரணையிலிருந்து தப்பிக் கொண்டார்.

* * *

– உடத்தலவின்ன பரீல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வெல்கம் சேர்' - 'வணக்கம்' கரங் கூப்பி தலைமையாசிரியர் என் வர வேற்கிறார். முன்னைய நினைவு கள் என்னிலிருந்து பிரிந்து மறை ந்து செல்கின்றன.

'வணக்கம்' - 'தேங்யூ' பதில் வணக் கம் கூறி பாடசாலையினுள் நுழை கிறேன்.

மகாத்மா காந்தி, பாரதி, நேரு - பெரியார்களின் படங்கள் வகுப்ப றைகளை அலங்கரித்துக் கொண் டிருக்கின்றன. பாடசாலை தலை மை ஆசிரியரைப் பின் தொடர்ந்து செல்கிறேன். பிஞ்சு மாணவ, மாண வியர் அடக்கமாக இருக்கிறார்கள். வகுப்புகளில் பாடங்கள் நடை-பெற்றுக் கொண்டிருக்கின்றன.

அது ஆண்டு இரண்டு வகுப்பறை. தலைமையாசிரியருடன், வகுப்ப றையினுள் நுழைகிறேன். 'வணக் கம் சேர்' மாணவ, மாணவிகள் அமைதியாக எழுந்து வந்தனம் தெரிவிக்கின்றனர். பதில் வணக்கம் கூறி வகுப்பறையில் அமர்கிறேன்.

வகுப்பறையில் முன் வரிசை மாண வர்களை ஒவ்வொருவராக எழுப்பி, அவர்கள் விபரங்களை அறிகிறேன்.

ஐந்தாவதாக - ஒரு அழகான மாணவன் எழுந்து நிற்கிறான்.

'பெயரென்ன?'

'சுரேஷ்'

'வயது?'

'ஏழு' அவன் கணீரென்று பதில ளிக்கிறான்.

'அப்பாவின் பெயரென்ன?'

அவன் மௌனமாகிவிட்டான். அவ னது முகம், கறுத்துவிட்டது. ஏனெ ன்று எனக்குப் புரியவில்லை.

'சுரேஷ் - அப்பாவின் பெயரெ ன்ன?'

மீண்டும் அவனை வினவுகிறேன். அவனிடமிருந்து பதில் இல்லை. கண்கள் சிவந்து விட்டன.

'அவனுக்கு அப்பா இல்லை சேர். அம்மா மட்டும்தான்!' கடைசி வரிசையிலிருந்து ஒரு மாணவனின் குரல் ஒலிக்கிறது.

'சுரேஷ் - அம்மாவின் பெயரெ ன்ன?'

'பார்வதி சேர்' அவன் அமைதி யாகப் பதிலளிக்கிறான்.

பார்வதி...

அந்தச் சிறுவன் சுரேஷ் யாரெ ன்று எனக்குப் புரிந்துவிட்டது.

அவனது சிவந்த கண்கள் எதை யோ தேடிக்கொண்டிருக்கின்றன. ஆம், அவைகள் அவனது முதலெ முத்துக்களைத்தான் தேடுகின்றன.

வகுப்பறையில் நின்றுகொண்டிரு க்கும் தலைமையாசிரியரை என்ன ருகில் அழைக்கிறேன்.

''மாஸ்டர், டிமேக்கர் மோகன் இன்னும் இங்கேதான் வேலை செய்கிறாரா?''

''இல்லை சேர் - அதை ஏன் கேட்கிறீர்கள். கார் விபத்தில் அவ ரது முழுக்குடும்பமும் அழிந்துவிட் டது.''

அவர் பதிலில் என்னிடம் கவலை பிறக்கவில்லை.

'கடவுள் தண்டனை வழங்கிவிட் டார்!' எனக்கு நானே சொல்லிக் கொள்கிறேன்.

தோட்டத்து கோயில் மணிச்சத் தம் என் காதுகளைத் தழுவிச் செல் கிறது. ●




**உனக்கென்ன -**
**ஒரு பார்வையை**
**வீசிவிட்டுப் போகிறாய்...**
**என் உள்ளமல்லவா,**
**வைக்கோலாய்ப்**
**பற்றி எரிகிறது.**
**உனக்கென்ன -**
**ஒரு புன்னகையை**
**உதிர்த்துவிட்டுப் போகிறாய்...**
**என் உயிரல்லவா,**
**மெழுகாய்**
**உருகி விழுகிறது.**
**உனக்கென்ன -**
**போகிறாய்... போகிறாய்...**
**என் ஆன்மாவல்லவா,**
**அனிச்சமாய்**
**உன் அடிகளில் மிதிபடுகிறது.**

*- மீரா*



# யூரோப்பாவுக்கு ஒரு தனி 'யூரோ'

பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி உட்பட 30 கோடி சனத் தொகையைக் கொண்ட 12 ஐரோப்பிய நாடுகளில் 2002 ஜனவரி 1ம் திகதி முதல் ஒரே நாணயமான 'யூரோ' புழக்கத்திற்கு வந்துள்ளது. கடந்த சில நாட்களாக இந் நாடுகளால் மேற்கொண்ட தயாரிப்புகளின் பின்னர் இது சாத்தியமாகியுள்ளது. இதன் மூலம் அமெரிக்க டொல ருக்கு அடுத்து பெறுமதி வாய்ந்த நாணயமாக யூரோ திகழ்வதுடன் சீனா, இந்தியாவுக்கு அடுத்த பெரும் நாணயச் சந்தையையும் அது கொண்டிருக்கும்.

புனிதரோம சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சியின் பின்னர், தனி யொரு நாணய முறைமைக்கு ஐரோப்பா மாறியிருப்பது நவீன வரலாற்றில் இரண்டாம் உலக மகாயுத்தம், ஜேர்மனி இணைப்பு என்பனவற்றுக்குப் பின்னர் ஏற்பட்ட முக்கிய நிகழ்வாகக் கருதப்படுகின்றது. இதன் மூலம் ஐரோப்பிய நாடுகள் ஒற்றுமைப்படவும் பலம் பெறவும் வழியேற்பட்டுள்ளது. இன்னொரு வகையில் சொல்வ தானால் அமெரிக்காவின் தனியொரு ஏகபோக மையக் கொள்கைக்கெதிரான ஐக்கிய ஐரோப்பிய சக்தியின் எழுச்சி இது எனலாம்.

ஆனால் ஐரோப்பாவில் செல்வாக்கு மிக்க நாடுகளான பிரித்தானியாவும், சுவிற்ஸிலாந்தும் இதில் இணையவி ல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. யூரோ நாணயத்து டன் பிரிட்டிஷ் ஸ்டேர்லிங் பவுணை இணைக்க வேண்டு மென்ற கோரிக்கை பிரிட்டனில் எழுந்துள்ள அதேவே ளையில் வருடாவருடம் ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் 4 கோடி பிரிட்டிஷ் பிரஜைகள் தவிர்க்க முடியாதபடி யூரோ நாணயத்தைப் பயன்படு த்த வேண்டிய தேவை உள்ளதையும் பொருளியல் நிபு ணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலிஸின் அற்புத உலகம் - லூயி கரோல்

**எஸ். ராமகிருஷ்ணன்**

சில குழந்தைகளுக்கான புத்தகங்கள் எங்கோ தேடி நம் கைக்கு படிக்க கிடைக்கும் நாளில் நமக்கு பிராயம் கடந்திருக்கும். இதை நமது பள்ளி நாட்களில் படித்திருந்தால் நன்றாக இருந்திருக்குமே என்ற ஆசை தீராதது. 'தி லிட்டில் பிரின்ஸ்' என்ற அந்துவாந்த்-செந்த்-எக்ஸ்பெரியின் புத்தகமும் 'கலிவர்ஸ் ட்ரவல்ஸ்' என்ற ஜொனாதன் ஸிவிப்ட் புத்தகமும் இந்த மனோநிலையை ஏற்படுத்தியிருக்கின்றன. இந்த இரண்டும் கனவுகள் நிரம்பிய பால்வயதில் படிக்க வேண்டியவை. தாமதமாக கிடைத்துப் படிக்கும்போதும் வயதை கலைத்து மாற்றிவிடக் கூடியது.

இந்த புத்தகங்கள் குழந்தைகள் படிக்கும்போது ஒரு கதைக் களத்தையும் சந்தோஷத்தையும் தருவது போன்று வேறு வேறு வயதின் மனதினர்களுக்கு ஏற்ப தனது மையத்தை மாற்றிக் கொண்டுவிடுகின்றன.

குழந்தைகள் படித்து சிறப்பாகக் கொண்டாடும் 'தி லிட்டில் பிரின்ஸ்' நாவல் ஒரு எக்ஸிஸ்டென்ஷிய நாவலாக அறியப் பட்டு, அதன் தத்துவ பொருள் பற்றி சிலாகிப்பவர்கள் இருக்கிறார்கள். இதுபோலவே 'கலிவர்ஸ் ட்ரவல்ஸ்' புத்தகம் சிறந்த பரிகாசமுடையது. இதனை பகடி வகையான இலக்கியப் புத்தகமாக சிறப்பித்து பேசுவார்கள்.




சிறுவர்களுக்கோ மாபெரும் கலிவர் உடலின் மீது லில்லிபுட்டீன்ஸ் என்ற குறு மனிதர்கள் ஏறி நடப்பதும் அவன் மூக்கை நோக்கி குதிரையில் பிரவேசிப்பதும் வெகு வேடிக்கையானவை. தானே படித்து சிரிக்கக்கூடியவை.

அப்பா தனது பணியின் காரணமாக மாற்றலாகிப் போன ராமநாதபுர மாவட்டத்தின் பல்வேறு சிறிய கிராமங்களில் படித்து வளர்ந்த எனது சூழலில் சில புத்தகங்கள் எங்கு போனாலும் என்னுடனே வந்திருக்கின்றன. நாங்கள் படிப்பதற்காக தங்கிவிட்ட சிறு நகரமொன்றில் ஒரு நூலகமிருந்தது. அந்த நூலகர் ஒரு விவசாயி. தனது விவசாய வேலைகள் இல்லாத நாட்களில் மட்டுமே நூலகத்தைத் திறந்து வைப்பார். சில நேரங்களில் நூலகத்தை திறந்து வைத்துவிட்டு எங்காவது தண்ணீர் பாய்ச்சுவதற்குப் போய்விடுவார்.

அந்த நூலகத்திற்குப் போகும் சிறுவர்கள் மிகக் குறைவாகவே இருந்தார்கள். அதிலும் அந்த நூலகம் செயல்பட்ட சிவன்கோயிலின் ஒரு பகுதிக்குள் எப்போதும் வௌவால்களின் சடசடப்பும் எண்ணெய்படிந்துபோன வாசனையும் இருந்து கொண்டேயிருக்கும்.

நூலகத்தில் படிக்கவரும் எனக்கு ஆரம்ப நாளில் இருந்தே புரியாத வாசகமாக இருந்தது, 'இங்கே யாரும் சிரிக்கவோ பேசவோ கூடாது' என்ற வாசகம்தான். உலகில் சிரிக்கக்கூடாதென ஒரு இடம் அறியப்பட்டிருப்பதாக இருக்குமானால் அது நூலகமாகத்தான் இருக்கக்கூடும்.

சிறுவர்கள் எங்கு போனாலும் சிரிக்க கூடாதென்பதில் பெரியவர்கள் மிகக் கவனமாக இருக்கிறார்கள். பஸ்ஸில், மருத்துவமனையில், கோவிலில் எங்கு சிரித்தபோதும் ஒரு விரல் 'சிரிக்காதே உஷ்' என சாடை காட்டுவதை காணமுடிந்திருக்கிறது.

உலகில் சிரிப்பதற்கான இடமென ஏதாவது இருக்கிறதா என்ன? நான் அறிந்தவரை எங்கும் சிரிக்கலாம் என அறிவிப்பை கண்டதே இல்லை. சிரிப்பைத் தூண்டக்கூடிய புத்தகங்கள் நிரம்பிய நூலகத்தில் படித்து யாரும் சிரிக்கக் கூடாதென்பதில் கண்டிப்பானவர்கள் அதிகமிருந்தார்கள்.

அதனால் அங்கே படிப்பதை விடவும் அருகில் உள்ள வேம்படியிலோ திண்ணையிலோ சௌகரியம்போல் உட்கார்ந்து படிக்க வசதியிருந்தது.

ஆர்.எல். ஸ்டிவன்சன், டிக்கன்ஸ் புத்தகங்களுக்கு தீவிர ரசிகனாகயிருந்தேன். யாருமற்ற தீவு என்பதை பற்றி நினைப்பதே மிக ரம்மியமாகயிருக்கும். தனிமையான வீட்டு மொட்டை மாடியில் பகலில் வேம்பின் நிழல் ஊர்ந்து வரும் இடத்தில் சாய்ந்து கொண்டு படிக்கும்போது வீசும் வேம்பின் இலைகள் கடல் அலைகளைப் போலவே சப்தமிடுவதாகத் தோன்றும். கடற்கொள்ளையர்கள் கனவில் புகுந்தார்கள். கபாலம் பொறித்த சிவப்புநிறக் கொடிகள் கனவில் பறந்துகொண்டேயிருந்தன.

என்றாவது கடற்கொள்ளையர்கள் எனது கிராமத்திற்கும் வரக்கூடுமென பேசிக்கொள்வோம். அப்போது எனைவிடவும் தீவிரமான நண்பன் சொல்வான். ''அவர்கள் கடலிலேதான் உறங்குவார்கள், கடலிலேதான் சாப்பிடுவார்கள், மீன்களைப் போல கடலிலே நீந்தியலைவார்கள். ஒருபோதும் கரைக்கு வரவே மாட்டார்கள்'' - கரைக்கே வந்து சேராதவர்கள் என்பதுதான் எத்தனை பெரிய அதிசயம்.

*உன் இதழ்களினமுதம்*
*என்னுள் இறங்கி*
*என்னைப்*
*புதுப்பித்திருக்கும்*
*இவ்வேளையில்*
*நான்*
*புரிந்துகொள்கிறேன்!*
*இந்த வினாடிகளின்*
*ஏக்கத்துக்காகவே*
*இத்தனை*
*வருஷங்களைத்*
*தாண்டி வந்தேன்...*

- அபி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**ஓராற்றான் என்கண் இமைபொருந்த**
**அந்நிலையே**
**கூரார்வேல் மாறன் என் கைப்பற்ற - வாரா**
**நனவென் றெழுந்திருந்தேன்**
**நல்வினை யொன்றிலேன்**
**கனவும் இழந்திருந்த வாறு!**

*முத்தொள்ளாயிரம்*

கடற் கொள்ளையர்கள் எல்லோருக்கும் பெரிய மீசையிருக்கும். எங்கள் அருகாமை கிராமங்களில் கிருதாவும் மீசையும் பெரியதாக வளர்ப்பவர்கள் நிறைய இருந்தார்கள். அவர்களில் எவரும் ஒரு நாளில் கடற் கொள்ளையராகிவிடலாம் என்பதைப் பற்றி நாங்கள் கற்பனையாகப் பேசிக்கொள்வோம். இது போலவே ஒரு தொங்கு மீசையை வைத்துக் கொள்ள வேண்டும் என்றுகூட ரகசியம் கொண்டிருந்தேன்.

ஆனால் மீசை முளைக்கத் துவங்கிய காலத்தில் மனதில் கடற்கொள்ளையர்கள் காணாமல் போய் இளம் பெண்கள் நிரம்ப துவங்கிவிட்டார்கள் என்பதுதான் முரண்.

ஆனாலும் எனது கிராம நூலகத்தில் இருந்த புத்தகங்களில் எதைப் படிப்பதெனத் தெரியாமல், இருட்டு கசிந்து கொண்டிருக்கும் நூலக அலமாரிக்குள், பாதி வெளிச்ச துணுக்கில் புத்தகத்தை பிரித்துப் புரட்டும்போது ஏற்படும் மயக்கம் விநோதமானது. எப்போதாவது நூலகர் இருந்தால் அவர் என்னைக் கண்டு புன்னகைக்கக்கூடும். அவர் எனது அப்பாவை அறிந்தவர்.

நூலகர், ஒருநாளில் படித்துக் கொண்டிருந்தவர்களான எங்கள் யாவரிடமும் ஒரு கையெழுத்தை வாங்கி, நூலக வாசக இயக்கமொன்றை தான் துவக்கியுள்ளதாகவும் இதில் யாராவது எதை யாவது பற்றி பேசலாம். எழுதியதைப் படித்துக் காட்டலாம் என அறிவித்தார்.

அது என்னைத் தவிர மற்ற எவரையும் பெரிதாகப் பாதித்ததாகத் தெரியவேயில்லை. நான் மிகக் கவனமாக அதைக் கேட்டேன். இதற்கான முதல் கூட்டம் சிவன் கோவிலில் ஒரு ஞாயிற்றுக்கிழமை நடக்கப் போவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

நான் கூட்டத்திற்காக காலை எட்டரை மணிக்கே வந்து சேர்ந்து விட்டேன். அங்கிருக்கும் சிவன் கோவிலுக்கு நித்ய பூஜைகள் கிடையாது. யாரும் வந்து போவதும் குறைவு. நான் திறந்த பிரகாரத்தில் ஒரு மனிதனாக காத்துக் கொண்டிருந்தேன்.

யாரும் வருவதற்கான தடயமேயில்லை. வெளியேயிருக்கும் ஒரு கிணற்றடியில் சிதைவுற்ற நிலையில் இருக்கும் ஒரு பெண் சிற்பம் மட்டுமே நிசப்தத்தில் காத்துக் கொண்டிருந்தது. தானே மேய்ந்து கொண்டிருக்கும் பசுவைத் தவிர அங்கு யாருமில்லை. நான் காத்துக்கொண்டேயிருந்தேன்.

வெயில் ஏறியபோது ஒரு முதியவருடன் நடந்து வந்த நூலகர், நான் மட்டுமேயிருப்பதை கண்டவராக சிரித்தார். வேறு யாரும் அன்று வரவேயில்லை. அவரது கையில் இருந்த எண்பது பக்க நோட்டில், நாங்கள் மூவருமாக இருபது கையெழுத்திட்டோம்.

அந்த நாளில் இருந்து அவர் எனை மிகவும் விரும்பும் மனிதராகிப் போனார். பின்பு நானும் அவருமாக நூலகத்தை திறப்பதும் சிலவேளைகளில் நானே நூலகத்தைப் பூட்டிக்கொண்டு போய் அவரது வீட்டில் சாவியைக் கொடுத்து வருவதும் நடந்தேறியது. வயதை மீறிய ஸ்நேகமாக நாங்கள் இருவரும் செல்வதை டீக்கடைக்காரர்கள் பரிகசிப்பார்கள்.

ஒருநாள் நூலகர் என்னிடம் தனது ரகசியமான காரியங்களை, எண்ணங்களை பகிர்ந்து கொள்வதாகச் சொல்லி தனது மஞ்சள் பையிலிருந்து ஒரு பெரிய பைலை எடுத்து - அதில் நிறைய கடிதங்கள் இருந்தன - ஒவ்வொரு கடிதமாக எடுத்து விளக்கிக் காட்டினார்.

ஒரு கடிதம் இந்தியாவிற்கு விஜயம் செய்யும் அமெரிக்க ஜனாதிபதிக்கு எங்கள் பகுதி கஷ்டங்களையும் அவர் சுற்றிப் பார்க்க வேண்டிய கோவில்களையும் பற்றி எழுதப்பட்டிருந்ததன் நகல். இதற்கு நன்றி தெரிவித்து எழுதப்பட்ட ரிப்ளை கார்டு. இன்னொன்று புதிதாக பதவி ஏற்ற பிரதமருக்கு ராமநாதபுர மாவட்டத்தினை எப்படி நவீனமயமாக்கலாம் என்ற விபரம். மற்றது எப்போதோ வந்து போன இந்தோனேஷிய தூதுக்குழுவிற்கு பாம்பன் பாலத்தின் அதிசயம் பற்றி எழுதப்பட்ட விபரம்.

இப்படி, ஜனாதிபதி, முதல்வர், தூதுக்குழு மட்டுமின்றி இந்தியாவில் நதிநீர் பிரச்சினையை தீர்ப்பதற்கான மாதிரி வரைபடம், ராணுவ வீரர்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய சில கட்டுப்பாடுகள்... என என்னால் வியப்பைக் கட்டுப்படுத்திக் கொள்ள இயலாத அளவு நிரம்பியிருந்தன. ஆனால் அத்தனை கடிதமும் தமிழில் எழுதப்பட்டு பதில் நன்றி என ஆங்கிலத்தில் வந்திருந்தன.

நான் அவரது ரகசியங்களை பகிர்ந்து கொள்ளுமளவுக்கு நெருங்கிவிட்டேன் என்பதோடு இதுபோல உலகத் தலைவர்களோடு தொடர்பு கொண்டபடி தனது விவசாய காரியங்களை செய்துவரும் எளியவனை கண்ட சந்தோஷம் நிரம்ப அவரைப் பார்த்துக் கொண்டேயிருந்தேன்.

அவர் தனது இந்த ரகசியப் பணியில் தான் போதுமான அளவு மனதிருப்தி கொண்டதாகச் சொல்லி இன்று இந்தியாவில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பல திட்டங்கள் தனது எண்ணத்தின் குழந்தைகளே என்று சொல்லி அந்தப் பாதையை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் பெரிய பொறுப்பு எனக்கிருப்பதாக ஒப்படைத்தார்.

எனக்கு சந்தோஷமாகவும் நடுக்கமாகவுமிருந்தது. அந்த ரகசியப் பணியை ஏற்றுக்கொண்டுவிட்டேன். இதன் முதல் திட்டமாக புதிதாக பதவி ஏற்கும் அமெரிக்க அதிபருக்கு வாழ்த்து கடிதம் எழுதினேன். சில நாட்களுக்குப் பிறகு அழகான ஒரு அஞ்சல் உறையில் ஒரு நன்றிக் கடிதமும் சிறிய பாக்கெட் டயரி ஒன்றும் வந்திருந்தது.

> **கடற் கொள்ளையர்கள் எல்லோருக்கும் பெரிய மீசையிருக்கும். எங்கள் அருகாமை கிராமங்களில் கிருதாவும் மீசையும் பெரிதாக வளர்ப்பவர்கள் நிறைய இருந்தார்கள். அவர்களில் எவரும் ஒரு நாளில் கடற் கொள்ளையராகி விடலாம் என்பதைப் பற்றி நாங்கள் கற்பனையாகப் பேசிக்கொள்வோம்.**

தனது வாரிசைக் கண்டு பிடித்துவிட்டவரைப் போல கொண்டாடிய நூலகர், அந்த கடிதத்தை கவனமாக பாதுகாக்க நிறைய யோசனைகள் சொன்னார்.

**என்னைப் பார்த்தது போலவே**
**எல்லா இளைஞனையும் பார்**
**எல்லோரையும்**
**காதல்வசப்படுத்து**
**கனவில் மிதக்கவிடு**
**மதிமயக்கு**
**விழிகளால் விளையாடு**
**"யான் பெற்ற துன்பம்**
**பெறுக இவ்வையகம்"**

*- குவளைக்கண்ணன்*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஏனோ அந்த விளையாட்டு சட்டென மனஈடுபாட்டைவிட்டுக் கலைய நான் அவரைப் பார்க்கக்கூடாதென முடிவு செய்து நூலகம் பக்கமே போகக்கூடாதென இருந்துவிட்டேன். அவர் என்னை ஒரு எதிரியாக பாவித்துக் கொண்டு அவரது முக்கியக் குறிப்புகளை நான் எடுத்துப் போய்விட்டதாக நினைத்து அதையே பகையாக வளர்த்துக் கொண்டுவிட்டார்.

**எப்போது இதைப் படித்தாலும் இதன் ஆழ்ந்த புன்னகை மறக்கமுடியாதது. இந்த புத்தகம் குழந்தைகளை மட்டுமல்லாது கணிதவியலாளர்கள், பௌதீக ஆய்வாளர்கள், நவீன கம்ப்யூட்டர் விஞ்ஞானிகள் வரை பலரையும் வசீகரித்து வருகின்றது.**

அப்பாவின் மாறுதல் அங்கிருந்தும் என்னை வேறு இடத்திற்கு மாற்றிவிட்டது. அந்த வீடு மாற்றலில் எங்கோ அமெரிக்க கடிதமும் தொலைந்து போனது. ஆனாலும் தனிமையான சிவன் கோவிலின் பிரகாரம் நூலகத்தை நினைவுபடுத்திக் கொண்டேயிருக்கிறது.

***பொய் சொன்னதற்காக***
***கோபித்துக் கொள்கிற***
***உன் சிணுங்கல்***
***உன்னதமானது***
***கால்களில் மட்டுமன்று***
***இதழ்களிலும்***
***பொருத்தியிருக்கிறாய்***
***கொலுசை.***

**- யுகபாரதி**

இதுபோன்ற நூலகத்திலிருந்து தான் கல்லூரி விடுமுறை நாளில் 'ஆலிஸின் அற்புத உலகம்' என்ற புத்தகத்தை எடுத்து வந்தேன். படிக்கத் துவங்கிய காலை மட்டுமே நினைவிலிருக்கிறது. எப்போது படித்து முடித்தேன் என புறசூழலின் நினைவில்லை. யாரோ என்னை கழற்றி இந்த உலகத்தில் இல்லாது வேறு ஒரு கற்பனா லோகத்தில் வாழவிட்டிருந்தது போலவும் அங்கிருந்து மீண்டு இங்கே திரும்பியிருப்பதாகவும் உணர்ந்தேன்.

தனது சகோதரியின் அருகில் படங்கள் எதுவுமில்லாத ஒரு புத்தகத்தை வேடிக்கை பார்த்து சலித்த சிறுமி ஆலிஸ், ஒரு முயல் 'நேரமாகிவிட்டதே நேரமாகிவிட்டதே' என சொல்லியபடி ஓடுவதை அதிசயமாகப் பார்த்து அதன் பின்னாலேயே ஓடுகிறாள். முயல் சிறிய வளையினுள் ஒடிப்புகுந்துவிடவே தானும் அதனுள் வீழ்கிறாள்.

முயல் தனது வீட்டிற்குப் போகிறது. அங்கே ஆலிஸ் 'என்னைக் குடி' என எழுதப்பட்ட போத்தலைக் காண்கிறாள். எடுத்துக் குடிக்கவே உடல் உருமாறிவிடுகிறது.

இப்படியாக தனது பயணத்தைத் துவக்கும் ஆலிஸ், தனது கண்ணீரிலே ஒரு பெரிய குளம் உருவாகி அதில் இருந்து மீள முடியாமல் சிக்கித் தவிக்கும் எலியையும் விசித்திரமான பள்ளிக்கூடத்திற்கு போகும் மீன்களையும் காண்கிறாள்.

ஆலிஸின் வியப்பூட்டும் தர்க்கமானது கணித அறிவிற்கு அப்பாற்பட்டதாகும். ஒரு வெட்டுக்கிளியுடன் நடத்தும் உரையாடல் கூட மிக தத்துவபூர்வமானதைப் போல வெளிப்படுகிறது.

ஒரு பைத்தியக்காரத்தனமான தேநீர் விருந்து நடக்கிறது. அதில் கலந்து கொள்கிறாள். சிரித்துக் கொண்டே கிளையில் தோன்றும் மறையும் செஷையர் பூனையை சந்திக்கிறாள்.

விந்தை பெருகிக் கொண்டேயிருக்கின்றது. இரண்டு சீட்டுக்கட்டு வீரர்கள் பூச்செடிகளுக்கு வர்ணம் தீட்டுவதற்காக வந்து வேலை செய்கிறார்கள். தவறான ஒரு பூச்செடியை தாங்கள் வைத்துவிட்டால் அது ராணிக்கு தெரியக்கூடாதென்பதற்காக வர்ணமடிக்கிறார்கள்.

தனது அதிகாரத்திற்குட்பட்டவர்களில் எவரது தலையையும் வெட்டிவிட தொடர்ந்து கட்டளை இட்டுச் செல்லும் சீட்டுக் கட்டு ராணியிடம் மாட்டிக் கொள்கிறாள். இவளது கட்டளைகள் மட்டுமே கேட்டுக்கொள்ளப்படுகின்றன. அவை ஒருபோதும் நிறைவேற்றப்படுவதில்லை என்பதைப் புரிந்து கொள்ளும் ஆலிஸ், அவள் வெறும் சீட்டுக் கட்டு ராணிதான் என்ற உண்மையை சொல்லிவிட சீட்டுக் கட்டு ராஜ்ஜியம் கலைகிறது.

இவையாவும் தனது கனவில் நடந்தேறியவை என்பதை அவளால் புரிந்து கொள்ள முடியவேயில்லை. **'நாம் யாவரும் யாருடைய கனவிலோ நடமாடிக் கொண்டிருக்கிறோம்'** எனும் ஆலிஸின் வாக்கியம் இலக்கிய உலகில் மிகப் பிரபலமானது.

***எப்படியும்***
***கண்டுபிடித்தே தீருவது என...***
***ஒவ்வொரு முல்லையாகத்***
***தொடுகிறேன்.***
***என்னே! மென்மை,***
***இம் முல்லைக்கென***
***நான் வியக்க...***
***ஆ... அதுவென் முகம்***
***என நீ சிணுங்க -***
***உன்னை நான்***
***கண்டுபிடிக்கிறேன்***

**- பொன்மலை**

லூயி கரோல் கணிதத்தில் மிக ஈடுபாடு கொண்டவர். அவர் தனது உறவுக்கார சிறுமிக்காக எழுதிய இக்கதை பல முறை திரைப்படமாகவும் கார்ட்டூன் படமாகவும் வந்திருக்கின்றன. தமிழில் நானே இதை மொழிபெயர்த்திருக்கிறேன்.

எப்போது இதைப் படித்தாலும் இதன் ஆழ்ந்த புன்னகை மறக்கமுடியாதது. இந்தப் புத்தகம் குழந்தைகளை மட்டுமல்லாது கணிதவியலாளர்கள், பௌதீக ஆய்வாளர்கள், நவீன கம்ப்யூட்டர் விஞ்ஞானிகள் வரை பலரையும் வசீகரித்து வருகின்றது. இந்தப் புத்தகத்தின் தீவிர ரசிகரான போர்ஹே தனது பிரசித்தி பெற்ற கதையான 'வட்ட சிதைவுகளை' இதன் பாதிப்பிலிருந்தே எழுதியிருந்தார்.

20க்கும் மேற்பட்ட மொழிகளில் இது மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இந்தப் புத்தகத்தின் தொடர்ச்சியாக 'ஜாபர் ஊக்கி' என்ற கதாபாத்திரத்தை முன் வைத்து இவர் எழுதிய Looking through the glass புத்தகமும் மிக சிறப்பான விளையாட்டு வடிவ கதையெழுத்தாக அமைந்திருக்கிறது. செஸ் விளையாட்டில் மிக ஆர்வம் கொண்ட லூயி கரோல் அந்த வடிவத்தை தனது புனைகதையின் வடிவமாக்கியிருக்கிறார்.

'ஆலிஸின் அற்புத உலகம்' குழந்தைகள் மட்டுமல்ல இலக்கியவாதிகளும் தேர்ந்த வாசகர்களும் படிக்க வேண்டிய முக்கிய புத்தகமாகும்.

***நன்றி: தீராநதி***





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கல்வியின் குறிக்கோள்

பேராசிரியர்
சி. தில்லைநாதன்

மனிதகுலத்தின் மூலாதார நடவடிக்கை என்ற வகையில் கற்றல் முறையின் முக்கியத்துவம் பண்டைக்காலம் முதலாக உணரப்பட்ட ஒன்றாகும். தங்கள் குடும்பங்களையும் வாழ்வையும் கொண்டுநடத்துவதற்கு ஆதாரமாக முன்னோர் தாம் அறிந்தவற்றையும் நம்பியவற்றையும் தம்முட் பகிர்ந்து கொண்டனர். தம் பிள்ளைகளுக்கும் அறிவித்தனர்.

ஒரு மனிதன் குழவிப் பருவத்திலிருந்து மெல்லமெல்ல முதிர்ச்சியடைந்து தான் வாழும் பௌதீக, சமூகச் சுற்றாடலுடன் இசைவாக்கம் பெறுவதே கற்றல் முறை என்று பொதுவாகக் கருதப்பட்டது. கைத்தொழில் மயமாக்கல், நகரமயமாக்கல், நவீனமயமாக்கல் ஆகியவற்றை தொடர்ந்து மனிதவாழ்வைப் போலவே கல்விப் போதனையும் பன்மயப்பட்டதாகவும் சிக்கல் மிகுந்ததாகவும் ஏனைய பல சமூகக் காரணிகளுடன் சம்பந்தப்பட்டதாகவும் ஆகியுள்ளது.

எழுத்துத்துறை, அச்சுயந்திரம் ஆகியவற்றின் வளர்ச்சி அறிவைத் திரட்டுவதற்கும் பேணுவதற்கும் பரிமாறுவதற்குமான வசதிகளையும் வாய்ப்புக்களையும் பெருக்கியுள்ளது.

இந்நிலையில், வசதியாலும் வலுவாலும் உளச்சார்பாலும் வேறுபட்ட ஏராளமானோருக்கு இந்த உலகினைப் பற்றிய அறிவை நல்குவதாகவும் சீவனோபாயத்துக்கு உதவும் ஏதேனும் தொழில்நுட்பத் திறமையை வழங்குவதாகவும் கல்வி அமைய வேண்டும் என்று கருதப்படுகிறது. எதிர்காலத்துக்கு வெற்றிகரமாக முகம்கொடுப்பதற்கு வேண்டிய மனப்பாங்குகளையும் ஆற்றல்களையும் வளர்ப்பதாகக் கல்வி இருக்க வேண்டும் என்று கூறப்படுகிறது. மண்ணில் நல்லவண்ணம் வாழ்வதற்கு உகந்த மனிதப் பண்புகளைக் கல்வியின்மூலம் வளர்ப்பது பற்றியும் பேசப்படுகிறது.

தங்கள் பிள்ளையைப் பாடசாலைக்கு அனுப்பிப் படிக்கவைக்கும் பெற்றோர்கள் எதிர்பார்ப்பது அந்தப்பிள்ளை தன் எதிர்கால வாழ்வைச் சிறந்த முறையில் வகுத்துக்கொள்ள வேண்டும் என்பதை மட்டுமல்ல. தங்களுக்கும் தங்கள் குடும்பத்துக்கும் அப்பிள்ளையால் மகிழ்ச்சியும் முன்னேற்றமும் வாய்க்க வேண்டும் என்றும் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

அதேபோல, ஒரு சமூகமோ நாடோ கல்விமுறையொன்றினை வகுத்து அதற்கான முதலீடுகளைச் செய்வது அதன் அங்கத்தவர்கள் நல்லவிதமாக வாழ வேண்டும் என்பதற்காக மட்டுமன்று. சம்பந்தப்பட்ட சமூகத்தின் அல்லது நாட்டின் முன்னேற்றமும் கருத்திற் கொள்ளப்படுகிறது.

எப்படியான ஒரு சமூகத்தை நாம் கட்டி எழுப்ப விரும்புகின்றோம் என்பதைக் கருத்திற் கொண்டு அதற்குப் பொருத்தமான கல்வித் திட்டத்தை நாம் வகுக்க வேண்டும். எப்படியான மனப்பாங்குகளையும் திறன்களையும் விழுமியங்களையும் வளர்க்க விழைகிறோம் என்பதை மனங்கொள்ள வேண்டும். இன்று எம்மை வருத்தும் இன்னல்களையும் பலவீனங்களையும் புறங்கண்டு புதியதொரு சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண்டுமென்று எல்லோரும் விரும்புகிறார்கள். முறையாகத் திட்டமிடப்பட்டால், சமூகமாற்றத்துக்கும் முன்னேற்றத்துக்கும் உதவும் வலுமிக்க ஒரு சாதனமாகக் கல்வி அமையும் என்று கருதப்படுகிறது.

எனவே, எமது நாட்டின் பிரச்சினைகளையும் வளங்களையும் வாய்ப்புக்களையும் செவ்வனே புரிந்துகொண்டு, எமது சமூக, பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான அறிவையும் திறன்களையும் அபிவிருத்தி செய்வதற்குகந்த கல்விமுறை முன்னெடுக்கப்பட வேண்டும்.

கல்வியின் குறிக்கோள் பற்றிப் பேசுகிறவர்கள் பொதுவாக இரண்டு விடயங்களைக் குறிப்பிடுவர். ஒன்று, பொருளாதாரப் பயன்பாடு, மற்றது, மனிதவிழுமிய அபிவிருத்தி. நவீன காலத்தில் இலௌகீகப் பிரயோசனங்களின்பாற் செலுத்தப்படுமளவு கவனம் 'வையத்துள் வாழ்வாங்கு வாழ' இன்றியமையாத மனித விழுமியங்களின்பாற் செலுத்தப் படுவதில்லை என்று பலர் குறைப்படுவதைக் காண்கின்றோம்.

ஒருவன் தன் சீவனோபாயத்துக்கு வேண்டிய திறனை வளர்க்கவோ தொழிலை அறியவோ கல்வி உதவவேண்டும் என்பது உண்மைதான். ஆயினும், ஏனையவர்களைப் புரிந்துகொண்டு அவர்களோடு உறவாடி வாழ வல்ல குடிமகனாக உருவாகாத ஒருவனால் இவ்வுலகில் இன்புற்றிருக்க முடியுமா? உலகத்துக்குத்தான் அவனால் ஏதும் பயன் உண்டாகுமா?

ஒருவன் உலகத்தைச் சரியாக விளங்கிக் கொள்ளவும் உலகத்துக்குத் தன்னைச் சரியாக விளக்கவும் கல்வி உதவவேண்டும். இவ்வுலகில் வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்கு வேண்டிய தொழிலாற்றல், இவ்வுலகத்தோடு இணைந்து வாழ்வதற்கு இன்றியமையாத மனிதவிழுமியங்கள் ஆகிய இரண்டினுள் எதனையும் அலட்சியம் செய்தல் சாலாது.

கடந்த காலத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் பாடங்களும் எமது நிகழ்காலத்தையும் வருங்காலத்தையும் சிறந்த முறையில் அமைக்க உதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது மொழி, இலக்கியம், சமயம், பண்பாடு, வாழ்க்கை விழுமியங்கள் முதலானவை எம்முன்னோர் தேடிவைத்த அரும்பெரும் செல்வங்களாகும். அவற்றை எமதாகச் சுவீகரித்துப் பயன்படுத்தவும், இன்று நாம் வாழும் சூழலுக்கு முகங்கொடுக்கும் ஆற்றல்களை வளர்க்கவும் கல்வி உதவவேண்டும்.

இன்று சமூக மாறுதல்கள் முன்னெக்காலத்திலும் இல்லா தளவு துரிதகதியில் ஏற்பட்டு வருகின்றன. உலகமயமாதல், நுகர்வுப் பொருளாதாரம், திறந்த சமூகம், சிறிதுகால உபயோகத்தின் பின் ஒதுக்கிவிடும் பண்பாடு - இப்படியானவை பல எமது வாழ்க்கையை நிர்ணயிப்பனவாக நிலைகொள்கின்றன. இந்நிலையில் வாழ்வினைக் கொண்டு நடாத்த வாழ்வில் முன்னேறப் புதிய பல திறமைகள் வேண்டப்படுகின்றன என்று கூறப்படுகிறது.

இலாபமீட்டுவதே ஒரே குறியாகும்போது, போட்டி, அதிகார வேட்கை, புலனுணர்ச்சிகளைக் கீழ்த்தரமாகத் தூண்டும் தன்மை, வன்முறை, கடத்தல், காடைத்தனம், போதைப் பொருட்பாவனை போன்றவை அதிகரிப்பதோடு அமையாது, அவற்றையே இலாபகரமான வியாபாரமாக்கும் ஒருநிலையும் உருவாகிறதென்பர்.
இலாபம் தரவல்லனவற்றின்பால் நுகர்வோர் கவனத்தை ஈர்க்க மேற்கொள்ளப்படும் கவர்ச்சி மிகு தந்திரோபாயங்கள் மக்களை, குறிப்பாக இளைஞர்களையும் சிறாரையும் தடுமாறவைக்கின்றன. பெரு வளர்ச்சிகண்டுள்ள வெகுஜன ஊடகங்களை மனிதசமூக மேம்பாட்டுக்கு உகந்த வகையில் நாம் கையாள்கிறோமா அல்லது அவை எம்மை ஆட்டிப்படைக்கின்றனவா என்ற வினாவும் எழுப்பப்படுகிறது.

வெகுஜன ஊடகங்களின் தாக்கம் பற்றியும் உலகம் ஒரு கிராமமாகி வருவது குறித்தும் சிந்தனையைத் தூண்டும் பல கட்டுரைகளையும் நூல்களையும் வெளியிட்ட பேராசிரியர் மக் லூஹன், ''நரபட்சணிகளின் மத்தியில் பிழைத்திருக்க வேண்டுமானால், அவற்றின் பழக்க வழக்கங்களைப் படித்திருக்க வேண்டும்'' என்றதன் உட்பொருள் ஆழ்ந்து நோக்கத் தக்கது.

முன்னைய காலங்களில் சிறுவர்களுக்குத் தெரியக்கூடாது என்று மறைக்கப்பட்ட விடயங்கள் இன்று அவர்களுக்குத் துலாம்பரமாகின்றன. பாலியல், வன்முறை வீரப்பிரதாபங்களை அவர்கள் தினமும் வீட்டினுள் தொலைக்காட்சியிலே பார்த்து ரசிக்கிறார்கள்.


இவற்றையெல்லாம் விட்டு, தவிர்த்து கிராம வாழ்வுக்குத் திரும்புவதென்பது சாத்தியமானதல்ல. ஆனால், இன்று பலவாறு அலைக்கழிக்கப்படுகிற முதிரா இளமைப்பருவத்தினரின் பிரச்சினைகளை அலட்சியம்




**காதலினா லுயிர் வாழும் - இங்கு**
**காதலினா லுயிர் வீரத்திலேறும்**
**காதலினா லறிவுண்டாம் - இங்கு**
**காதல் கவிதைப் பயிரை வளர்க்கும்...**
**காலமுற்றுந் தொழுதிடல் வேண்டும்**
**காதலென்பதோர் கோயிலின் கண்ணே.**
*- பாரதி*

செய்தல் சாலாது. பாவனைப் பொருள்களை வேண்டுமிடத்தும் சரி, கலை இலக்கியங்களைத் தேருமிடத்தும் சரி, சமூக அரசியல் பேச்சுக்களைக் கேட்குமிடத்தும் சரி, நல்லது எது தீயது எது, உண்மை எது போலி எது, நிலையானது எது, நிலையற்றது எது என்பதை எல்லாம் தேர்ந்தறிவது இன்று மிகச்சிக்கலாகிவிட்டது.
மயக்கும் கவர்ச்சிகள், உணர்ச்சிக் கொந்தளிப்புக்கள், தனிநபர் வழிபாடுகள், குறுக்கு வழிகளில் மேலுக்கு வரும் மருட்சிகள் முதலானவற்றிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு இன்று தேவைப்படும் திறன்களையும் மதிநுட்பத்தையும் இளைஞர்களுக்கு அளிப்பதாகக் கல்வி அமைய வேண்டுமென்பதே இங்கு வலியுறுத்தப்பட வேண்டியதாகும்.

எப்படியான கல்வித் திட்டங்கள் தீட்டப்பட்டாலும், கற்பித்தல் நுட்பங்கள் வகுக்கப்பட்டாலும், கற்பிக்கும் ஆசிரியர்கள் அர்ப்பண சிந்தையோடு பணியாற்றாதவிடத்து எதிர்பார்க்கும் பலன் விளையாது.
நவீன கற்பித்தல் வசதிகளும் வாய்ப்புகளும் மிகுந்த வளர்ச்சியடைந்த நாடுகளைச் சேர்ந்த பிள்ளைகள் பெறும் புள்ளிகளிலும் பார்க்கக்கூடிய புள்ளிகளை வசதிகுறைந்த வளர்முகநாடுகளைச் சேர்ந்த பிள்ளைகள் சர்வதேசப் பரீட்சைகளிலே பெற்றதை அவதானித்த கல்வியியல் விற்பன்னர்கள், ஆசிரியர்களும் மாணவர்களும் காட்டும் ஆர்வத்தின் முக்கியத்துவத்தை விதந்து வலியுறுத்தியுள்ளனர்.



ஆசிரியர், கால உணர்வோடு கற்றறிந்து பிள்ளைகளுக்குப் போதிப்பாராயின் கல்வியின் குறிக்கோள் நிறைவேற வழியுண்டாகும்.
மாணவர்களிடம் கற்றலில் ஆர்வத்தைத் தூண்டுவதும் அந்த வகையில் அவர்களுக்கு முன்மாதிரியாக விளங்குவதும் அவசியமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளைப் பொறுத்த வரை, கண்டிப்பு மிகுந்தவர்களைக் காட்டிலும் முன்மாதிரியாக விளங்கத்தக்கவர்களே இன்று கூடுதலாக வேண்டப்படுகிறார்கள் என்பார் ஓர் அறிஞர்.




போதிய கல்வி வாய்ப்புக்கள் சில பகுதியினர்க்குக் கிடையாதிருப்பதும் இன்று பல சமூகப் பிரச்சினைகளுக்கான காரணமாயுள்ளது. இலவச நூல்களையும் சீருடைகளையும் அரசு வழங்கியபோதிலும் பல பிள்ளைகள் பாடசாலைக்குத் தொடர்ந்து செல்லமுடியாதவர்களாகவே உள்ளனர்.

எனவே, கல்வியில் சமவாய்ப்புக்களை உறுதிப்படுத்துவதற்கான பல நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியவையாகவே உள்ளன.

ஜனநாயக வாழ்க்கை முறையொன்று செவ்வனே செயற்பட வேண்டுமாயின், அவ்வாழ்க்கை முறைக்கு அவசியமான அறிவினையும் மனப்பாங்குகளையும் விழுமியங்களையும் இளஞ் சமுதாயத்தினர் ஊடாகச் சமூகத்தின் எல்லா மட்டங்களிலும் நாட்டவேண்டும். சமூக பொருளாதார, அரசியல் விடயங்களும் பிரச்சினைகளும் சம்பந்தமான முடிவுகளைச் சுயமாகவும் பொறுப்புணர்வுடனும் எடுக்க வல்லவர்களாலேதான் தம் வாழ்வினைச் சீராக அமைத்துக்கொள்ளவும் சமூக மேம்பாட்டுக்குப் பங்களிப்புச் செய்யவும் முடியும்.

எனவே, அத்தகையவர்களை உருவாக்குதல் கல்வியின் குறிக்கோளாதல் வேண்டும்.

இன்று நாம் வாழும் சமூக பண்பாட்டுச் சூழலும் பௌதீகச் சூழலும் வெகுவாகச் சீரழிந்து போயுள்ளனவென்று கூறப்படுகிறது. அந்த நிலையினைத் தோற்றுவித்தது மனிதர்களேயன்றி விலங்குகளோ இயற்கையின் சீற்றமோ அல்ல.

**அரசியல், பொருளாதார, விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சிகளின் பூரண பயனை மனித சமுதாயம் அனுபவிக்க வேண்டுமானால், சமாதானமாக இணங்கி வாழ அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும்.**

எதிர்காலச் சந்ததியினர் இந்த மண்ணில் நல்லவண்ணம் வாழ வேண்டுமென்று விருப்புகிறவர்கள் சுற்றாடலை மாசுபடாது பேணுவதற்கும் இயற்கை வளங்களை விரயமாக்காது பயன்படுத்துவதற்கும் வேண்டிய அறிவையும் மனப்பாங்குகளையும் கல்வியினூடாய்ப் பிள்ளைகள் மத்தியில் விருத்தி செய்ய விழைவர்.

சுற்றாடலுக்கு அச்சுறுத்தலாக அமைந்தவை விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஆகியவற்றின் வளர்ச்சியும் பிரயோகமுமே என்று சிலர் வாதிடுவர். ஆனால், மனிதவாழ்வுக்கு அவசியமான உணவு, உறையுள், போக்குவரத்து, தகவல் பரிமாற்றம் முதலானவை சம்பந்தமான வாய்ப்புகளைப் பெருக்கியதன் மூலம் மனித நாகரிக வளர்ச்சிக்கு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் ஆற்றிய பங்களிப்பு அளப்பரியதாகும்.

அதுமட்டுமின்றி, நவீன உலகம் தனது அறிவியல் அபிவிருத்திகளையெல்லாம் புறந்தள்ளிவிட்டுப் பழைய வாழ்க்கை முறைக்குத் திரும்புவதென்பதும் சாத்தியமன்று. எனவே, விஞ்ஞான, தொழில்நுட்ப அறிவினை வளர்க்கவும் அவ்வளர்ச்சியின் பெறுபேறுகளை மனித மேம்பாட்டுக்குகந்த வகையில் ஆற்றுப்படுத்தவும் ஏற்றவகையில் கல்வியின் குறிக்கோள் அமையவேண்டும்.

நவீன விஞ்ஞான தொழில்நுட்ப அறிவினையும் உற்பத்தித் திறன்களையும் வளர்ப்பதோடு கல்வியின் பணி முடிந்துவிடுவதில்லை. மனிதனை உருவாக்குவதாக, மனித மேம்பாட்டுக்கு ஆதாரமானதாக, நன்மை, உண்மை, நீதி, மனிதாபிமானம் முதலானவற்றை வளர்ப்பதாக அது விளங்க வேண்டும்.

''எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே'' என்ற ஔவையார் கூற்று இங்கு நினைவுக்கு வரலாம். நிலத்துக்கென்று ஒரு நலமுடைமையும் இல்லை. நல்லவர் வாழும் இடம் நலமுடைத்தாகும்.

ஒழுக்க விழுமியங்களை வளர்ப்பதாய்க் கல்வி அமைய வேண்டுமென்ற கருத்து கீழைத்தேயத்திலும் மேலைத்தேயத்திலும் முற்காலம் முதல் வலியுறுத்தப்பட்ட ஒன்று.

ஒழுக்க விழுமியங்களுக்கு ஒரு சமூக கருமப்பாடு அல்லது கடமை உண்டு என்பர். பொதுவாக, உலகத்தோடு ஒட்டி ஒழுக உதவும் விழுமியங்கள் மனிதர்களிடையேயும் குடும்பங்களிடையேயும் சமூகங்களிடையேயும் நாடுகளிடையேயும் நல்வாழ்வுக்கான இணக்கத்தைத் தோற்றுவிப்பனவாகும்.

ஒற்றுமையின் அவசியமும் பலமும் நீண்டகாலமாக உலகெங்கணும் வலியுறுத்தப்பட்டே வந்திருக்கிறது. இருந்தும், மக்களிடையிலான முரண்பாடுகளும் இனத்துவக் குழுக்களிடையிலான முரண்பாடுகளும் நாடுகளுக்கிடையிலான முரண்பாடுகளும் மனிதவாழ்க்கையை அல்லோலகல்லோலப்படுத்தி அவலத்துக்குள்ளாக்கி இருப்பதைக் காண்கிறோம்.

அரசியல், பொருளாதார, விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சிகளின் பூரண பயனை மனித சமுதாயம் அனுபவிக்க வேண்டுமானால், சமாதானமாக இணங்கி வாழ அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

ஒவ்வொரு இனத்தவரும் தமது சமய, மொழி, இலக்கிய, பண்பாட்டுத் தனித்துவங்களைப் பேண விழையும் ஒரு சமூகத்தின் பன்முகப்பாட்டின் உண்மை, அதன் அழகு, பலம் ஆகியவற்றை விஞ்ஞானபூர்வமாக விளங்கிக் கொள்வதற்கும் ஏற்றுக் கொள்வதற்கும் அனுகூலமான திறன்களும் மனப்பாங்குகளும் வளர்க்கப்பட வேண்டியது இன்றியமையாததாகும்.

அவற்றை வளர்த்து மனிதருக்கிடையிலான உறவுகளைப் பலப்படுத்துவது கல்வியின் குறிக்கோளாய் அமைதல் நன்று.

சிறந்ததொரு கல்விமானும், பண்டித ஜவகர்லால் நேருவின் நண்பரும், சுதந்திர இந்தியாவின் முதலாவது கல்வி அமைச்சருமான கலாநிதி ஹுமாயுன் கபீர் வெளியிட்ட ஒரு கருத்து இங்கு வலியுறுத்தத்தக்கது:

**''மனித உறவுகளைக் கையாளுவதற்கு மக்களை ஆயத்தப் படுத்துவதே கல்வி ஆகும்''.** ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களை ஈர்த்தெடுக்கும் பங்குச் சந்தை

- சட்டத்தரணி ஏ. எம். வைஸ்

**ஒருவர் தன்னிடமுள்ள பணத்தை பெருக்கிக்கொள்ள பலவகையான முதலீடுகளில் ஈடுபடலாம். காணி போன்ற சொத்துக்களை வாங்கலாம். வட்டி பெறும் நோக்கில் வங்கிகளில் வைப்பிலிடலாம். நிதிநிறுவனங்களில் அல்லது திறைசேரி உண்டியல்களில் வைப்புச் செய்யலாம். இம்முறைகள் யாவும் குறைந்த உழைப்புச் சிரமத்துடன் இலாபம் பெறும் முதலீடுகளாகும். வியாபார முயற்சிகளில் நேரடியாக ஈடுபடுதல் உழைப்புச் சிரமம் கூடிய ஒரு முதலீடாகும்.**

நவீன உலகில் மிக இலகுவான முதலீடாக கருதப்படுவது பங்குகளில் முதலிடுவதாகும். நிறுவனங்களின் பங்குகளை நிறுவனங்களின் பங்குகளை வாங்குவதன் மூலம் அந்நிறுவனங்களில் முதலீடு செய்து இலாபமீட்டிக்கொள்வதே இதன் நோக்கமாகும். இம்முறையில் பங்கு வாங்குவோருக்கு உழைப்புச் சிரமமில்லை.

நிறுவனங்கள் ஆரம்பிக்கப்படும்போது அதற்குத் தேவையான மூலதனத்தை திரட்ட வேண்டியேற்படுகிறது. இவ்வாறான மூலதனத்தை அல்லது அதன் ஒரு பகுதியை மக்களிடமிருந்து பெரும் நோக்கில் மூலதனப் பங்குகளைப் பெறும்படி பகிரங்க அறிவித்தல் விடுக்கும்.

இவ்வாறான நிறுவனங்கள் தமது மூலதனத்தை பங்குகளாகப் பிரித்து அறிவிக்கும். உதாரணமாக பத்து ரூபா, ஐம்பது ரூபா, நூறு ரூபா, ஆயிரம் ரூபா என பங்குகளைப் பிரித்து மக்களுக்கு விற்கும்.

பங்குகளை வாங்குவோர் அந்த நிறுவனத்தின் பங்காளர்களாகக் கருதப்படுவர். பங்குகளில் பலவகை உண்டு. முன்னுரிமைப் பங்குகளுக்கான இலாபம் முதலில் வழங்கப்படும். இதற்கான இலாபவீதம் ஏற்கனவே குறிக்கப்பட்டிருக்கும். சாதாரண பங்குகளுக்கான இலாபம் நிறுவன இலாபத்தைப் பொறுத்து வேறுபடும்.

நிறுவனம் ஆரம்பிக்கும்போது பங்குகளை வாங்கியோர் காலப்போக்கில் விரும்பின் அவற்றை விற்றுவிடலாம். நன்கு இலாபம் உழைக்கும் நிறுவனங்களின் பங்குகளாயின் முகப்பு விலையைவிட கூடிய விலைக்கு விற்கலாம். நட்டத்தில் இயங்குவனவாயின் முகப்பு விலையைவிட குறைந்த விலைக்கே விற்க வேண்டிவரும். வங்கி போன்ற நிறுவனங்களின் நூறு ரூபாப் பங்குகள் ஆயிரம் ரூபாவுக்கு மேலாகவும் விற்பனையாகியுள்ளன.

நிறுவனத்தை ஆரம்பிக்கும்போது வழங்கப்படும் பங்குகள் முதலாம் தரப் பங்குகள் எனப்படும். அதாவது நிறுவனத்திடமிருந்து நேரடியாகக் கொள்வனவு செய்யப்படுவனவாகும். வாங்கிய பங்குகளை மீண்டும் விற்கும்போது அவை இரண்டாம் தரப் பங்குகள் எனப்படும்.




இயல்பாய் இருக்க
இயலவில்லை
உன்
சந்திப்புக்குப் பிறகு.
- *மயூரா*

இவ்வாறான இரண்டாந்தரப் பங்குகள் வாங்கும், விற்கும் செயல்பாடுகள் நடப்பதையே பங்குச்சந்தை என்கிறோம். பங்குகளை வாங்க விரும்புவோரும் விற்க விரும்புவோரும் பங்குச்சந்தை மூலம் செய்து கொள்ளலாம்.

பங்குகளில் முதலீடு செய்வது சிறந்ததென தற்காலத்தில் கருதப்படுவதற்கு சில காரணங்களுண்டு. பங்குகளின் முதலீடு திரவத்தன்மை கூடியதாகும். ஒருவர் தன்னிடமுள்ள பங்குக்ளை தாம் விரும்பும்போது பணமாக்கிக் கொள்ளலாம். பங்குச்சந்தை மூலம் பங்குகளை விற்பனை செய்து பணமாக்கிக் கொள்ளலாம். குறிப்பிட்ட நிறுவனத்தின் இலாபத் தன்மையைப் பொறுத்தே பங்குகளின் விலை அமையும். அதேபோன்று தாம் விரும்பும் போது பங்குகளை பங்குச்சந்தை மூலம் கொள்வனவு செய்து கொள்ளலாம். எனவேதான் இது கூடிய திரவத்தன்மையுடையது எனக் கருதப்படுகிறது. அதாவது விரைவில் பணமாக்கிக் கொள்ளலாம்.

அத்தோடு பங்குகளின் வருமானத்திற்கான சார்பு அதிகமாகவுள்ளது. இலகுவாகவும் உள்ளது. பணவீக்க காலத்தில் இது சிறந்த முதலீடாகவும் விளங்குகிறது.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பங்கு விற்பனையால் கிடைக்கும் இலாபம் பங்குலாபம் போன்றவற்றிற்கான வரி விலக்களிக்கப்பட்டிருப்பதாலும் மக்கள் பங்குகளை வாங்குவதிலும் வாங்கி விற்றலிலும் ஈடுபாடு காட்டுகின்றனர்.

பங்குகளில் முதலீடு செய்வது இலாபம் மிகுந்ததாகக் கருதப்பட சில காரணங்களுண்டு.



இதன்மூலம் பலவகையான இலாபங்களைப் பெறலாம். நிறுவனங்கள் தங்கள் இலாபத்திற்கேற்ப பங்குகளுக்கான இலாபத்தினை வழங்கும். நிறுவன இலாபத்திற்கேற்ப வழங்கப்படும் இலாபமும் இருக்கும். அதிக இலாபம் இருப்பின் பங்குகளுக்காக கூடிய இலாபம் பகிர்ந்தளிக்கப்படும்.

இவ்வாறு இலாபம் கிடைப்பது மட்டுமின்றி பங்குகளின் விலைகளும் அதிகரிப்பதுண்டு. இலாபம் உழைக்கும் நிறுவனங்களின் பங்குகளின் விலைகள் அதிகரிக்கும். இவ்வாறு விலை அதிகரிக்கும்போது முதலீட்டின் பெறுமதியும் அதிகரிக்கிறது.

ஒருவர் நூறு ரூபாய் பங்குகள் பத்து வைத்திருப்பதாகக் கருதினால் அவரது பங்குகளின் பெறுமதி ஆயிரம் ரூபாவாகும். அந்த நூறு ரூபாய் பங்குகளின் பெறுமதி நூற்றி ஐம்பது ரூபாவாக மாறின் அவரது பங்குகளின் பெறுமதி ஆயிரத்து ஐநூறு ரூபாவாக மாறுகிறது. இந்த அதிகரிப்பு இலாபமானது நிறுவனம் பங்கிடும் இலாபத்திற்கு மேலதிகமானதாகும்.

வைத்திருக்கும் பங்குகளை விலை அதிகரிப்பின்போது விற்பதன் மூலமும் இலாபமீட்டிக் கொள்ளலாம். நூறு ரூபாவாக இருக்கும்போது பங்குகளை வாங்கிய ஒருவர் பங்கின் விலை இருநூறாக மாறுகின்ற போது விற்றால் இலாபம் ஈட்டிக் கொள்ளலாம்.

பங்குகளை வாங்குதல், விற்றல் போன்ற செயல்பாடுகளே பங்குச் சந்தையில் நடைபெறுகின்றன.

இச்சந்தையை நிருவகிக்கும் ஒரு நிறுவனம் இருக்கிறது. இலங்கையில் இருக்கும் இந்நிறுவனம் கொழும்பு பங்குச் சந்தை என அழைக்கப்படுகிறது. இச்சந்தை திங்கள் முதல் வெள்ளி வரை ஒவ்வொரு நாளும் காலை 9.30 முதல் 12.30 வரை இயங்கும்.

பங்குகளை வாங்கவோ விற்கவோ விரும்பும் ஒருவர் பங்குச் சந்தை மூலமே அதனைச் செய்ய வேண்டும். இதனை நேரடியாகச் செய்ய முடியாது. தரகர்கள் மூலமாகவே இந்த வாங்கல் - விற்றலைச் செய்ய வேண்டும்.

அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட தரகர்கள் இதற்கென இருக்கின்றனர். இதற்குச் சில தரகர் நிறுவனங்களும் இருக்கின்றன.

**பங்குகளை வாங்க அல்லது விற்க விரும்பும் ஒருவர் அதுபற்றி தரகருக்கு அறிவிக்க வேண்டும். வாங்க விரும்பும் பங்குகளின் எண்ணிக்கை, எந்த நிறுவனம், கொடுக்க விரும்பும் விலை போன்றவற்றை தரகருக்கு அறிவிக்க வேண்டும்... விபரங்களைப் பெற்ற தரகர், அந்த விபரங்களை கணனிக்கு உட்படுத்துவார். இந்த விபரங்கள் நேரடியாக கொழும்புப் பங்குச்சந்தையுடன் தொடர்புபடுத்தப்படும்.**


பங்குகளை வாங்க அல்லது விற்க விரும்பும் ஒருவர் அதுபற்றி தரகருக்கு அறிவிக்க வேண்டும். வாங்க விரும்பும் பங்குகளின் எண்ணிக்கை, எந்த நிறுவனம், கொடுக்க விரும்பும் விலை போன்றவற்றை தரகருக்கு அறிவிக்க வேண்டும்.

இந்த விபரங்களை தரகருக்கு நேரடியாகவோ அல்லது தொலைபேசிமூலம் அல்லது தொலைநகல் (Fax) மூலம் அறிவிக்கலாம்.

பங்குச் சந்தையும் தரகர் அமைப்புகளும் கணனி மயப்படுத்தப்பட்டு இணைக்கப்பட்டுள்ளன.
எனவே விபரங்களைப் பெற்ற தரகர், அந்த விபரங்களைக் கணனிக்கு உட்படுத்துவார். இந்த விபரங்கள் நேரடியாக கொழும்புப் பங்குச்சந்தையுடன் தொடர்புபடுத்தப்படும்.

பங்குகளின் விலைகள் நிலையாக இருப்பது அரிது. தளம்பல்கள் இருக்கும். நிறுவனத்துக்கு நிறுவனம் இது வித்தியாசப்படும்.

நிறுவனங்கள் வழங்கும் இலாபத்தின் அளவும் பங்கு விலையில் தாக்கத்தை ஏற்படுத்தும். கூடுதலான இலாபம் வழங்கின் பங்குகளின் விலை கூடுதலாக இருக்கும்.
நாட்டின் அரசியல் பொருளாதாரக் கொள்கைகளும் விலையில் தாக்கத்தை ஏற்படுத்தும். அத்தோடு முதலீட்டுக்கு உள்ள பாதுகாப்புகள், சர்வதேச நிகழ்வுகள், உள்நாட்டின் வட்டி வீதம், நாட்டின் பாதுகாப்பு நிலை போன்றனவும் தாக்கங்களை ஏற்படுத்தும்.
இவை யாவும் பொருளாதார அபிவிருத்திக்கும் நிறுவன வளர்ச்சிக்கும் உதவுவதாக இருப்பின் பங்கு விலைகள் நன்றாக இருக்கும். ●




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எம்.ஜி.ஆர் கோபப்பட்டார்...

இசையமைப்பாளர் இளையராஜா எழுதிய 'துளிக்கடல்', 'பால்நிலாப் பாதை' ஆகிய இரு புத்தகங்கள் சமீபத்தில் வெளிவந்துள்ளன. 'துளிக்கடல்' இசைஞானியின் சிந்தனைகள் அடங்கிய புத்தகம். 'பால்நிலாப் பாதை' இளையராஜாவின் அனுபவங்கள். இசையைப் போலவே அவரது உணர்ச்சிபூர்வமாய் வழங்கி யிருக்கிறார். அதிலிருந்து சில பகுதிகள் இங்கே...

பிரபலமான திரைப்பட நிறுவனங்களில் என்னை இசையமைக்க அழைத்தபோது மிகவும் சந்தோஷமாகவும் உற்சாகமாகவும் இருந்தது. இந்தக் கம்பெனிகள் எல்லாவற்றுக்கும் M.S.V. அவர்கள் தான் இதுவரை பணியாற்றி இருக்கிறார்கள். ஆரம்பத்தில் மகிழ்ச்சியாக இருந்தாலும் கூடிய விரைவிலேயே புரிந்து கொண்டேன் - என்னிடம் இவர்கள் வருவது என் இசை ஞானத்திற்காக இல்லை, என் பெயருக்கு மக்கள் கைதட்டுவதால் அழைக்கிறார்கள் என்று.





ஆக, எவ்வளவு உயர்ந்த மாமேதையாக இருந்தாலும் இவர்கள் காரணம் இருந்தாலும், காரணமே இல்லாமல் போனாலும் - எந்த நேரத்திலும் தூக்கி எறிவார்கள் என்று அப்போதே தெளிவாக விளங்கியதால் என்னிடம் வருபவர்கள் யாரையும் மதிக்க வேண்டும் என்றோ - அல்லது அவர்களுடன் வேறு விதமாக உரையாடல்களில் கலந்து அவர்களின் நல் மதிப்பைப் பெற வேண்டுமென் பதிலோ என் கவனம் செல்லவில்லை! உலகத்தை ஒதுக்க விரும்பினேன்! ஆனால் அதற்கு மாறாக - அடையாளம் தெரியாத புதியவர்கள் யார் வந்தாலும் உற்சாகமாக்கி அவர்களுக்குத் தைரியம் கொடுப்பதற்காக என்னை நான் தயார்படுத்திக் கொண்டேன்...

இதற்காக திரை உலகின் கடுமையான விமர்சனத்திற்கு உள்ளானேன். யாரோ அடையாளம் தெரியாதவனுக்கெல்லாம் ஏன் இவ்வளவு நல்ல பாட்டுகளைப் போட்டு வீணாக்குகிறீர்கள்? என்று என்னைக் கேட்ட தயாரிப்பாளர்களுக்கும், டைரக்டர்களுக்கும், நடிகர்களுக்கும் நான் சொல்லிய பதில் அவர்கள் Composingகிற்கு என் முன் வந்து உட்காரும்போது எனக்கு வரும் ட்யூனை வரவேண்டாம் என்று என்னால் தடுக்க முடியாது. வரும் ட்யூனை நான் என்ன பண்ணுவது?...



இப்படிப்பட்ட திரை உலகில் இருக்கிறோம் என்பது தெளிவாகப் புரிந்ததால்தான். அன்றும், இன்றும் சினிமாக்காரர்கள் யாரையுமே ஒரு பொருட்டாக மதிக்கவும் இல்லை. அதனால்தான் இப்போதும் அவர்களைப் பற்றி எனக்கு ஒரு துளி வருத்தமும் இல்லை.

டைரக்டர் ஸ்ரீதர் அவர்களை எனக்கும் பாரதிராஜாவுக்கும் அண்ணன் பாஸ்கருக்கும் மிகவும் பிடிக்கும். அவருடைய படங்களை முதல்நாள் முதல் காட்சியிலேயே பார்த்து விடுவோம். வடநாட்டில் சாந்தாராமை ஒரு திரைப்படத்தில் கவிதை எழுதுபவர் என்று சொல்லுவோம். இங்கே அதேபோல் திரைப்படத்தில் கவிதை சொல்லும் ஒருவர் ஸ்ரீதர் என்று துள்ளுவோம். அப்படிப்பட்ட ஸ்ரீதர் அவர்கள் ''இளமை ஊஞ்சலாடுகிறது'' படத்திற்கு இசையமைக்க என்னை அழைத்தபோது அதிர்ச்சியாகிவிட்டேன்.



மகிழ்ச்சிக்குப் பதிலாக ஏன் அதிர்ச்சி? என்று நினைப்பீர்கள். அதுவரைக்கும் ஸ்ரீதர் சாரோடு M.S.V அண்ணன் 58 திரைப்படங்களுக்கு இசையமைத்திருந்தார் என்பதை அவர்கள் இருவரும் மறந்திருக்கலாம். ஆனால் நான் குறித்து வைத்திருந்தேன் என் நெஞ்சில்! எந்த ஒரு படத்திலும் இசையை மட்டம் என்று தள்ளிவிட முடியாது.

அப்படிப்பட்ட M.S.V-யை வேண்டாம் என்று சொல்ல அவரின் இசை காரணமாக இருக்க முடியாது. என்னிடம் வருவதற்கும் என் இசை காரணமில்லை. இரண்டிற்கும் இடையில் ஏதோ ஒன்று இருக்கிறது என்றும் என்னை ஜனங்கள் விரும்புகிறார்கள் எனும் அந்த உண்மை மறுபடியும் மனதில் உறுத்தியது.

அடடா! என்னடா இந்த விவஸ்தை கெட்ட சினிமா உலகம்? இதோடு எப்படி நான் ஒத்துப்போவது? இன்னும் கொஞ்சம் சினிமாவை தூரமாக்கி இசையை மட்டும் அருகில் வைத்துக்கொண்டேன். டைரக்டர்களும், அவர்களின் தயாரிப்பாளர்களும், நடிகர்களும் எனக்கு இரண்டாம் பட்சம் தான். ஆனால் இசை மட்டும் கதையோடும் பாத்திரங்களோடும், மக்களோடும் ஒட்டி இருக்க வேண்டும் என்பதில் கவனமாக இருந்தேன்.

என் ஓரோர் பாடலும் வேறோர் பாடலே! இசையமைத்த ஓரோர் படத்தின் பின்னணி இசையும் வேறோர் இசையே! என்பதை இன்றுவரை நியாயமாகவே செய்து வந்திருக்கிறேன்.

இதில், ஏதாவது சரியில்லை, அதன் காரணம் நான் இல்லை. இந்த மாதிரியான மனநிலையில் அப்போதே மற்றவர்களிடமிருந்து மாறுபட்டிருந்த நான், இவர்கள் வேண்டும்போது ஒத்துக்கொள்ளவோ, வேண்டாம் எனும்போது சும்மா இருப்பதற்கோ, நான் என்ன விலைமாதா? என்று யோசிப்பேன்.

நான் மிகவும் மதிக்கும் M.S.Vயை வேண்டாம் என்று தூக்கியடிக்கிறார்களே! அப்படிப்பட்ட இவர்களை நான் வேண்டாம் என்று சொல்ல வேண்டும் என்று ஒரு முடிவெடுத்தேன்.

**தாயின் அரவணைப்பு, பாசம் குறித்து இளையராஜாவின் பாடல்களைக் கேட்டு என் நெஞ்சு நெகிழ்ந்து உருகும். இன்று அவரது பாடல்களை உலகம் எங்கும் உள்ள ஒவ்வொரு தாயும் அசைபோட்டுக் கொண்டிருக்கிறாள்.**

*- வலம்புரி ஜான்*

சி
னி
மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நேரத்தில், டைரக்டர் ஸ்ரீதர் அவர்கள், கண் சிகிச்சைக்காக வெளிநாடு போவதாக ஒரு செய்தி இருந்தது. அது, நாளடைவில் வெளிநாட்டில் இருக்கும் நாட்களை ஏன் வீணாக்க வேண்டும் என்று ஒரு திரைப்படம் எடுக்கும் திட்டமாக மாறிவிட்டது.

அந்தப்படத்தில் இசையமைக்க என்னைக் கேட்டுக் கொள்ள ஸ்ரீதர் சார் வந்தார்கள். ஏற்கனவே நான் எடுத்திருந்த முடிவைச் சோதித்துப் பார்க்க, ஒரு சரியான சந்தர்ப்பம். அவரோ பெரிய டைரக்டர். உள்ளே (அதாவது மனதிற்குள்ளேயே) இப்படிப்பட்டவரைக்கூட வேண்டாம் என்று விட்டேன் என்று பெருமைப்பட ஒரு நல்ல வாய்ப்பு! விட்டு விடாதே என்றொரு குரல்! ஆனால் எப்படி ஸ்ரீதர் சாரிடம் சொல்வது என்று தயக்கமேற்பட்டது. எடுத்த முடிவு என்னவோ முடிவுதான் என்பதில் நான் மிகவும் பிடிவாதக்காரன்! என் தயக்கத்திற்குள்ளேயே இரண்டு மூன்று முறை வந்து போய் விட்டார் டைரக்டர். மேலும் இரண்டு முறைகளும் தேடி வந்துவிட்டார். பதில் என்னவோ ஒன்றுதான். சொல்லும் வார்த்தைகள்தான் மாறியது.

சார் நிறையப்படங்கள் ஏற்கனவே ஒத்துக்கொண்டதால், குறிப்பிட்ட நேரத்தில் உங்களுக்குப் பாடல்களைப் பதிவு செய்து

**என்னைப் பற்றி நடுநிலையாளர்களுக்கு ஒரு கருத்து உண்டு. அதாவது ராஜா சார் மீது அதிக பாசம் உடையவன். ஆனால் ராஜாவைப் போன்று வேறு இசையமைப்பாளர்கள் உலகில் இல்லை என்று நான் கருத்து சொல்வதாக அவர்கள் நினைக்கிறார்கள். அந்த விமர்சனத்தை இப்போது மாற்றிக் கொள்கிறேன். இளையராஜாவைப் போன்ற இசையமைப்பாளர்கள் உலகில் இருந்திருக்கிறார்கள். ஆனால் அவர்களைத் தேடிப் பார்த்தால் நூற்றாண்டுக்கு ஒருமுறை இருந்திருப்பார்கள். இந்த நூற்றாண்டுக்கு இளையராஜா.**

**- கமல்ஹாசன்**

கொடுக்க முடியுமோ முடியாதோ? என்று சந்தேகமாக இருக்கிறது என்றேன். அது பரவாயில்லை ராஜா என்றார். நாம் ஒரே Composingகில் எல்லாப் பாடலையும் முடித்து விடலாம் என்றார். சார், நாளைக்குச் சொல்கிறேனே... என்று இழுத்தேன். மறுநாள் A.V.Mல் Recordingல் இருந்தேன். ரிகர்சல் முடியும்வரை ஸ்ரீதர் சார் காத்திருந்தார்.

ராஜா இதுவரை என் Lifeல யாரையும் தேடிப்போனது இல்லை. ஏன்? எம்.ஜி.ஆர். கிட்டேயும் சிவாஜிகிட்டேயும் கூட நான் ஆறு தடவை போனது இல்லை. இது 6th Time உங்களைப் பார்க்க நான் வந்திருக்கிறேன்.

என்ன சொல்றீங்க? அவரிடம் நான் சாதாரணமாய்ச் சொன்னேன். 6 தடவை நான் உங்கள வரச்சொல்லலியே சார்!...

அதிர்ந்து போனார் அவர். இருந்தாலும் கோபத்தைக் கொஞ்சம் குறைத்துக்கொண்டு ராஜா ஒரே Composing நான்கு மணி நேரம் போதும் என்று தொடங்கினார்.

நான் இடைமறித்தேன். சார் ஸ்ரீதர் அவர்கள் படத்தில் பாடல் சரியில்லையென்றால் ரசிகர்கள் ஸ்ரீதர் பாடல் சரியில்லை என்பார்களா? என் பாடல் சரியில்லை என்பார்களா?

இல்ல ராஜா!

சார் இதுவரைக்கும் 58 படங்களுக்கு M.S.V அண்ணன் உங்களுக்கு இசையமைத்திருக்கிறார். அதில் ஒரு பாட்டும் சோடையில்லை! அப்படி இருக்க உங்க குறிப்பிட்ட நேரத்துக்குள்ளாற முடிக்கிறதுக்காக, எதையோ Record பண்ணிக் குடுத்து ரசிகர்கள் கிட்ட இருந்து திட்டு வாங்க நான் தயாரா இல்ல. தயவுசெய்து இந்தப் படத்துக்கு வேற யாரையாவது வச்சு முடிச்சுக்கங்க. என்ன மன்னிச்சிருங்க என்று சொல்லி மறுத்துவிட்டேன்.

குஷ்புவுக்கு கோயில் கட்டத் துணிந்த தமிழ் ரசிகர்கள் மும்தாஜுக்காக ஒரு தாஜ்மகாலாவது கட்டிவிடத் தயங்காமல் முன்னேறி வருகிறார்கள். குஷ்புவாவது கதாநாயகி நடிகையாக இருந்தார். மும்தாஜோ வெறும் கவர்ச்சி நடிகையாகவே அந்தச் சாதனையை நிலைநாட்டி விடுவார் என்று தெரிகிறது. மற்ற கவர்ச்சி நடிகைகளுக்கும் இவருக்கும் வித்தியாசம் உண்டு. இவர் கவர்ச்சி காட்ட மட்டுமே களத்தில் குதித்தவர் அல்ல. கதாநாயகியாக அறிமுகமானவர். கதாநாயகியாகவே அறிமுகமாகி பின்னர் கவர்ச்சி நடிகையாக தாக்குப்பிடிக்க முயன்ற குயிலி போன்றவர்களைப் போல் தோற்றுப்போகவில்லை மும்தாஜ். 'மோனிஷா என் மோனலிஷா' வெற்றி பெறாததால் கவனிக்கப்படாமல் போன மும்தாஜ் சோர்ந்து ஒதுங்கிவிடவில்லை. கதாநாயகிக் கனவுகளில் மூழ்கிக் கிடக்காமல் 'கட்டிப்புடி கட்டிப்புடிடா...' என்று குஷியில் மறுபிரவேசம் செய்து இன்று கதாநாயகி நடிகைகளே கலங்கிப்போகும் விதத்தில் சம்பளம் வாங்குகிறார். சாக்லேட் படத்தில் ரசிகர்கள் ரசித்த ஒரே விஷயம் 'மலே மலே'தான் என்பதை எல்லோரும்தான் பார்த்தோமே!.

இவரை அறிமுகப்படுத்திய டி. ராஜேந்தர் தி.மு.க கட்சிக்காரர். நடைபெறவிருக்கும் ஆண்டிப்பட்டி இடைத்தேர்தல் தி.மு.க.வுக்கு சவாலாக இருப்பதால் ஜெயலலிதாவை தோற்கடிப்பதற்கு ராஜேந்தர் கேட்டுக்கொண்டதற்கிணங்க மும்தாஜ் ஆண்டிப்பட்டி முழுவதும் நடனமாடி வாக்குச் சேகரிக்க ஒத்துக்கொண்டிருப்பதாக செய்தி. மும்தாஜிடம் கேட்டால் 'எனக்கு அரசியல் தெரியாது. அறிமுகப்படுத்தியவர் கேட்டுக்கொள்கிறார் என்பதற்காக அவருடைய கட்சிக்கெல்லாம் பிரச்சாரம் செய்ய முடியாது. அப்படி அவர் கேட்டுக் கொள்ளவும் இல்லை' என்று மறுத்திருக்கிறார்.

மும்பை வரவான மும்தாஜிடம் பொங்கல் நாள் பேட்டியில், 'பொங்கலைப்பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? என்று கேட்டதற்கு, 'கொடுத்தால் சாப்பிடத் தெரியும். மற்றபடி அந்தப் பண்டிகை உழவர்களுக்காக கொண்டாடப்படுகிறது என்பதை ஓரிரு நாட்கள் முன்புதான் அறிந்தேன்' என்பது அவர் பதில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரதியுக்ஷா அறிமுகமான 'கடல்பூக்கள்' பொங்கலன்று வெளி வந்தது. அதற்கு முன்னரே போனவருஷத்திலேயே அவர் நடித்த மனுநீதி, சூப்பர் குடும்பம், பொன்னான நேரம், தவசி போன்ற படங்கள் வந்துவிட்டன. இரண்டாம்நாயகியாக நடித்த தவசிதான் பிரதியுக்ஷாவுக்கு ஓரளவு வாழ்வு கொடுத்திருக்கிறது. இப்போது சத்யராஜின் 'சவுண்ட் பார்ட்டி', குணாலுடன் 'ஆனந்த ரோஜாக்கள்', அப்பாஸுடன் 'மானஸ்தன்' மற்றும் 'நைல்நதி' ஆகிய படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார். கூடவே ஹைதராபாத் கல்லூரியில் ஹோட்டல் மனேஜ்மெண்டில் பி.ஏ கடைசி வருடம் படிக்கிறார்.

பாஸ்கரும், அமரரும், பாரதிராஜாவும் ஒனக்கு ரொம்ப மண்டைக்கர்வம் என்று திட்டினார்கள். ஆமாம் கர்வம்தான். அன்று இரவு மகிழ்ச்சியாகத் தூங்கினேன்!

இப்போதும் அந்தக் குணம் அப்படியே தொடர்கிறது. எதற்காக ஒரு வேலையை ஒத்துக்கொள்வேன் அல்லது தள்ளிவிடுவேன் என்பது யாருக்கும் தெரியாது. ஏன்? எனக்கே தெரியாது.

''முந்தானை முடிச்சு'' நூறாவது நாள் விழாவில் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அண்ணன் அவர்கள் கலந்துகொண்டு பரிசுகள் வழங்குகிறார்கள்.

நான் அப்போது மூகாம்பிகையின் தீவிரமான பக்தன், சபரிமலைக்கு மாலை வேற போட்டிருந்தேன். மூகாம்பிகையின் பக்தன் ஆனபிறகு என்னுடைய நடை உடை பாவனைகளில் பெரிதும் மாற்றம் ஏற்பட்டது. கொஞ்சம் கொஞ்சமாக ஆரம்பத்தில் எல்லோரையும் போல நடந்து கொண்டிருந்தவன் அப்போது முழுவதுமாக மாறியிருந்தேன்...

ஆதலால் வெளி உலக விஷயங்களில் ஈடுபாடு இல்லாமல் ஏதோ ஒப்புக்கு கலந்து கொண்டு நாட்களை கடத்தினேன். ஆனால் வேலையில் மட்டும் விரக்தி வரவேயில்லை.

அந்த விழாவிற்கு கொஞ்ச நாட்களுக்கு முன்னால்தான் கையிலிருந்த மோதிரத்தை கழற்றி வைத்து விட்டேன். ஒரு Rado Watch கட்டியிருந்தேன். திடீரென்று ஒரு ரெக்கார்டிங்கின்போது இன்ஜினியர் ராமனாதன் அவர்கள் கையைப் பார்த்தேன் - வெறும் கையாக இருந்தது.

வாட்சைக் கழற்றி இதை என் அன்பளிப்பாக வைத்துக்கொள்ளுங்கள் என்று கொடுத்து விட்டேன். அன்றிலிருந்து இன்றுவரை எந்த ஆபரணமும் என் உடம்பில் படாமல் பார்த்துக்கொள்கிறேன். இல்லை என் மனதில் படாமல் என்பதே சரியாக இருக்கும்.

இந்த மாதிரியான நேரத்தில் நடந்த அந்த விழாவில் எம்.ஜி.ஆர். அண்ணன் அவர்கள் கையால் எல்லோருக்கும் தங்க மோதிரம் கொடுக்க பாக்கியராஜ் ஏற்பாடு செய்திருந்தார். என் முறை வந்தது. மேடைக்குச் சென்றேன். சிரித்துக்கொண்டே முதுகில் தட்டிக்கொடுத்து ஷீல்டை வழங்கினார். வாங்கிக் கொண்டேன்.




அடுத்து மோதிரத்தைக் கொடுக்க வந்தார். அண்ணே எனக்கு மோதிரம் வேணாம்ண்ணே.

ஏன்?

போட்டுக்கொள்ளும் பழக்கமில்லேண்ணே!

சரி! சரி! வாங்கிக்கோ! பரவாயில்லை!

இல்லண்ணே! எனக்கு வேண்டாம்; இங்க பாருங்க என்று என் வெறும் கையைக் காட்டினேன்.

நானும் போடுறதில்ல. அட என்னப்பாரு என்றார்.

அவர் கையில் தடியான ஒரு வாட்சு இருந்ததைப் பார்த்தேன்.

அண்ணே ஒங்க சமாச்சாரம் வேறண்ணே!

பரவாயில்லை ஒரு மரியாதைக்காக வாங்கிக்கோ என்றார்.

எனக்கு வேணவே வேணாம்ண்ணே!

அந்த நிகழ்ச்சி வீடியோவிலும், திரைப்படக் கேமலாவிலும் வேறு படமாகிக் கொண்டிருந்தது.

பத்திரிகை நிருபர்கள், சினிமாப் பிரமுகர்கள் என்று எல்லோரும் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

பரிசு வழங்கும் நிகழ்ச்சியில் இதற்கு நேரம் போய்க்கொண்டிருக்கிறது. அண்ணன் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு மிகவும் கோபம் வந்துவிட்டது.

எனது இடது கையை இறுக்கமாகப் பிடித்தார். மோதிரத்தை வைத்திருந்த பெட்டியைக்கூட கழற்றாமல் அந்தப் பெட்டியோடு, என் மோதிர விரலில் கோபமாக மாட்டிவிட்டார்.

நான் அந்த மோதிரத்தை அங்கேயே கழற்றி, பின்னால் இருந்த பாக்யராஜிடம் கொடுத்துவிட்டுக் கீழே இறங்கிவிட்டேன்.

திரு. எம்.ஜி.ஆரின் உயர்ந்த குணம் என்று நான் பாராட்டுவது இதுவே ஆகும். அன்று அவர் நினைத்திருந்தால், எனக்கு எவ்வளவோ இடைஞ்சல்கள் செய்திருக்கலாம். ஒரு Spiritual Purity-யில் என் மனம் ஒன்றிப் போயிருந்ததால் அப்படி நடந்தாலும் ஏற்கும் மனப் பக்குவமுற்றிருந்தேன். ஆனால், அப்படி அவர் கீழ்த்தரமான மனித குணம் படைத்தவரல்ல என்பதை அந்த நிகழ்ச்சியின் மூலம் உணர்ந்து கொண்டேன். ●



படத் துவக்க விழாவில் ராஜேந்தர், கடைசி மகன் குறளரசன், மனைவி உஷா, மகள் இலக்கியா



சார்மி

டி. ராஜேந்தர் அவரது சிரேஷ்ட புதல்வன் சிலம்பரசனை கதாநாயகனாக அறிமுகப்படுத்தும் படம் 'காதல் அழிவதில்லை'. வழக்கமாகவே பெரும் செலவில் படங்களைத் தயாரிக்கும் ராஜேந்தர் இது மகனின் எதிர்காலம் என்பதால் செலவை இருமடங்காக்கி இருக்கிறார். இந்தியா முழுவதும் தேடி சிம்புவுக்கு ஜோடியைப் பிடித்திருக்கிறார். சிம்புவே இன்னும் மீசை சரிவர முளைக்காத டீன் ஏஜ் குழந்தை. அவருக்கேற்ற ஜோடியாக பால்மணம் மாறாத ஒரு நாயகியை மும்பையிலிருந்து கொண்டுவந்திருக்கிறார். பெயர் சார்மி. ராஜேந்தர் அறிமுகப்படுத்திய ஜோதி, நளினி, ஜீவிதா, அமலா, மும்தாஜ் யாவருமே அவரவர் பாணியில் ஒரு சுற்று வந்தார்கள். சார்மியையும் திரையுலகம் அதே நம்பிக்கையோடு எதிர்பார்க்கிறது. பூஜையின்போது ஒன்றும் புரியாமல் சிரித்துக்கொண்டிருந்தது இந்த சார்மிக் குழந்தை. மோனிஷா என் மோனாலிசாவில் மும்தாஜும் இப்படித்தான் இருந்தார். இன்று 'மலே மலே' அளவுக்கு கலக்கல் உயரத்தில்!






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☛ ஹிந்தித் தொலைக்காட்சித் தொடர்களில் நடிக்கிறார் நக்மா. ஒரு தொடர் முழுவதும் நடிப்பதற்கு அவர் கேட்டிருக்கும் சம்பளம் 80 இலட்சம். தமிழ்த் தொடர்களிலும் நடிப்பதற்கு ஆவலாக இருக்கிறாராம்.



☛ தமிழில் எதிர்பாராத பெருவெற்றி பெற்ற படம் சேது. இப்போது அது கன்னடத்திலும் பெருவெற்றி பெற்றிருக்கிறது. இதைக்கண்டு தெலுங்கில் தயாரிக்கும் உரிமையை வாங்கியிருக்கிறார் டாக்டர் ராஜசேகர். தானே நடிக்கிறார். படத்தை இயக்குபவர் ராஜசேகரின் மனைவியும் முன்னாள் நடிகையுமான ஜீவிதா.

☛ ஜீன்ஸ் படத்தில் ஏ.ஆர். ரகுமான் இசையில் பிரபலமான பாடல் கொலம்பஸ். அதுமட்டுமல்ல பல நாடுகளுக்கு கடல்வழி கண்டுபிடித்தவர் இவர். இப்போது 'கொலம்பஸ்' என்ற பெயரில் தயாராகும் படத்திற்கு இசையமைக்கிறார் யுவன் சங்கர்ராஜா.




அனு

சூப்பர்குட் பிலிம்ஸின் அடுத்த படம் 'அற்புதம்'. ஹீரோ லோரன்சுக்கு ஜோடியாக கன்னடத்தின் நம்பர்1 நாயகியை அழைத்து வந்திருக்கிறார்கள். இவர் அங்கே குழந்தை நட்சத்திரமாகவே நிறைய படங்களில் நடித்திருப்பதாகவும், நடிகர் அர்ஜுனின் மனைவிக்கு மைத்துனி முறையானவர் என்றும் சொல்கிறார்கள். சொல்லாமல் மறைத்திருக்கும் விஷயம் இவர் ஏற்கனவே கல்யாணமாகிவிட்டவர் என்பதுதான்.

பூமிகா பிறந்து வளர்ந்தது ஆந்திராவில். தெலுங்கு டி.வி நிகழ்ச்சிகளில் தொகுப்பாளினியாக கடமையாற்றி அங்கிருந்து சினிமாவுக்குத் தாவியவர். சூர்யா குஷி படத்தை தெலுங்கில் எடுத்தபோது அந்த பிரமாண்டமான வெற்றியோடு இருவரும் நெருங்கினார்கள். ஆனால் இப்போதோ, தான் இயக்குகிற எல்லா கதாநாயகிகளிடமும் தனக்கு உண்டாகும் ஈர்ப்புத்தான் பூமிகாவிடமும் உண்டானது என்று கழன்றுகொண்டு விட்டார் சூர்யா.
'நாங்கள் பழகினதை காதல் என்று பலரும் எடுத்துக்கொண்டார்கள். ஆனால் அது வெறும் நட்புத்தான். இரண்டுபேருக்குமே தொழில் ரீதியான வேறுவேறு இலக்குகள் இருக்கின்றன. காதலிக்க நேரமில்லை' என்று அலட்சியமாக சொல்கிறார் பூமிகா.


மோனல்



☛ தமிழில் அக்கா இடத்திற்கும் ஏறமுடியாமல் மும்தாஜ் இடத்திற்கும் இறங்க முடியாமல் தொடர் தோல்விகளால் நொந்தவர் சிம்ரனின் தங்கை மோனல். இப்போது ஒரு ஹிந்திப் படத்தில் மம்முட்டிக்கு ஜோடியாக நடிக்கிறார். மற்றொரு ஜோடி ரவீணா டான்டன்.

☛ திருநெல்வேலி, கலகலப்பு போன்ற படங்களில் நடித்த உதயா தயாரிப்பாளர் ஏ. அழகப்பனின் மகன். இவர் கதாநாயகனாக நடிக்கும் புதிய படம் 'விண்ணைத் தாண்டி வருவாயா' கதாநாயகியாக ப்ரியங்கா திரிவேதியுடன் புதுமுகம் மம்தாவும் அறிமுகமாகிறார். திரைக்கதை வசனம் எழுதி இயக்குகிறார் செந்தில் மாத்தூர்.

☛ ரோஜாக்கூட்டம் படத்தில் வைரமுத்து - பரத்வாஜ் கூட்டணி பாடல்களில் கலக்கியிருக்கிறார்களாம். இந்த ஆண்டின் முதலாவது மிகப்பெரிய வெற்றிகரமான ஒலிப்பேழையாக அமையுமாம்.

☛ இரண்டு கதாநாயகர்களில் ஒருவராக நடிக்க இறங்கி வந்துவிட்டார் மாதவன். அதேபோல இளையவர்களுக்கு மட்டுமே ஜோடி சேருவேன் என்றிருந்த ஜோதிகா விஜய்காந்திற்கு ஜோடியாக நடிக்கவும் சம்மதித்துவிட்டார். இந்த இரண்டு அதிசயமும் ரோஜாக்கூட்டத்தை அடுத்து ஆஸ்கார் ரவிச்சந்திரன் தயாரிக்கும் புதிய படத்தில் இடம்பெறுகிறது. படத்தின் இயக்குனர் தீனா படத்தை இயக்கிய முருகதாஸ். ஒரு ஆறுதல், நாயகன் நாயகியாக நடித்தாலும் படத்தில் விஜய்காந்துக்கும் ஜோதிகா வுக்கும் டூயட் கிடையாதாம்.

☛ பெரிசுகளோடு ஜோடியாக நடிக்கமாட்டேன் என்று நிபந்தனை விதித்துக்கொண்டிருக்கும் மற்றொரு நடிகை சினேகா. அஜித், விஜய், பிரசாந்த், மாதவன், ஷாம் இவர்களுடன் நடிக்க மட்டுமே ஒப்புக்கொள்கிறார்.


சி
னி
மா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினிமா

☛ மூன்றெழுத்துக் கம்பனியின் மூன்றெழுத்துப் படத்தில் மூன்றெழுத்து இயக்குனர் இயக்கத்தில் நடிக்கும் மூன்றெழுத்து நடிகையை புதுமுகம் என்று அறிமுகப்படுத்துகிறார்கள். ஆனால் அவர் புதுமுகம் இல்லையாம். ஏற்கனவே ஒரு ஹிந்திப் படத்தில் நடித்திருக்கிறார். அது தோல்வி. 'ஆக்ஷன் கிங்' நடித்த 'ஏழு வண்ண'ப் படத்துக்கு ஒப்பந்தமாகி 'மேக்கப் டெஸ்ட்' எல்லாம் எடுத்தபிறகு நிற்பாட்டி 'அந்தாதி' நடிகையைப் போட்டார்கள். என்ன புதுமுகமோ?


கிரண்

☛ அழகி, கன்னத்தில் முத்தமிட்டால் ஆகிய படங்களுக்காக தென்னகம் வந்த நந்திதாதாஸ் இப்படங்களைத் தொடர்ந்து 'கண்ணகி' என்ற மலையாளப் படத்திலும் நடித்து வருகிறார். பல தேசிய விருதுகளை வாங்கிக் குவித்த ஜெயராஜ் இயக்குகிறார். ஷேக்ஸ்பியரின் கிளியோபாட்ரா கதையை கருவாக வைத்து எடுக்கப்பட்டு வருகிறது.


நந்திதா தாஸ்

☛ கன்னடத்தில் பெரிய நடிகரும் இயக்குநருமான உபேந்திரா தமிழின் நடனப்புயல் பிரபுதேவா ஆகியோருடன் இணைந்து பிரியங்கா திரிவேதி நடித்த $H_2O$ மிகப்பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்திய படம். காரணம் படத்திற்கு படம் புதுமைகள் செய்யும் உபேந்திரா, மற்றும் கவர்ச்சியை தாராளமாக அள்ளிவீசிய பிரியங்கா. இது தமிழிலும் மொழிமாற்றப்பட்டு வருகிறது. $H_2O$ வெளியாகியும் கன்னடத்தில் முதலிடத்தை பிடிக்க முடியாமல்போன பிரியங்கா இப்போது மும்தாஜை வாழவைக்கும் தமிழ் ரசிகர்களை பெரிதும் நம்பியிருக்கிறார்.

☛ பம்மல்Kசம்பந்தத்திற்கு பிறகு கமல் நடிப்பதாக இருந்த நரன் படம் கைவிடப்பட்டதாக இடையில் செய்திகள் வந்தன. ஆனால் பம்மல்Kசம்பந்தம் படத்தின் விநியோக உரிமையை பெற்ற தயாரிப்பாளர் தேனப்பன் அந்தப் படத்தின் வெற்றி வருமானத்தால், கைவிட்ட படத்தை மீண்டும் துரிதமாக எடுக்க முடிவெடுத்திருக்கிறார். ஆனாலும் நரன் கதையை எடுப்பதாக இல்லை. 'பஞ்சதந்திரம்' என்ற பெயரில் புதிய கதை விவாதித்து வருகிறார்கள். கமலோடு சேர்ந்து நடிக்கப் போகிறார்கள் நான்கு மொழி நடிகர்கள். ஐந்து மொழிகளைச் சேர்ந்த நாயகர்கள் நடிப்பதால் ஐந்து மொழியிலும் படத்தை எளிதாக விற்றுவிடலாம் என்பதே அந்த 'பஞ்ச' தந்திரம்.


பம்மல் K சம்பந்தம்

☛ ஹிந்தி முதல்வனால் அடிபட்டுப் போயிருக்கும் ஏ.எம். ரத்னம் இந்த ஆண்டில் நான்கு படங்களைத் தயாரிக்க முடிவெடுத்திருக்கிறார். அதிலொன்றை 'தில்' வெற்றிப்படத்தைத் தந்த தரணி இயக்க விக்ரம் நடிக்கிறார். இன்னொரு படத்தை ரத்னத்தின் மகன் கிருஷ்ணா இயக்குகிறார். பிரபுதேவாவுக்கு ஜோடியாக முன்னாள் மிஸ் சென்னை த்ரிஷா. படத்தின் பெயர் 'எனக்கு இருபது உனக்கு பதினெட்டு'.



☛ பாடகர் ஏ.எல். ராகவன் தயாரித்த 'கண்ணில் தெரியும் கதைகள்' என்ற ஒரு படம் சில காலத்திற்கு முன் வந்தது. அந்தப் படத்தின் சிறப்பாக அமைந்தது அன்று பிரபலமாக இருந்த ஐந்து இசையமைப்பாளர்கள் அப்படத்திற்கு இசையமைத்தார்கள் என்பதே. இப்போது பார்த்திபனின் படமான 'ப்ளாட்∴பார்ம்' படத்திற்கு நான்கு இசையமைப்பாளர்கள். நால்வரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இளையராஜா, கார்த்திக்ராஜா, யுவன்சங்கர்ராஜா, பவதாரிணி ஆகிய அந்த நால்வர்கள்.


காயத்ரி ரகுராம், பிரபுதேவா

☛ நடிகரும் இயக்குனருமான ராமராஜன் நடிகை நளினியை காதலித்துத் திருமணம் செய்துகொண்டவர். இரட்டைக் குழந்தைகள் பிறந்து சிலகாலம் சந்தோஷமாக இருந்தார்கள். பின்னர் விவாகரத்துப் பெற்றுக்கொண்டார்கள். இப்போது ராமராஜன் தன் சொந்தக்காரப் பெண் ஒருவரை ரகசியமாக திருமணம் செய்துகொண்டிருக்கிறார். இதுவும் காதல் திருமணம்தானாம்!

☛ ரம்பா - 'த்ரீ ரோஸஸ்', ஜோதிகா - 'ஒன் டு த்ரீ' தயாரிப்புகளைத் தொடர்ந்து சிம்ரனும் ஒரு படத்தை தயாரிக்கவிருக்கிறார்.

☛ நீண்ட இடைவெளிக்குப்பிறகு பார்த்திபனின் 'ஏலேலோ' படத்திற்காக கலைஞர் கருணாநிதி ஒரு பாடலை எழுதியிருக்கிறாராம்.

☛ 'அமர்க்கள'மாக இணைந்த காதல்ஜோடி வாழ்க்கைக்குள் புயலாக நுழைந்த 'வசுந்தர'மான பாடகி நடிகையை 'அல்டிமேட்' இரண்டாவது திருமணமும் செய்யப் போகிறார் என்ற செய்தியால் கலங்கிப் போயிருக்கிறார் முன்னாள் 'குழந்தை நட்சத்திரம்'. ஆனால் அந்த மும்பைத் தமிழ் வசுந்தர நடிகையின் பூர்வீகத்தைத் தோண்டியபோது, அவருக்கு ஏற்கனவே ஒரு ஹிந்தி நடிகர் மூலமாக ஒரு குழந்தை இருக்கும் செய்தி தெரியவந்துள்ளது.

☛ 1931ல் முதல் பேசும் படமான காளிதாஸ் வந்ததிலிருந்து 2001 டிசம்பர் முடிவு வரையிலும் வந்த தமிழ்ப்படங்கள் மொத்தம் 5419 என்கிறது ஒரு புள்ளிவிபரம். இதில் பாதிக்கு மேற்பட்ட படங்களை ஒளிபரப்புவதற்காக தனியார் டி.வி நிலையங்கள் உரிமையை வாங்கி வைத்திருப்பதால் இந்தத் தொகைப்படங்களில் பெரும்பான்மையானவற்றை மக்கள் பார்த்திருக்கிறார்கள் என்றும் அந்த குறிப்பு கூறுகிறது.

☛ கதாநாயகன், கதாநாயகி இருவரது முதலெழுத்துக்களையும் சேர்த்து ஒரு படத்திற்கு தலைப்பு வைத்திருக்கிறார்கள் இப்போது. சூர்யா நாயகன் பெயர். ரிஷி பாலா நாயகி. இருவரின் முதலெழுத்தையும் சேர்த்து 'சூரி'. இயக்குபவர் சங்கரின் உதவியாளரான செல்வன்.

☛ ஸ்நேகா நடித்த முதல் படமான விரும்புகிறேன் இன்னும் வரவில்லை. படப்பிடிப்புக்கு ஒழுங்கில்லை, தேதிகளைக் குழப்பி திணறடிக்கிறார் என்று ஏகப்பட்ட குற்றச்சாட்டுக்கள். ஆனாலும் இன்று ரொக்கட் வேகத்தில் கிடுகிடுவென போய்க்கொண்டிருக்கும் நடிகை ஸ்நேகாதான். சம்பளத்தை இருபது லட்சத்திலிருந்து நாற்பது லட்சமாக உயர்த்திவிட்டார்.



விரும்புகிறேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோயற்ற

மென்பானங்களின் உற்பத்தியாளர்கள் 'உடல்நலத்திற்கு ஏற்றவை, உற்சாகம் தருகிறது' என விளம்பரம் செய்து வருகின்றனர். '90% நீர் உண்டு, இயற்கையில் காணப்படும் சர்க்கரைகள் உண்டு' என்றெல்லாம் விளம்பரத்திற்கு அளவேயில்லை.

உண்மை என்னவென்றால், மென்பானங்கள், அவற்றில் அடங்கியுள்ள பொருட்களைப் பொறுத்தும், அவை நாம் உண்ணும் உணவில் உள்ள எந்தெந்தப் பொருட்களை இடம்பெயரச் செய்கின்றன என்பதைப் பொறுத்தும் நமது உடல் நலத்திற்கு அபாயங்களை விளைவிக்கக் கூடியவையாயிருக்கின்றன.




**உடல் பருமன்**

உடல் பருமன், நீரிழிவு, இதய-இரத்தநாள நோய்கள், போன்ற அபாயத்தைப் பெருக்குவதோடு, சமூக-உளவியல் சிக்கல்களையும் உண்டாக்குகின்றது. போதுமான உடற்பயிற்சியின்மை முதல், அதிக அளவு கலோரிகளைச் சேர்த்தல் மற்றும் மரபு சார்ந்த கோளாறுகள் வரை எண்ணற்ற காரணிகள், உடல் பருமனுக்கு காரணமாய் அமைகின்றன. மென்பானங்களை அருந்துவதாலும் உடல் பருமன் வெகுவாகக் கூடுகிறது.

**எலும்பு மென்பாடு**

பால் அல்லது பிற பால்பண்ணை உற்பத்திப் பானங்களை அருந்துவதற்கு பதில் மென்பானங்களை அருந்துபவர்கள் உட்கொள்ளும் கல்சியத்தின் அளவு குறைவாகவே இருக்கும். கல்சியம் குறைந்த உணவுப் பொருட்களை உட்கொண்டுவந்தால் எலும்புகள் எளிதில் முறியும் தன்மையுடைய எலும்பு மென்பாடு நோய்க்கு இட்டுச் சென்றுவிடும். பொஸ்பரஸ் அடங்கிய சோடா பானங்களை அளவுக்கு மீறி அருந்துவது இரத்தத்தில் கல்சியத்தின் அளவைக் குறைத்து விடும்.

உணவில் உட்கொள்ளப்படும் கல்சியம், பொஸ்பரசின் அளவு 1:1 என்ற அளவில் இருக்க வேண்டும். இந்த அளவு 1:2 என்று ஆகிவிடுமானால், இந்த அளவைச் சரிசெய்ய எலும்புகளிலுள்ள கல்சியம் எடுக்கப்பட்டு, எலும்புமென்பாடுநோய் உட்பட பல்வேறு கல்சியம் பற்றாக்குறைவுக் கோளாறுகளுக்கு வழிவகுக்கும். மென்பானங்களை அதிகளவில் அருந்தி வருவது பொஸ்பரஸ் உட்கொள்வதை அதிகரித்து, கல்சியம் பொஸ்பரஸ் அளவு சமநிலையற்றுவிடவும் செய்து விடும்.



பொஸ்பரஸ் அடங்கிய கோலா மென்பானங்களைக் குடிக்க விரும்பினால், அதற்கேற்றபடி நீங்கள் உட்கொள்ளும் கல்சியத்தின் அளவும் அதிகரிக்கவேண்டும். எடுத்துக்காட்டாக, நீங்கள் குடிக்கும் ஒவ்வொரு குளிர்பான போத்தலுக்கும் 12 அவுன்ஸ் பால் அருந்த வேண்டும், அல்லது குறைந்தது 500 மி.கிராம் கல்சியம் அடங்கிய கல்சியம் மாத்திரைகளை உட்கொள்ள வேண்டும்.

**இதயநோய்**

இன்சுலின் எதிர்ப்புத்தன்மை உடையவர்களுக்குச் சீனி அதிகம் சேர்த்த உணவுகள் இதயநோயை உண்டாக்கக்கூடும். வயது வந்தோரில் நான்கில் ஒரு பகுதியினருக்கு ட்ரைகிளிசரைட்களின் (Triglycerides) அளவு உயர்ந்தும் நன்மை செய்யும் HDL கொலஸ்ட்ரோலின் அளவு குறைந்தும் உள்ளது என மதிப்பிடப்பட்டுள்ளது. காபோஹைட்ரேட் (Carbohydrates) மிகுந்த உணவுகளை உண்ணும்போது அவர்களது ட்ரிகிளிசரைட் இன்சுலின் அளவுகள் உயர்கின்றன. இன்சுலின் எதிர்ப்புத் தன்மை உடையவர்கள் மென்பானங்களையும் மற்ற சீனி உணவுகளையும் குறைத்துக் கொள்வது நல்லது.

**சிறுநீரகக் கற்கள்**

சிறுநீரகக்கற்கள் உருவாவது மிக அதிக வலியுண்டாக்கும் கோளாறுகளில் ஒன்று. சிறுநீரகக்கற்கள் உருவாவதற்கும் மென்பானங்களைப் பருகுவதற்கும் தொடர்புண்டு என்று ஆய்வுகள் புலப்படுத்திய பிறகு, ஆய்வாளர்கள் இதற்கான தடுப்பு ஆய்வுகளில் ஈடுபட்டனர்.

சிறுநீரகக் கற்களால் பாதிக்கப்பட்ட 1009 பேர் நாளொன்றுக்கு குறைந்தது 5-1/3 அவுன்ஸ் சோடா அருந்தி வந்தவர்கள் என அந்த ஆய்வறிக்கை குறிப்பிட்டுள்ளது.

மென்பானங்களில் உள்ள பல்வேறு பழக்கத்திற்கு அடிமைப்படுத்தும் பொருட்கள் உள்ளன. பெரும்பாலான குளிர்பானங்களில் 'கா∴பீன்' எனப்படும் பழக்கத்திற்கு அடிமைப்படுத்தும் போதைப் பொருள் அடங்கியுள்ளது. மிகப்பிரபலமான ஏழு குளிர்பானங்களில் ஆறில் கா∴பீன் இடம்பெற்றுள்ளதற்கு அதன் பழக்கத்திற்கு அடிமைப்படுத்தும் தன்மையே எனலாம்.

கா∴பீன் அடங்கிய மென்பானம் ஒன்றை 12 அவுன்ஸ் அருந்துவது 20 மில்லி கிராம் கல்சியம் இழப்பை உண்டாக்குகிறது.

கா∴பீன் உணர்ச்சிவசப்படச் செய்யும் எரிச்சல் உணர்வையும் தூக்கமின்மையையும் உண்டாக்கும். இதயத்துடிப்பை அதிகரிக்கச் செய்யும்.

கா∴பீனில் உள்ள அடிமைப்படுத்தும் குணத்தால் இப்பானங்களை அருந்தும் மக்கள் அவற்றின் பிடியில் சிக்கிக்கொள்கிறார்கள். மென்பானங்களில் பயன்படுத்தப்படுகிற பல்வேறு அடிமைப்படுத்தும் பொருட்கள் அலர்ஜி மற்றும் எதிர்விளைவுகளை உண்டாக்குகின்றன. இப்பானங்களில் சேர்க்கப்படும் மஞ்சள் நிறப்பொருள் ஆஸ்த்மா, தோல் பத்து, வீக்கம், மூக்கு ஒழுகுதல் முதலியவற்றை உண்டாக்குகிறது.

சிவப்பு நிறம் கோச்சினீல், கேமீன் போன்ற பொருட்கள் உயிருக்கு ஆபத்தையும் எதிர் விளைவுகளையும் உண்டாக்கக்கூடியன. சக்கரீனின் இடத்தைப் பிடித்துள்ள ஏஸ்பர்டேம் (சீனிக்கு மாற்றுப்பொருள்) சிறுநீர் மண்டலம் மற்றும் சிறுநீர்ப்பைப் புற்றுநோய்களை உண்டாக்குகின்றது என்றும் ஆய்வுகள் மூலம் தெரிகிறது. ●


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




**பாட்டும் கூத்தும்**
**(சிறுவர்க்கான நாடகங்கள்)**
**- சிவசேகரம், பிரேமளா**

சிறுவர்கள் நடிக்கக்கூடிய அல்லது சிறுவர்களுக்காக நடித்துக் காண்பிக்கக்கூடிய 5 நாடகங்களை (மலைகளை அகற்றிய மூடக்கிழவன், அயலார் தீர்ப்பு, பரமார்த்த குருவும் சீடர்களும், கெகுளே ராசன் வழக்குத் தீர்த்த கதை, கலவரம்) தேசியக் கலை இலக்கியப் பேரவை ஊடாக பேராசிரியர் சி. சிவசேகரம் மற்றும் அவரது துணைவியார் திருமதி பிரேமளா சிவசேகரம் ஆகியோர் நூல் வடிவில் வெளியிட்டுள்ளனர்.

இலங்கையில் நிலவுகின்ற இன யுத்தத்திற்கும், சமூகச் சீரழிவுகளுக்கும் பிரதான காரணிகளுள் ஒன்றாக காலனித்துவவாதிகள் திணித்த கல்விமுறையையும் சுட்டிக் காட்டும் புத்திஜீவிகள் பலர் உளர். குறிப்பாக கடந்த மூன்று தசாப்த காலத்திற்கும் மேலாக சிறுவர்க்கான நல்ல அடிப்படைகளை கல்வித்துறையூடாக அரசோ, அறிஞர்களோ வழங்கவில்லை என்ற குற்றச்சாட்டும் உள்ளது.

அந்தவகையில் வெறும் நல்லுபதேசம் சார்ந்த அறிவுரைகளல்லாது சமூக வளர்ச்சிப் போக்கின் திசையில் நேர்மை, அஞ்சாமை, விடாமுயற்சி, சமூகப்பற்று என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்நாடக நூல் இயற்றப்பட்டுள்ளது சிறுவர்க்கும், சிறுவர்கள் மீது அக்கறை கொண்டவர்களுக்கும் ஒரு வரப்பிரசாதம் என்றே கூறவேண்டும்.

குறிப்பாக எமது நாட்டில் சிறுவர்கள் யுத்தமுனைகளில் பீரங்கித் தீனிகளாகவும் சமூக வாழ்வில் பாலியல் வக்கிரத்துக்கான இச்சைப் பெருளாகவும் துஷ்பிரயோகம் செய்யப்படும் சூழலில் இவ்வெளியீடு மிகவும் பயனுள்ளதாகும்.

**பக்கங்கள் : 100 விலை : 100.00**
**வெளியீடு : தேசிய கலை இலக்கியப் பேரவை.**

**பத்திரிகை இயலுக்கு ஓர் அறிமுகம்**
**- அருள்திரு ரூபன் மரியம்பிள்ளை**




யாழ்ப்பாண மறைமாவட்டத்தைச் சேர்ந்த ஒரு கத்தோலிக்க மத குருவானவரால் எழுதப்பட்ட இந்நூல் மிகவும் பெறுமதி வாய்ந்த விடயங்களைக் கொண்டு அழகியமுறையில் அச்சிடப்பட்டுள்ளது. பொதுவாக இலங்கையில் பத்திரிகைத் துறை சம்பந்தமான நூல்கள் தமிழில் விரிவாக வந்துள்ளமை மிகக்குறைவு. இத்துறை சார்ந்த பெரும்பாலான எழுத்தாளர்களின் கட்டுரைகள் நூலுருப் பெறாமல் பத்திரிகைப் பக்கங்களுடனேயே நின்று போகின்றன.

ஆனால் இன்று பத்திரிகைத் துறையில் ஈடுபாடு கொள்வோரின் தொகை நாளுக்கு நாள் அதிகரிப்பதக் காணமுடிகிறது. அவ்வாறு உந்தப்படுவோரில் அநேகர் பத்திரிகை சம்பந்தமான வரலாறு, அமைப்பு, நோக்கம், எதிர்காலம், நவீனத்துவப்பாணி என்பனபற்றி பிரக்ஞை அற்றவர்களாகவே இத்துறையில் பிரவேசிப்பது மட்டுமின்றி பத்திரிகா தர்மத்தை மீறிச் செயற்பட்டும் விடுகின்றனர்.

இத்தகையதொரு சூழ்நிலையில் அடிகளாரின் இந்நூல் பத்திரிகைத்துறை சம்பந்தமான சகல பரிமாணங்களையும் உள்ளடக்கிய ஒரு பெறுமதிமிக்க கைப் பொக்கிசமாக பத்திரிகையாளர்களுக்கு குறிப்பாக புகுமுகப் பத்திரிகையாளர்களுக்குத் திகழ்கின்றது. இன்றைய தகவல் தொழில்நுட்பப் புரட்சி யுகத்தில் தமிழ்உலகிற்கு இவ்வரவு ஒரு இனிமையான செய்தி.

**பக்கங்கள் : 230 விலை : 100.00**
**வெளியீடு : புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்,**
**இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**




**கொரில்லா (நாவல்)**
**- ஷோபாசக்தி**

அய்ரோப்பிய வீதிகளில் இன்று அகதிகளாய் அலைந்து திரியும் இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட ஈழத்தமிழர்கள் ஒவ்வொருவரின் வாழ்க்கையும் ஓர் இலக்கியந்தான். பேரினவாதக் கொடூரங்கள், இயக்க வாழ்க்கை அனுபவங்கள், இயக்கங்களில் ஏற்பட்ட அதிருப்திகளால் உடலும் உள்ளமும் சிதைந்து நிகழ்ந்த வெளியேற்றங்கள், புகலிடம் ஒன்றில் ஒண்டுவதற்காக தேச எல்லைகளினூடாக மேற்கொண்ட கொடும் பயணங்கள், புகலிடச் சூழலின் அகதிவாழ்வில் பிளவுண்ட மனநிலைகள்... இவற்றினூடாகத்தான் இன்றைய ஈழத்து இலக்கியப் புனைவுகள் பிறப்பெடுக்கின்றன. பிரான்சின் அகதிச் சூழலில் ஊத்தையர்களோடு ஊத்தையனாக விளிம்புநிலை வாழ்வொன்றை வரித்துக்கொண்ட ஷோபாசக்தியின் ஊடாக இந்த அனுபவங்கள் வெளிப்படும் போது அவை புதிய பரிமாணங்களைப் பெறுகின்றன. தீவுப் பகுதியின் வழக்கு மொழியில் எழுதப்பட்டுள்ள இப்பிரதி தமிழுக்குப் புதிது.

ஈழத்தமிழர் மத்தியில் தோன்றிய இயக்கங்களில் இளைஞர்கள் ஆரம்பத்தில் எவ்வளவு நம்பிக்கையோடும் அர்ப்பணிப்போடும் இணைந்துகொண்டார்கள் என்பதையும், அதனுள் புகுந்துகொண்ட அராஜகப்போக்கு உயிர்களை ஈவிரக்கமின்றி, தங்குதடங்கலின்றி கொன்று போட்டன என்பதனையும், புலம்பெயர் நாடுகளில் தஞ்சம்புகுந்தவர்கள் வாழ்வின் நாகரிகங்களை இழந்து கொலை வெறியுடன் இன்னும் உலாவருவதை நாவல் சுட்டுகின்றது. கடல்கடந்த பிரதேசங்களிலிருந்துதான் இவ்வாறான ஒரு நாவல் வரமுடியும்!




**பக்கங்கள்: 180**
**விலை: 150 (இலங்கை ரூபா 450)**
**வெளியீடு: விடியல் - பிரான்ஸ்.**

**- மாணிக்கவாசகன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினகரன்

තිනකරන් THINAKARAN

உங்கள் தினகரன் பல்வேறு பயன்மிக்க அம்சங்களைத்
தாங்கி வருகின்றது.
அதிகளவு செய்திகள், சமகால விடயதானங்கள்
அர்த்தபுஷ்டியான கட்டுரைகள்...
தமிழ் பேசும் மக்களின் தேசியக் குரலான தினகரன்
வாசகர்களுக்குப் புதிய தரிசனங்களைத் தருவதில்
தொடர்ந்தும் முன்னிலையில் நிற்கின்றது.
வாசிப்புக் கலாசாரத்தை வளர்த்தெடுப்போம்!
நிறைவுபெற்ற மனிதர்களாக வாழ்ந்திடுவோம்!
வாழ்வதற்காகவே வாசிப்போம்!




தினகரன் வாரமஞ்சரியின் இலவச இணைப்பிதழ்!
தொலைக்காட்சி கையேட்டுடன்
வயது, பால் வித்தியாசமின்றி உளமறிந்து சகலரையும்
அரவணைத்துச் செல்லும் ஒரு பல்சுவை விருந்து!

சகல லேக்ஹவுஸ் முகவர்களிடமும்,
புத்தகசாலையிலும் பெற்றுக் கொள்ளலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமுது

## சந்தா விபரம்
### உள்நாட்டு சந்தா
### (ரூபாவில்)

| | 1வருடம் | 6மாதம் | 3மாதம் |
|---|---|---|---|
| நேரடி விநியோகம் கொழும்பு நகருக்குள்) | 360.00 | 180.00 | 90.00 |
| தபால்மூல விநியோகம் | 552.00 | 276.00 | 138.00 |

### வெளிநாட்டு சந்தா
### (அமெரிக்க டொலரில்)

| நாடு | | 1வருடம் | 6மாதம் | 3மாதம் |
|---|---|---|---|---|
| இந்தியா | $ | 10.00 | 5.00 | 3.00 |
| பாகிஸ்தான் | $ | 10.00 | 5.00 | 3.00 |
| மாலைதீவு | $ | 10.00 | 5.00 | 3.00 |
| சிங்கப்பூர் | $ | 12.00 | 6.00 | 3.00 |
| மத்திய கிழக்கு | $ | 12.00 | 6.00 | 3.00 |
| ஹொங்கொங் | $ | 12.00 | 6.00 | 3.00 |
| இங்கிலாந்து | $ | 13.50 | 7.00 | 3.50 |
| அவுஸ்ரேலியா | $ | 13.50 | 7.00 | 3.50 |
| ரஷ்யா | $ | 13.50 | 7.00 | 3.50 |
| அமெரிக்கா | $ | 16.50 | 8.25 | 4.25 |
| கனடா | $ | 16.50 | 8.25 | 4.25 |
| மேற்கிந்தியா | $ | 16.50 | 8.25 | 4.25 |

**காசோலைகள், அனுப்பப்படவேண்டிய பெயர்:**
The Associated Newspapers of Ceylon Ltd.
முகவரி:

Marketing Manager,
The Associated Newspapers of Ceylon Ltd.
P.o. Box 1198,
Lake House,
Colombo, Sri Lanka.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org